


Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 211 விசுவாவசு வருடம், சித்திரை மாதம் 04 ஆம் திகதி வியாழக்கிழமை
(17.04.2025) ஹிஜ்ரி 1446, ஷவ்வால் - 18, 0115 886187- விலை ரூ.40 பக்கங்கள் 12










# நாட்டுக்காக போராடியதற்கா எனக்கு இந்த தண்டனை?

## தடுப்புக்காவலில் இருக்கும் பிள்ளையான் கண்ணீருடன் கம்மன்பிலவிடம் கேள்வி



### சந்திரகாந்தனை தேசத்தின் வீரராக கௌரவிக்க கோருகிறார் கம்மன்பில



நா.தினுஷா

"நான் விடுதலைப் புலிகளிடமிருந்து விலகி, இராணுவத்துடன் இணைந்து எனது உயிரையும் பணயம் வைத்து விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதற்காக சண்டையிட்டேன். அவ்வாறு நாட்டுக்காக போராடியதற்காகவா எனக்கு இவ்வாறு செய்கிறார்கள்?" என்று சிவநேசதுரை சந்திரகாந்தன் தன்னிடம் கண்ணீருடனும் பெரும் மனவேதனையுடனும் கேட்டதாக பிவிதுரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (16) இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார். » 02 பக்கம்



சித்திரைப் புத்தாண்டு சம்பிரதாயங்களுக்கு அமைவாக இடம்பெறும் தலையில் எண்ணெய் தேய்க்கும் பாரம்பரிய நிகழ்வு நேற்று (16) தெஹிவளை தேசிய மிருகக்காட்சிச்சாலையில் இடம்பெற்றது. இதற்கிணங்க இலங்கையின் மிகவும் வயதான விலங்கான 153 வயதுடைய ஆமை மற்றும் 'கடோல்' எனும் யானைக்கும் எண்ணெய் தேய்த்து நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## பிள்ளையான் - கம்மன்பில கூட்டணி அரசியல் சூழ்ச்சி



கூறுகிறார் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

''பிள்ளையானின் வழக்கில் சட்டத்தரணியாக உதய கம்மன்பில ஆஜராகியுள்ளார். கம்மன்பில வழக்கில் வாதாடுவதை நாட்டு மக்கள் கண்டதில்லை. ஆனால், பிள்ளையான் அவரின் சட்டத்தரணியாக தெரிவு செய்திருக்கிறார். » 02 பக்கம்

## மின் பாவனையில் வீழ்ச்சி: நுரைச்சோலையில் மின் பிறப்பாக்கி நிறுத்தம்

» 02பக்கம்

## இன்று முதல் விசேட போக்குவரத்து



300 இ.போ.ச. பஸ்கள்; 20 விசேட ரயில் சேவை

» 02பக்கம்

## தீர்வை வரி குறித்து அமெரிக்காவுடன் பேச்சு அவசியம்

### அவசர நிலைமையாகக் கருதி செயற்படுமாறு அரசிடம் ரணில் வலியுறுத்து

» 02பக்கம்

## ஸ்ரீ தலதா கண்காட்சி: கண்டியிலுள்ள 50 பாடசாலைகளுக்கு ஐந்து நாட்கள் விசேட விடுமுறை

கே.சுபானி

கண்டி ஸ்ரீ தலதா கண்காட்சியை முன்னிட்டு கண்டி நகரம் மற்றும் அதனை சுற்றியுள்ள 50 பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை வழங்குவது குறித்து கண்டி வலயக் கல்வி அலுவலகத்தால் விசேட அறிவிப்பொன்று விடுக்கப்பட்டுள்ளது. » 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



பிள்ளையான் போராளி என்று ஒருபுறம் சொல்லுற கம்மன்பில அவர் கண்ணீர் விட்டார் என்றும் மறுபுறம் சொல்லுறார்... போராளி கண்ணீர் விடலாமோ?

### உஷ்



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பந்தமாக பாதுகாப்புத் துறையில் பணியாற்றிய ஓய்வுபெற்ற அதிகாரிகள் இருவரை கைதுசெய்ய ஆலோசனை நடக்கிறதாம்.

இருந்தபோதும் அவர்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்தால் பாதுகாப்பு படைகளுக்குள் குழப்ப நிலைமை வரலாமென அச்சப்படுகிறதாம் அரச மேலிடம்.

ஏற்கனவே வாக்குறுதியளித்தபடி ஏப்ரல் 21ஆம் திகதிக்குள் முக்கிய பிரமுகர்களை கைதுசெய்யவும் வேண்டும். அதனால் அரசின் சிங்கள வாக்குகளுக்கு ஆபத்து வந்துவிடவும் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறதாம் ஆட்சி உயர்மட்டம்...




## வாகனங்களின் வேகத்தை கண்டறிய புதிய கெமரா

வீதிப் போக்குவரத்தை மீறுவோருக்கு எதிராக சட்டத்தை அமுலாக்கவும் நடவடிக்கை » 02 பக்கம்



## வாகனங்களின்...

வேகமாக வாகனம் செலுத்தும் சாரதிகளை கண்டறிய புதிய கெமராக்களைப் பயன்படுத்த பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். இந்த சாதனங்களில் இரட்டை கெமராக்கள் மற்றும் இரவு நேரத்திலும் தெளிவாகப் பார்வை யிடும் தொழில்நுட்பம் கொண்ட வசதிகள் இருக்கின்றன.

சாரதியின் புகைப்படம், வாகன எண் மற்றும் வேகத்தை நிகழ்நேரத்தில் படம்பிடிக்கும் திறன் கொண்டதாக இந்த சாதனங்கள் அமைந்துள்ளன. வீதிப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காகவும் விபத்துகளைக் குறைப்பதற்காகவும் பொலிஸாரினால் இந்த வேகக் கெமராக்கள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட இந்த சாதனங்கள், இரவில் மாத்திரம் 1.2 கிலோ மீற்றர் தூரத்திலிருந்து வாகனங்களைக் கண்டறிய பயன்படுத்தப்படுகின்றன. இதில் பதிவுசெய்யப்பட்ட காணொளிக் காட்சிகள் நீதிமன்றத்தில் ஆதாரமாகச் செயற்படும் என்பதுடன், இதனால் பொலிஸார் போக்குவரத்து மீறல்களுக்கான தெளிவான ஆதாரங்களை முன்வைக்க முடியும்.

நாடு முழுவதும் இந்த சாதனங்களில் 30ஐ பொலிஸார் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர். ஒவ்வொரு சாதனமும் 3.3 மில்லியன் ரூபா பெறுமதியானவை. கூடுதலாக 15 அலகுகள் உத்தரவிடப்பட்டுள்ளன.

இது 45 பொலிஸ் பிரிவுகளுக்குள் பயன்படுத்தப் படவுள்ளன. அதனூடாக போக்குவரத்து ஒழுங்கு விதிகளை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் பொலிஸார் எதிர்பார்த்துள்ளனர்.

## ஸ்ரீ தலதா கண்காட்சி...

அதற்கமைய, ஏப்ரல் 21ஆம் திகதிமுதல் 25ஆம் திகதிவரை ஐந்து நாட்களுக்கு மேற்குறிப்பிட்ட 50 பாடசாலைகளுக்கும் விசேட விடுமுறை வழங்குவதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண பிரதம மற்றும் கல்வி அமைச்சின் செயலாளருமான மாதுபானி பியசேன தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 18 முதல் 27 வரையான காலப்பகுதியில் விசேட தலதா கண்காட்சி இடம்பெறவுள்ளதன் காரணமாகவே இவ்வாறு பாடசாலைகள் மூடப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் கண்டி கல்வி வலயத்துக்குட்பட்ட குருதெனிய மகா வித்தியாலயம், வித்தியாலோக வித்தியாலயம் - தென்னகும்புர, தர்மராஜ வித்தியாலயம், டி.எஸ்.சேனாநாயக்க மகா வித்தியாலயம், மஹாமயா மகளிர் வித்தியாலயம், பெரவட்ஸ் வித்தியாலயம், அம்பிட்டிய சித்தார்த்த வித்தியாலயம் மற்றும் தம்பவெல கனிஷ்ட வித்தியாலயம் உள்ளிட்ட 50 பாடசாலைகளுக்கு இவ்வாறு எதிர்வரும் 21ஆம் திகதிமுதல் 27ஆம் திகதி வரையான ஐந்து நாட்களுக்கு விசேட விடுமுறை வழங்கப் படவுள்ளது.

## மின் பாவனையில் வீழ்ச்சி:...

நுரைச்சோலையிலுள்ள ஒரு மின் பிறப்பாக்கியை செயலிழக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது. ஏப்ரல் 11ஆம் திகதியிலிருந்து குறித்த மின் பிறப்பாக்கியை செயலிழக்கச் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் தம்மிக்க விமலரத்ன தெரிவித்துள்ளார்.

நெப்தாவை பயன்படுத்தும் களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையத்தின், மின் உற்பத்தி செயற்பாடுகள் கடந்த 12ஆம் திகதியிலிருந்து நிறுத்தப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அதற்கமைய, இதுவரையில் எரிபொருளினூடாக மின்னுற்பத்தி செய்யும் மின்னுற்பத்தி நிலையங்களின் செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டுள்ளதுடன், நீர்மின்னுற்பத்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்தி நிலையங்களினூடாக மாத்திரம் மின்னுற்பத்தி செய்யப்படுகிறது. இதேவேளை, பண்டிகை காலத்தில் மின் விநியோகம் மற்றும் கேள்விக்கேற்ப சமநிலையை முகாமைத்துவம் செய்வதற்காக மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

ஏப்ரல் விடுமுறை காலத்தில் மின்னுற்பத்திக்கான கேள்வி மற்றும் செயற்படுத்தப்படும் புதுப்பிக்கத்தக்க மின்சக்தி விநியோகம் தொடர்பில் மேற்கொண்ட நீண்ட பரிசீலனையின் பின்னர் அந்த காலப்பகுதியில் மின் விநியோகத்தை முகாமைத்துவம் செய்ய வேண்டும் என்றும் மின்சார சபையின் அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

மின்சார உற்பத்தியும் நுகர்வும் எல்லா நேரங்களிலும் சமமாக இருக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ள மின்சார சபை, மின்சாரம் அதிகமாகப் பயன்படுத்தப்படாதபோது மின்சார உற்பத்தியையும் குறைக்க வேண்டும் என்று கூறியுள்ளது.

ஞாயிற்றுக்கிழமைகளிலும் தேசிய விடுமுறை நாட்களிலும் கூட மின்சாரத் தேவை குறைவதால், அந்த நாட்களிலும் மின்சார விநியோகம் குறைக்கப்பட வேண்டும் என்றும் மின்சார சபையின் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி, ஏப்ரல் 10ஆம் திகதிமுதல், நாட்டின் மின்சார தேவை மிகக் குறைந்த மட்டத்தில் உள்ளது. மேலும் 100 கிலோவோட்டுக்கு மேல் உள்ள சகல கூரை சூரிய மின் களங்களின் விநியோகத்தையும் தற்காலிகமாக துண்டிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## இன்று முதல்...

தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு தொழிலிடங்களுக்குச் செல்லும் பணிகள் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில், ஊர்களுக்குச் சென்ற மக்கள் மீண்டும் நகரங்களுக்கு வருவதற்காக விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான மேலதிகமாக 300 பஸ்கள் நேற்றிலிருந்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளதுடன், மேலதிகமாக 20 ரயில் போக்குவரத்து சேவையும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக போக்குவரத்து அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கிராமங்களுக்குச் சென்ற மக்கள் மீண்டும் நகரங்களுக்கு வருவதற்காக நாளையிலிருந்து (18), 19, 20ஆம் திகதிகளில் விசேட ரயில் போக்குவரத்து சேவையை வழங்க எதிர்பார்த்துள்ளதாக ரயில் பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார். ஏனைய சகல சாதாரண ரயில் சேவைகளும் வழமை போல் இயங்கும் என்பதுடன் இதற்கு மேல திகமாக விசேட ரயில் போக்குவரத்தும் இடம் பெறும். அத்துடன் சுற்றுலாத்துறைக்காக அறிமுகப் படுத்தப்படும் ரயிலும் வழமைபோல் செயற்படும் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, தனியார் பஸ் சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஊர்களுக்குச் சென்ற மக்கள் மீண்டும் நகரங்களுக்கு திரும்புவதற்காக மேலதிக பஸ் சேவை வழங்க வேண்டும் என்று போக்குவரத்து ஆணைக்குழு கோரினால் தேவையான போக்குவரத்து வசதிகளை பெற்றுக்கொடுக்கத் தயாராக இருப்பதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

# தற்காலிகத் தோல்விகளுக்காக நாம் நிரந்தர வெற்றியை இழக்க முடியாது

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

தமிழினப் படுகொலைக்கான நீதியைக் கோரிப் பெற்று, எமது அரசியல் இலக்கை அடையும் வரை தொடர்ந்து போராட வேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ள நாம், காலச்சூழலும் - களச்சூழலும் தந்திருக்கும் தற்காலிக பின்னடைவுகளை காரணம்காட்டி நிரந்தர வெற்றியை இழக்கும் நிலைக்கு வந்துவிடக்கூடாது. அரசியற் களத்தின் உள்ளும் புறமும் எத்தனை பெரும் சவால்கள் எழுந்தாலும் இலக்கு நோக்கிய எம் பாதையும் பயணமும் அறம்சார்ந்ததாக அமையுமானால் அடையவேண்டிய அரசியல் உரித்துகளை அடைந்தே தீருவோம் - என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.



நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலை முன்னிட்டு, கரைச்சி பிரதேச சபையின் உதயநகர் வட்டார வேட்பாளர்களை ஆதரித்து நேற்று முன்தினம் (15) நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட வாலிபர் முன்னணித் தலைவரும் வேட்பாளருமான குணபாலசிங்கம் குணராஜ் தலைமையில் கட்சியின் மூத்த உறுப்பினரும் வேட்பாளருமான கணேசு துரைலிங்கம் உள்ளிட்ட உதயநகர் வட்டார வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற மேற்படி கூட்டத்தில்,பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைச் செயலாளர் வீரவாகு விஜயகுமார், கரைச்சி பிரதேச சபையின் மேனாள் தவிசாளரும் வேட்பாளருமான அருணாசலம் வேழமாலிகிதன், வேட்பாளர்களான சாலினி சாருகன், இராசதுரை ஜெயசுதர்சன், யோகேஸ்வரன் நிரோயன் மற்றும் கட்சியின் வட்டாரக்கிளை உறுப்பினர் தர்மராசா சிறீதரன் ஆகியோர் உரையாற்றியிருந்ததுடன், வட்டாரக்கிளை உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தீர்வை வரி குறித்து...

''அமெரிக்காவினால் விதிக்கப்பட்டுள்ள தீர்வை வரி குறித்து விதிக்கப்பட்டுள்ள மூன்று மாத தடை நீங்கும் வரை காத்திருக்காமல், இதனை அவசர நிலைமையாக கருதி உடனடியாக அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் விளக்கமளித்து நேற்று (16) விசேட அறிவிப்பொன்றை விடுத்தே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது,

''அமெரிக்க ஜனாதிபதி தீர்வை வரி அமுலாக்கத்தை மூன்று மாதங்களுக்கு ஒத்திவைத்துள்ளார். இருந்தபோதும் 03 மாத நிறைவில் இந்த தீர்வை வரி அமுலாக்கப்படும். ஜனாதிபதி ட்ரம்ப் அவரது தேர்தல் கொள்கை பிரகடனத்திலும் இதனைக் குறிப்பிட்டிருந்தார். எமக்கு விதிக்கப்பட்டுள்ள தீர்வை வரியை குறைத்து, 25- 30 தீர்வை வரியை நாம் செலுத்தினாலும் அது எமக்கு பெரும் சிக்கலாக அமையும்.

எமது வர்த்தகங்களின் இலாபத்தின் அடிப்படையில் நோக்கினால் இவ்வாறான தீர்வை வரியினூடாக இலாபத்தை உழைக்க முடியாது. அது நட்டத்தையே ஏற்படுத்தும். தீர்வை வரி அதிகரிக்க அதிகரிக்க நுகர்வோரின் எண்ணிக்கையும் வீழ்ச்சியடையும். இந்தப் பிரச்சினையை எதிர்கொள்வதென்றால் இந்த மூன்று மாதங்களில் சகல நாடுகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி சீனாவின் பிரச்சினையை எவ்வாறு எதிர்கொள்ளப்போகிறோம் என்பதற்கு விளக்கமளிக்க வேண்டும்.

இதனை நிறுத்த முடியாது. இதன் தாக்கத்தால் தொழில் வாய்ப்புகள் இல்லாமல் போகக்கூடும். அதுமட்டுமல்லாமல், எமது பொருளாதாரத்துக்கும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். எமது மீள்செலுத்துகை பிரிவுக்கு பெரும் சுமை ஏற்படும். நாம் செலுத்த வேண்டியுள்ள நிதி மற்றும் கிடைக்கவுள்ள நிதிக்கும் இடையிலான இடைவெளி அதிகரிக்கும். வருவாய் குறைவடைந்து கடன் அதிகரிக்கும். 300 பில்லியன் டொலரை மீள செலுத்த வேண்டியுள்ளது. இதற்காக எங்கிருந்து நிதி திரட்டினாலும் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடையும்.

இந்த நெருக்கடியின் காரணமாக ரூபாவின் பெறுமதி தற்போதே வீழ்ச்சியை சந்தித்துள்ளது. 2028ஆம் ஆண்டு மீள செலுத்த வேண்டியுள்ள கடன் இலக்கின் அடிப்படையில் நாம் தற்போதிலிருந்தே செயலாற்ற வேண்டும். கடந்த வருடத்தில் 05 சதவீத வருமான வளர்ச்சியை ஏற்படுத்திக்கொண்டுள்ளோம். இருந்தபோதும் தற்போதுள்ள இந்த நெருக்கடியால் வருமான வளர்ச்சியும் வீழ்ச்சியை சந்திக்கலாம். இதனூடாக இலங்கைக்கு பல்வேறு பிரச்சினைகள் தோற்றம் பெறும். அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதுடன் தேசிய மட்டத்தில் இதனை எதிர்கொள்வது என்பது குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். இதனையொரு நெருக்கடியாக கருதி இந்த சிக்கலுக்கான அரசாங்கத்தின் தீர்வை நாட்டுக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் வேறு பிரச்சினைகள் தோற்றம் பெறக்கூடும்'' என்றார்.

## பிள்ளையான் - கம்மன்பில...

பிள்ளையானின் வழக்கில் உதய கம்மன்பில ஆஜராவது வெறுமனே அரசியல் பழிவாங்கல் இல்லை. இதுவொரு அரசியல் சூழ்ச்சியாகும்'' என்று சுகாதார மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

தலைக்கு எண்ணெய் வைக்கும் அரச விழா அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவின் பங்கேற்புடன் கண்டி ஸ்ரீ மஹா நாத விகாரையில் நேற்று(16) இடம்பெற்றது. அதன் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

''நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை மக்கள் உணர ஆரம்பித்துள்ளனர். பொருளாதாரத்தில் ஓரளவு ஸ்திரத்தன்மை ஏற்பட்டுள்ளது. அதற்காக பொருளாதாரம் முழுமையடைந்துள்ளது என்று என்னால் கூற முடியாது. இருந்தபோதும் அரசாங்கம் என்ற அடிப்படையில் அதுதொடர்பில் தொடர்ந்து கவனம் செலுத்தி மக்களின் வாழ்வாதாரத்தில் தாக்கம் செலுத்தும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொடுக்க நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறோம். தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சினைகளுக்கு பதில் கொடுத்துள்ளோம். பொருளாதார நிவாரணங்களை பெற்றுக்கொடுத்துள்ளோம். அரச பணியாளர்களுக்கும் தனியார் துறையினருக்கும் சம்பள அதிகரிப்பை பெற்றுக்கொடுத்துள்ளோம். இவ்வாறான மாற்றங்களே மக்களின் வாழ்வாதாரத்தில் தாக்கம் செலுத்தியுள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு பெரும் ஆதரவு கிடைக்குமென நாங்கள் அதிகபட்சம் நம்புகிறோம். பிரதேச சபை உறுப்பினர் ஒருவரை நியமித்துக்கொள்வதற்காக இந்தத் தேர்தலில் நாங்கள் போட்டியிடவில்லை. நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக பெரும் அபிவிருத்தி கொள்கையை ஜனாதிபதி முன்வைத்திருக்கிறார். அவற்றை நடைமுறைப் படுத்துவதற்கு அரச நிறுவனங்களின் அதிகாரம் தேவை. அதனை புரிந்து மக்கள் அதிகாரத்தை பெற்றுக்கொடுப்பார்கள். அதில் சந்தேகம் இல்லை.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு விரைந்து செயற்பட்டு வருகிறது. குற்றப் புலனாய்வுத் திணைக்களமும் அதன் விசாரணை நடவடிக்கைகளை விரைவுபடுத்தியுள்ளது. சட்ட மா அதிபர் திணைக்களத்தினூடாக மேன்முறையீடும் செய்யப்பட்டுள்ளது. சட்டரீதியாக மேற்கொள்ள வேண்டிய விடயங்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன. இலஞ்ச, ஊழல், கொலை, அரசியல் தவறுகள் எந்தளவுக்கு பாரதூரமானவை என்றால், எந்தளவு வலையமைப்பாக செயற்படுகின்றது என்பதை சிந்திக்க வேண்டும். தற்போது பிள்ளையானின் சட்டத்தரணி உதய கம்மன்பில. கம்மன்பில வழக்கில் வாதாடுவதை நாட்டு மக்கள் கண்டதில்லை. ஆனால், பிள்ளையான் அவரின் சட்டத்தரணியாக தெரிவு செய்திருக்கிறார். பிள்ளையானின் வழக்கை கம்மன்பில தெரிவு செய்திருக்கிறார். இது வெறுமனே அரசியல் பழிவாங்கல் இல்லை. இது அரசியல் சூழ்ச்சி. அந்த சூழ்ச்சியின் நூல்பந்தே இப்போது வெளிபட்டு வருகிறது'' என்றார்.

## நாட்டுக்காக...

சரியென்றால், விடுதலைப் புலிகளிடமிருந்து நாட்டை மீட்க அவர் வழங்கிய தீர்மானமிக்க பங்களிப்பின் காரணமாக பிள்ளையானை தேசத்தின் வீரராக போற்ற வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

''நான் பிள்ளையானை அரசியல்வாதியாக சந்திக்கவில்லை. சட்டத்தரணியாகவே அவரை சந்தித்திருந்தேன். சட்டத்துறை தொழிலையும் அரசியல் வாழ்க்கையையும் நான் வெவ்வேறாகவே பார்க்கிறேன். அதன் காரணமாகவே குற்றப்புலனாய்வுப் பிரிவுக்குச் செல்வதற்கு முன்னரும் அங்கு சென்று வந்ததன் பின்னரும் ஊடகங்களுக்கு பேசவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போதைய அரசாங்கத்தின் கீழ் பொலிஸ் பிரிவு பாரதூரமாக அரசியல்மயமாக்கப்பட்டுள்ளது என்பதற்கு சிறந்த முன்னுதாரணமாக நான் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்குள் இருக்கும்போதே நான் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்குச் சென்றுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன.

அதுமாத்திரமின்றி, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த உப பொலிஸ் பரிசோதகர் ஏ.எல்.டி.எம்.பாஹிம் அவரது பேஸ்புக் கணக்கில் எனது விஜயம் தொடர்பிலும் அதுதொடர்பில் அவரின் நிலைப்பாட்டையும் குறிப்பிட்டுள்ளார். அதேபோன்று பிரதிப் பொலிஸ் மா அதிபரொருவர் தெரிவு செய்யப்பட்ட சமூக வலைத்தள ஊடகர்கள் சிலருக்கு குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் விசாரணைகள் தொடர்பான தகவல்களை பணத்துக்கு விற்பனை செய்வதாக எங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது. இதுதொடர்பில் உடனடியாக விசாரணைகளை முன்னெடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

பிள்ளையானிடம் பொலிஸார் விசாரணைகள் முன்னெடுத்துவரும் நிலையில் பிள்ளையான் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு வாக்குமூலம் வழங்கியுள்ளார் என்று பல்வேறு தகவல்கள் சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டு வருகின்றன.

பொலிஸாரால் முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு விசாரணைகள் தொடர்பான தகவல்களையும் முழு நாடும் அறிந்து கொள்ள வேண்டுமென பொலிஸார் கருதுகிறார்கள் என்றால் அந்தத் தகவல்களை முழுமையாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஒரே நேரத்தில் சகல ஊடகத்துறைக்கும் பெற்றுக்கொடுக்கவேண்டும். ஆனால், தெரிவு செய்யப்பட்ட ஊடகங்களுக்கு மாத்திரம் தகவல்களை விற்பனை செய்த சம்பவம் இதற்கு முன்னர் இடம்பெறவில்லை. இந்த அரசாங்கத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் நாட்டின் சட்டத்தை மீறி கடந்த 08ஆம் திகதி கிழக்கு மாகாணத்தில் முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனை கைதுசெய்திருக்கிறார்கள். பயங்கரவாத தடைச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கமைய அவ்வாறு கைதுசெய்வதென்றால் கைதுசெய்வதற்கான காரணத்தை எழுத்துபூர்வமாக கைதுசெய்யப் படும் நபரின் உறவினர்களுக்கு ஒப்படைத்திருக்க வேண்டும். ஆனால் அதனை செய்யவில்லை.

அதேபோல் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் சட்டத்தரணியை சந்திப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதனையும் செய்யவில்லை. கைதி தனது குடும்ப உறவினர்களுடன் பேசுவதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும். அதனையும் செய்யவில்லை. பிள்ளையானின் சட்டத்தரணி எனது நண்பர். கடந்த ஏப்ரல் 09 ஆம் திகதி குறித்த சட்டத்தரணியின் கனிஷ்ட சட்டத்தரணியொருவர் பிள்ளையானை சந்திக்க குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்குச் சென்றபோது, அவர் பிள்ளையானை சந்திப்பதற்கான வாய்ப்பு நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் எனது நண்பர் என்னிடம் கூறியவுடன், பிள்ளையானின் குடும்பத்தாரை என்னை சந்திக்குமாறு அவருக்கு அறிவித்திருந்தேன். அதற்கமைய, ஏப்ரல் 12ஆம் திகதி பிள்ளையானின் குடும்பத்தாரை சந்தித்தேன். அவரை சந்தித்து தகவல்களை பெற்றுக்கொண்டேன். பிள்ளையானுக்கு உறவினர்களையோ சட்டத்தரணியோ சந்தித்து பேசுவதற்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கமைய இது தவறாகும். பயங்கரவாத தடைச்சட்டத்தில் 10 (அ) (1) உறுப்புரைக்கமைய சட்டத்தரணியை சந்திக்க வாய்ப்பளிக்கப்படவேண்டும்.

சட்டத்தில் 10 (அ) (2) ஆவது உறுப்புரையின் பிரகாரம் உறவினர்களுடன் பேசுவதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும். குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு தொலைபேசி அழைப்பெடுத்து, மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் அவருக்கு விளக்கமளித்து “தற்போதிலிருந்து பிள்ளையானின் சட்டத்தரணியான நான் பொறுப்பேற்கிறேன். அதனால், சட்டத்தின் கீழ் எனது உரிமையை தற்போது செயற்படுத்த வேண்டும். அதற்கு அனுமதியளிக்கிறீர்களா? என்று வினவினேன். அதற்கு அவர், “எழுத்துபூர்வமாக கோரிக்கை முன்வையுங்கள். உயர் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு அறிவிப்பதாக” தெரிவித்தார். அதற்கமைய, எழுத்துபூர்வமான கோரிக்கையை பணிப்பாளருக்கு அனுப்பியிருந்தேன். மூன்று மணி நேரத்தில் மீண்டும் என்னை அழைத்து ஏப்ரல் 13 ஆம் திகதி காலை 10 மணிக்கு பிள்ளையானை சந்திக்க அனுமதி வழங்கியிருந்தார். அதற்கமைய, பிள்ளையானுடன் 30 நிமிடங்கள் கலந்துரையாடியிருந்தேன். அதன்போது பொலிஸ் அதிகாரிகள் நால்வர் வரையில் எங்களின் பேச்சுவார்த்தையில் பங்குபற்றியிருந்தார்கள். சட்டத்தரணியொருவர் அவரின் கட்சிக்காரருடன் பேச்சுவார்த்தை நடத்துவது இரகசியத்தன்மை கொண்டதாகும். வெளித்தரப்பினர் அவ்விடத்தில் இருக்கக்கூடாது. தனியாக பேசுவதற்கு இடமளிக்க வேண்டும் என்று நான் கூறியபோதும் பொலிஸ் அதிகாரிகள் சாதாரணமாக கைதியொருவருக்கு கிடைக்க வேண்டிய சட்ட வாய்ப்பையும் நிராகரித்து விட்டார்கள்.

இந்த சந்திப்பின்போது, பிள்ளையான் கண்களிலிருந்து கண்ணீர் சிந்தியது. “நான் விடுதலைப் புலிகளிடமிருந்து விலகி, இராணுவத்துடன் இணைந்து எனது உயிரையும் பணயம் வைத்து விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதற்காக சண்டையிட்டேன். அன்று விடுதலைப் புலிகளின் தரப்பில் இருந்தவர்களில் சிலர் இன்று பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள். சிலர் பாரியளவு வர்த்தகர்களாக இருக்கிறார்கள். மேலும் சிலர் என்.ஜி.ஓ. தலைவர்களாக இருக்கிறார்கள். இன்னும் சிலர் வெளிநாடுகளில் இருந்துகொண்டு இன்றும் அரசாங்கத்துக்கு எதிரான எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகிறார்கள்.

இவர்களுள் எவருக்கும் அரசாங்கத்தால் எந்த பிரச்சினையும் இல்லை. என்னை 15 வருடங்கள் தடுப்புக்காவல் உத்தரவு பிறப்பித்து தடுப்புக்காவலில் வைத்து வழக்கை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல சாட்சி இல்லை என்று தெரிவித்து நீதிமன்றமே தீர்மானித்து வழக்கை மீளப்பெற்றார்கள். தற்போது மீண்டும் தடுப்புக்காவல் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இன்னும் எத்தனை ஆண்டுகள் இவ்வாறு இருக்க வேண்டும் என்று தெரியவில்லை. விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கு நாட்டுக்காக உயிரை பணயம் வைத்து சண்டையிட்டு போராடியதற்காகவா எனக்கு இவ்வாறு செய்கிறார்கள்?” மிக மனவேதனையுடன் என்னிடம் கேட்டார். சமூக ஊடகங்களில் பதிவிடும் குழந்தைகளுக்கு பிள்ளையான் என்பவர் யார் என்பது தெரியாது. சரியென்றால் விடுதலைப் புலிகளிடமிருந்து நாட்டை மீட்க அவர் வழங்கிய தீர்மானமிக்க பங்களிப்பின் காரணமாக பிள்ளையானை தேசத்தின் வீரராக போற்ற வேண்டும். கருணா மற்றும் பிள்ளையான் விடுதலைப் புலிகளிடமிருந்து நீங்கி விடுதலைப் புலிகளுக்கு எதிராக சண்டையிடுவதற்கு தீர்மானித்தமையே விடுதலைப் புலிகளின் முடிவுக்கான ஆரம்பமாகும்.

14ஆவது வயதில் விடுதலைப் புலிகள் அமைப்பினால் பலவந்தமாக இணைத்துக் கொண்டு போர் பயிற்சிகள் வழங்கப்பட்ட சிறுவர் படைவீரரொருவரே பிள்ளையான். விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சிறுவர் படைவீரர்கள் இருந்தார்கள் என்பதற்கு உயிருடன் இருக்கும் சிறந்த ஆதாரம் பிள்ளையான். விடுதலைப் புலிகள் பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டுவருவதில் பிள்ளையானின் பங்களிப்பு எந்தளவு முக்கியத்துவமானது என்பதை தற்போதைய தலைமுறையினருக்கு சொல்லிக்கொடுக்க வேண்டும்.

அதேபோன்று விடுதலைப் புலிகளில் நீங்கியது மட்டுமல்லாமல் பயங்கரவாதத்துக்கு எதிராக தாய் நாட்டுக்காக போராடிய தேசப்பற்றுள்ளவரே பிள்ளையான் என்பதை சகலரும் நினைவில் கொள்ளவேண்டும். அவரின் இந்த செயற்பாட்டினால் பிள்ளையான் மீது தமிழ்ப் பிரிவினைவாதிகள் வைராக்கியத்துடனேயே இருக்கிறார்கள். பிள்ளையானை அழிப்பதே தமிழ் பிரிவினைவாதிகளின் முக்கிய இலக்காகும். இதனடிப்படையில், 2006ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சுப்ரமணியம் ரவிந்திரநாத்தை காணாமலாக்கிய குற்றச்சாட்டில் தற்போது கைதுசெய்துள்ளார்கள்.

2006ஆம் ஆண்டு காணாமல் போனவருக்கு 2025ஆம் ஆண்டு குற்றச்சாட்டு முன்வைக்கிறார்கள். அவ்வாறெனில், கடந்த 18 வருடங்களில் யாரும் பிள்ளையானுக்கு எதிராக இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருக்கவில்லை. தற்போதைய வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திராவின் உறவினர் ஒருவரினால் 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு வழங்கிய வாக்குமூலத்தினூடாகவே பிள்ளையானை கைதுசெய்திருக்கிறார்கள். குறித்த பேராசிரியர் காணாமல்போன தினத்தில் பிள்ளையான் எங்கிருந்தார் என்பது அவருக்கே நினைவில் இருக்கிறது. அந்த காலப்பகுதியில் மாதுறு ஓயாவிலிருந்த இராணுவ முகாமிலேயே தான் இருந்ததாகவும் அவர் கூறியதாக கம்மன்பில மேலும் குறிப்பிட்டார்.

## தினசரி பலாபலன்கள்

**விசுவாவசு வருடம் சித்திரை மாதம் 04 ஆம் நாள் வியாழக்கிழமை**

**மேஷம்** உடல் நோய்களால் சற்றுச் சிரமப்படுவீர்கள். தனம்-பொருள் இழப்புகளை இன்று சந்திக்க வேண்டிவரும்.

**ரிஷபம்** சமூகத்திலும் தொழிலிடத்திலும் கௌரவமாக நடத்தப்படுவீர்கள். உங்கள் துணைவியிடமிருந்து ஆறுதல் கிடைக்கும்.

**மிதுனம்** உங்கள் பகைவர்கள் விநயமாக நடந்து கொள்வார்கள். கேட்ட இடத்திலிருந்து பணம் இன்று கிடைக்கும்.

**கடகம்** போட்டிப் பந்தயங்களில் வெற்றி வாகை சூடி சாதனை படைப்பீர்கள். குழந்தைகளால் மகிழ்ச்சி.

**சிம்மம்** தொலை நோக்கு சிந்தையோடு இன்று வேலைகளை ஆரம்பிப் பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூத்தாடும்.

**கன்னி** பண வருவாய்க்கு குறை இருக்காது. தைரியத்தை விட மாட்டீர்கள். விடா முயற்சி வெற்றியைத் தரும்.

**துலாம்** குடும்பத்துக்கான செலவுகளைச் செய்யவேண்டிய கட்டாயம். ஆனாலும் சாமாளித்துக்கொள் வீர்கள்.

**விருச்சிகம்** விருந்துபசாரங்களில் அல்லது குடும்ப நிகழ்வுகளில் கலந்து கொள்வீர்கள். பரிசுப் பொருட்கள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**தனுசு** அதிக கோபத்தாலும் ஆணவத் தாலும் புத்தி இழந்துவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். வீண் பயணம் வேண்டாம்.

**மகரம்** பொருள் தன வரவால் மகிழ்ச்சி உண்டு. நினைத்த காரியத்தில் வெற்றியும் இலாபமும் உண்டு.

**கும்பம்** தொழில் முயற்சிகளில் வெற்றி கிட்டும். உங்கள் நண்பர்கள் மூலம் நீங்கள் கேட்ட உதவிகள் கிடைக்கும்.

**மீனம்** வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சினை களால் சிரமங்கள் தோன்றும். கடின உழைப்பு உடல் அசதியைத் தரும்.

| | |
|---|---|
| திதி: | சதுர்த்தி பி.ப.3.23 வரை பின் பஞ்சமி |
| நட்சத்திரம்: | கேட்டை |
| பிறை: | தேய்பிறை |
| யோகம்: | மரண யோகம் முழுவதும் |
| வார சூலை: | தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது. |
| நல்ல நேரம்: | காலை- 9.01 – 12.01 மணி வரைமாலை- 4.01 – 6.01 மணி வரை |
| ராகு காலம்: | 1.31 – 3.01 மணி வரை |
| எமகண்டம்: | 6.01- 7.31 மணி வரை |
| குளிகை : | 9.01- 10.31 மணி வரை |

சந்திராஷ்டமம்:மேஷ ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்.

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள் இன்று முழுவதும்**

அஸ்வினி, பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# இயலாமையுடைய சிறுவர்களைக் கையாள்வது தொடர்பில் கல்லூரிகளில் கற்றுவரும் ஆசிரியர்களுக்கு ஆறுமாதப் பயிற்சி

## மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் முன்மொழிவு





இயலாமையுடைய சிறுவர்களைக் கையாள்வது தொடர்பில் கல்வியியல் கல்லூரியில் கற்றுவரும் ஆசிரியர்களுக்கு ஆறுமாதப் பயிற்சியை வழங்கு வதற்கு முன்மொழியப்பட்டிருப்பதாக மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் கல்வி அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன்மூலம் இயலாமையுடைய சிறுவர்களை சாதாரண சிறுவர்களுக்கு சமமாக நடத்துவதற்குத் தேவையான அறிவு மற்றும் மனப்பான்மைகளை ஆசிரியர்களுக்கு வழங்கமுடியுமென நம்புவதாகவும் அதிகாரிகள் கருத்து தெரிவித்தனர்.

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தலைமையில் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு கடந்த 08ஆம் திகதி பாராளுமன்றத்தில் கூடியபோதே இந்த விடயங்கள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது. இக்கூட்டத்தில் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரதியமைச்சர் நாமல் சுதர்ஷனவும் கலந்துகொண்டார்.

இங்கு கருத்துத் தெரிவித்த அதிகாரிகள், இலங்கையில் ஆட்டிசத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகக் குறிப்பிட்டனர். இது தொடர்பான கணக்கெடுப் புக்கமைய 9,000 க்கும் அதிகமானவர்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டிருப்பது அடையாளம் காணப்பட்டிருப்பதாக அதிகாரிகள் குழுவில் தெரிவித்தனர். எனவே, சரியான அடையாளம் காணப்படல்கள் இல்லாமையாலேயே சிறுவர்கள் இயலாமையுடைய நபர்களாக மாறவேண்டியிருப்பதாகக் குழுத் தலைவர் சுட்டிக்காட்டினார்.

முன்பிள்ளைப் பருவத்தில் ஆட்டிசம் உடைய சிறுவர்களை அடையாளம் காணவேண்டுமென்றும் அவ்வாறு அடையாளம் கண்டுகொண்டால் மாத்திரமே அவர்களை ஆரோக்கியம் மிக்க சிறுவர்களாக வளர்த்தெடுக்க முடியுமென்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். அதாவது, குழந்தை பிறந்தது முதல் முன்பிள்ளைப் பருவம் வரையான குடும்ப சுகாதார அதிகாரியின் மேற்பார்வைக் காலத்தில் குழந்தைகள் மீது கவனஞ்செலுத்துவதற்கான பொறிமுறை உரிய மட்டத்தில் செயற்படுத்தப்பட வேண்டுமென்றும் குழுத் தலைவர் வலியுறுத்தினார்.

ஆட்டிசம் உள்ள குழந்தைகளுக்காக அடை யாளம் காணப்பட்ட பகுதிகளில் மூன்று மாதிரி பகல்நேர பராமரிப்பு மையங்களை நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தலைவர் கூறினார். இதற்காகத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஒரு குழுவை நியமிக்கவும் முன் மொழியப்பட்டது. இதன் மூலம் அந்தக் குழந்தை கள் பொருத்தமான வளர்ச்சி நிலைகளுக்கு வழி நடத்தப்படுவார்கள் என்றும் நம்பப்படுகிறது.

மேலும், ஆபத்து மற்றும் பொருளாதாரப் பாதிப்புகள் நிறைந்த நிலையில் காணப் படும் சிறுவர் இல்லங்கள் மற்றும் சிறுவர் நிலையங்களில் உள்ள சிறுவர்களை உயிரியல் ரீதியான குடும்பங்களிலிருந்து பிரிப்பதற்குப் பதிலாக, குடும்பத்துக்குள் பராமரிப்பை வழங்குவதன் அவசியத்தையும் குழு விரிவாகக் கலந்துரையாடியது. நீதிமன்ற செயற்பாடு களுக்குப் பின்னர் சிறுவர் நன்னடத்தை நிலையங்களுக்கு சிறுவர்கள் அனுப்பப்படுவதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்கள அதிகாரிகள் குழுவில் தெரிவித்தனர். இவ்வாறு சிறுவர்கள் நிறுவனமயமாக்கப்படுவதை விட குடும்பத்துக்குள் பராமரிக்கப்படுவதன் முக்கியத்துவம் குறித்து நீதிபதிகளைத் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பெருந்தோட்டத் துறையில் உள்ள சிறுவர்கள் சட்டவிரோத மது மற்றும் போதைப்பொருள் பாவனையில் ஈடுபடும் போக்குக் குறித்தும் குழுவில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. சிறுவர்கள், குழந்தைகள் பாபுல் மற்றும் பான் பராக் போன்ற உடலுக்கு தீங்கு விளைவிக்கும் பொருட்களை நாடுவது குறித்தும் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் தடைசெய்யப்பட்ட இறக்குமதிப் பொருட்களின் பட்டியலில் பாபுல் மற்றும் பான் பராக் போன்ற உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் பொருட்கள் உள்ளடக்கப்படவில்லையென்பதும் இங்கு தெரியவந்தது. இதற்கமைய இந்தப் பொருட்களைத் தடைசெய்யப்பட்ட இறக்குமதிப் பொருட்களின் பட்டியலில் சேர்க்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்ற கோரிக்கையை பாவனையாளர் அதிகார சபைக்கு அனுப்பவும் குழு தீர்மானித்தது.

மகப்பேற்றுக்கு விடுமுறைகள் வழங்கப்படும் போது மூன்றாவது குழந்தையைப் பிரசவிப்பதற்காக விடுமுறை வழங்கப்படாத சம்பவங்கள் குறித்த முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார். மகப்பேற்றுக்கு விடுமுறை வழங்கும்போது முதல் மற்றும் இரண்டாவது பிரசவங்களுக்கு வழங்கப்படுவதைப் போலவே மூன்றாவது மற்றும் நான்காவது பிரசவங்களுக்கும் அதே சலுகைகளை வழங்க சட்டம் திருத்தப்பட்டுள்ளதாகவும் இது முறையாக சமூகமயமாக்கப்படவில்லையென்றும் அதிகாரிகள் குழுவில் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழில் பணிபுரியக்கூடிய பெண் அதிகாரிகளை நியமிப்பது குறித்தும் குழுவில் கவனஞ்செலுத்தப்பட்டது. இங்கு கருத்துத் தெரிவித்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர, யாழ்ப்பாணத்தில் தற்போது 56 பெண் அதிகாரிகள் பணியாற்றுவதாகக் கூறினார். அந்தப் பெண் அதிகாரிகளில் 21 பேர் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவுகளில் பணிபுரிவதாகவும் அவர்களில் 8 பேர் மட்டுமே தமிழில் பணிபுரிய முடியுமென்றும் அவர் தெரிவித்தார்.

இங்கு சிறுவர் மற்றும் மகளிர் அலுவல்கள் தொடர்பான விடயம் பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களின் நிகழ்ச்சி நிரல்களில் உள்ளடக்கப்படாமை தொடர்பில் மாவட்ட செயலாளர்களுக்குத் தெரியப்படுத்தி குறித்த குழுக் கூட்டங்களில் இவ்விடயத்தை உள்ளடக்குவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் குழு கேட்டறிந்தது. தற்போது அந்தக் குழுக்களின் நிகழ்ச்சி நிரலில் சிறுவர் மற்றும் மகளிர் விவகாரம் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படுவதாக அதிகாரிகள் குழுவுக்குப் பதிலளித்தனர்.

## இலங்கை - ஜப்பான் பாராளுமன்ற நட்புறவுச் சங்கத் தலைவராக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவு





பத்தாவது பாராளுமன்றத்தின் இலங்கை – ஜப்பான் பாராளுமன்ற நட்புறவுச் சங்கத் தலைவராக வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவுசெய்யப்பட்டார்.

இலங்கை – ஜப்பான் பாராளுமன்ற நட்புறவுச்சங்கத்தை மீள ஸ்தாபிப்பதற்கான கூட்டம் 2025 ஏப்ரல் 09ஆம் திகதி பிரதி சபாநாயகர் (வைத்தியர்) ரிஸ்வி சாலி தலைமையில் பாராளுமன்றத்தில் நடைபெற்றபோதே இத்தெரிவு இடம்பெற்றது. இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகியோ இஸொமாடா இதில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டார். அத்துடன், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

இதில் இலங்கை – ஜப்பான் பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் செயலாளராக பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து தெரிவுசெய்யப்பட்டார்.

இங்கு இரு நாடுகளுக்குமிடையிலான ஏழு தசாப்த கால இருதரப்பு இராஜதந்திர உறவுகள் சுட்டிக்காட்டப்பட்டதுடன், இலங்கைக்கும் ஜப்பானுக்குமிடையிலான நீண்டகால நட்புறவை இரு தரப்பினரும் எடுத்துரைத்தனர். உட்கட்டமைப்பு, சுகாதாரம், கல்வி, வர்த்தகம் மற்றும் முதலீடு போன்ற முக்கிய துறைகளில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான வலுவான உறுதிப்பாட்டையும் அவர்கள் வெளிப்படுத்தினர்.

அத்துடன், மக்களுக்கிடையேயான உறவுகளை மேம்படுத்தல் மற்றும் இரு சட்டவாக்க அமைப்புகளுக்குமிடையிலான நெருக்கமான ஒத்துழைப்பை ஏற்படுத்தல் உள்ளிட்ட இரு நாடுகளுக்குமிடையிலான சிறந்த தொடர்புகளை வளர்ப்பதற்கு புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட நட்புறவுச் சங்கம் ஒரு தளமாக செயற்படுமெனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இதேவேளை, ஜப்பான் தூதுவர் அகியோ இஸொமாடா பிரதி சபாநாயகர் (வைத்தியர்) ரிஸ்வி சாலியை மரியாதை நிமித்தமாக பாராளுமன்றத்தில் சந்தித்தார். இலங்கையின் ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்புக்கான ஜப்பானின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை இக்கலந்துரையாடலில் ஜப்பான் தூதுவர் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

## உள்ளூராட்சி மன்றங்களை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றினால் போலித் தமிழ்த் தேசியவாதிகளின் இருப்பு இல்லாமல் போகும்

### இளங்குமரன் எம்.பி. தெரிவிப்பு

**(சாவகச்சேரி நிருபர்)**

வடக்கிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றும் பட்சத்தில் போலித் தமிழ்த் தேசியவாதிகளுடைய இருப்பு இல்லாமல் போகுமென பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரியில் அமைந்துள்ள தேசிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று (16) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்படி கருத்தைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், ‘‘உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக யாழ்ப்பாண மக்களைத் தெளிவுபடுத்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க யாழ்ப்பாணம் வருகிறார்.

எமக்கெதிரான விமர்சனங்களுக்கும் அவருடைய வருகையின்போது பதில் இருக்கும். அதனூடாகத் தெளிவு பிறக்கும்.

தேசிய மக்கள் சக்திக்கு பூரண ஆதரவு உள்ளது. நிச்சயமாக யாழ்ப்பாணத்தில் உள்ள 17 உள்ளூராட்சி மன்றங்களையும் கைப்பற்றுவோம்.

சாவகச்சேரி நகரசபை, பிரதேசசபை மற்றும் யாழ். மாநகரசபை ஆகிய சபைகளில் எமக்கு அமோக ஆதரவு உள்ளது. இம்முறை ஒரே திசையில் பயணிக்க மக்கள் தீர்மானித்து விட்டனர்.

பாராளுமன்றத் தேர்தலில் எமது வெற்றியின் பின்னர் பல தமிழ்க் கட்சிகள் எம் மீது அச்சத்தில் உள்ளன. அதன் விளைவே அவை எம்மை விமர்சிக்கக் காரணம். பாராளுமன்றத் தேர்தலில் அக்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தோல்வியடைந்ததன் பின் ஒன்றிணைவார்கள் என எதிர்பார்த்தேன். ஆனால், அது நடக்கவில்லை. ஆனால், அவர்கள் தேசிய மக்கள் சக்தியைத் தோற்கடிக்கும் சுயநோக்கத்துக்காக





ஒன்றுபடுகின்றனர்.

தாம் வெல்வதைக் காட்டிலும் தேசிய மக்கள் சக்தியைத் தோற்கடிக்க வேண்டுமென்பதில் மும்முரமாக இருக்கின்றனர்.

இவ்வாறு போலிப் பிரசாரம் செய்பவர்கள் விடுதலைப்புலிகள் காலத்தில் எங்கே மறைந்திருந்தனர்? 2001ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்துக்காக தமிழ்க் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தனர்.

அன்றைய காலத்தில் புலிகளை எதிர்க்க எவருக்கும் தற்றுணிவு இருக்கவில்லை. அதனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக ஒன்றுபட்டனர். ஆனால், இன்றுவரை சுய இலாப நோக்கத்துக்காக கூட்டமைப்பை அவர்கள் பதிவுசெய்யவில்லை.

இவர்களே துரோகிகள். மக்கள் தேசிய மக்கள் சக்தியிடம் உள்ளூராட்சி மன்றங்களை ஒப்படைக்கும் போது துரோகிகளுடைய இருப்பு என்பது இல்லாமல் போய்விடும்.

தேசிய மக்கள் சக்தி தமிழ், சிங்கள, முஸ்லிம் கட்சி இல்லை. இது ஒரு மனித நேயத்துக்கான அமைப்பு’’- என அவர் மேலும் கூறினார்.

# மாகாண அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் நிதி மக்களின் வரிப்பணம்

## ஆளுங்கட்சி உரிமைகோர முடியாது என்கிறார் சத்தியலிங்கம் எம்.பி.



உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறும் அவ்வாறு செய்யாவிட்டால் ஒதுக்கப்பட்ட நிதியை கையாள்வதில் தடைகள் ஏற்படுமெனவும் மிரட்டல் தொனியில் அமைச்சர்கள் தேர்தல் பிரசாரம் செய்வதாக பாராளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் சத்தியலிங்கம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மன்னாரில் நேற்று முன்தினம் (15) நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்ட மத்திய சுற்றாடல் அமைச்சர் இந்த வருடம் வரவு - செலவுத் திட்டத்தில் இதுவரை எந்த அரசாங்கங்களும் செய்யாத அளவுக்கு வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்காக நிதியொதுக்கியுள்ளோம்.

இந்த நிதியை முறையாக அபிவிருத்திப் பணிகளுக்குப் பயன்படுத்தவேண்டுமாக இருந்தால் தேசிய மக்கள் சக்தி அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் இந்த நிதியை செலவிடுவதில் தடைகள் ஏற்படலாம். ஆகவே, மக்கள், தேசிய மக்கள் சக்தி வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும்.

இது மிக மோசமான பிரசார யுக்தியாகும். ஒரு நாட்டின் அரசாங்கத்தால் மாகாணங்களின் அபிவிருத்திக்காக நிதியொதுக்கீடு செய்வது ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் கடமையாகும். அதனை அவர்கள் தவிர்க்கமுடியாது.

வடக்கு மாகாணம் இலங்கையில்தான் அமைந்துள்ளது. வடக்கு மாகாணம் நான் அறிந்தவரையில் தனிநாடல்ல. அப்படிப்பார்த்தால் கடந்த 30 வருடங்களாக நடைபெற்ற கொடிய யுத்தத்தால் உட்கட்டுமானங்கள் நீண்டகாலமாக அபிவிருத்தி செய்யப்படாதுள்ளன. அங்குள்ள மக்களின் தேவைகள் நாட்டின் ஏனைய மாகாணங்களில் வாழுகின்ற மக்களின் தேவையை விட வேறுபட்டவை.

ஆகவே, வடக்கு மாகாணத்துக்கு விசேடமாக அதிக நிதி ஒதுக்கீடுகளை இந்த அரசாங்கம் செய்திருக்கவேண்டும். ஆனால், அவ்வாறு நிதியொதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. இந்த நிலையில், உங்களுக்கு அதிக நிதி ஒதுக்கியுள்ளோம். அதனை முறையாகப் பயன்படுத்த எங்களுக்கு மட்டுமே நீங்கள் வாக்களிக்க வேண்டுமென்று கூறுவதன் அர்த்தம் நீங்கள் வேறு யாருக்காவது வாக்களித்தால் அந்த நிதியை நாங்கள் விடுவிக்கமாட்டோம் என்றே அர்த்தப்படவேண்டியுள்ளது.

மத்திய அரசால் மாகாணங்களின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் நிதியானது இந்த நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் சொந்தமானது. அதனை அனுபவிக்க அனைத்து மக்களுக்கும் உரிமையுள்ளது. அதுவே ஜனநாயகம். வரவு - செலவுத்திட்ட நிதி என்பது தேசிய மக்கள் சக்தியின் கட்சி நிதியோ ஜனாதிபதியின் சொந்த நிதியோ அல்ல. இந்த நாட்டு மக்களின் வரிப்பணத்திலிருந்து பெறப்படுகின்ற நிதியாகும்.

எனவே, இவ்வாறான மிரட்டும் தொனியிலான பாணியில் தேர்தல் பிரசாரம் செய்வதை தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அமைச்சரின் மிரட்டலுக்கு சரியான பதிலை எதிர்வரும் தேர்தலில் வாக்குப்பலத்தால் தமிழ் மக்கள் காட்டுவார்கள் - என்றார்.

தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 ஏப்ரல் 17 ஆம் திகதி, வியாழக்கிழமை

# ஈஸ்டர் தினத் தாக்குதல் விசாரணை பிள்ளையானுடன் வரையறுக்கப்படலாமா?

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளியும் இலங்கையின் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் கடந்த 08 ஆம் திகதி மட்டக்களப்பு பகுதியிலுள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைமை அலுவலகத்தில் வைத்து கைதுசெய்யப்பட்ட நிலையில், அவரை தொடர்ந்து தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை மற்றும் ஈஸ்டர் தினக் குண்டுத் தாக்குதல் உள்ளிட்ட சில சம்பவங்கள் தொடர்பில் பிள்ளையான் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வந்தன.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் உப வேந்தராகக் கடமையாற்றிய பேராசிரியர் சிவசுப்ரமணியம் ரவீந்திரநாத் காணாமல் போயிருந்தார். கொழும்பில் 2006ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொள்வதற்காக வருகை தந்த பேராசிரியர் திடீரெனக் காணாமல் போயிருந்தார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 2004ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரை அவர் கடமையாற்றியுள்ளார். இந்த காணாமல் போன சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு 2006ஆம் ஆண்டு முறைப்பாடொன்று பதிவாகியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்திய பொலிஸார், 19 வருடங்களின் பின்னர் பிள்ளையானைக் கைதுசெய்துள்ளனர். பேராசிரியர் சிவசுப்ரமணியம் ரவீந்திரநாத் காணாமல் ஆக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்தின் பின்னணியில் பிள்ளையான் செயற்பட்டுள்ளதாக எழுந்துள்ள சந்தேகத்தையடுத்தே அவர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து அரசாங்கத்துடன் இணைந்ததன் பின்னரான காலத்தில் பிள்ளையான் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மட்டக்களப்பு தேவாலயத்தில் 2005ஆம் ஆண்டு இடம்பெற்ற நத்தார் தின ஆராதனைகளின்போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கொலை செய்யப்பட்டிருந்தார். இந்தக் கொலைச் சம்பவத்துக்கும் பிள்ளையானுக்குமிடையில் நேரடித் தொடர்பு காணப்படுவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

சம்பவம் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளில் பிள்ளையான் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இவ்வாறான நிலையில், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் அவர் விடுதலை செய்யப்பட்டிருந்தார். இதே வேளை, இலங்கையில் 2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஈஸ்டர் தினக் குண்டுத் தாக்குதலின் பின்னணியில் பிள்ளையான் செயற்பட்டிருந்ததாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளியாக சிவநேசதுரை சந்திரகாந்தன் செயற்பட்டிருந்தார். விடுதலைப் புலிகள் அமைப்பில் சிவநேசதுரை சந்திரகாந்தன், பிள்ளையான் என அழைக்கப்பட்டார். 1990 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் தனது 16ஆவது வயதில் இணைந்த பிள்ளையான், முக்கிய தாக்குதல்களில் முன்னிலை வகித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டதன் பின்னர் கிழக்கு மாகாணத்துக்காக நடத்தப்பட்ட முதலாவது மாகாண சபைத் தேர்தலில் முதலாவது கிழக்கு மாகாண முதலமைச்சராக பிள்ளையான் 2008ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை தொடர்பான குற்றச்சாட்டுகள் பிள்ளையான் மீது முன்வைக்கப்பட்டு வந்த நிலையில், அவர் 2015 ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டார்.

2020ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் சிறைச்சாலையில் இருந்தவாறே போட்டியிட்ட பிள்ளையான், மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டார். அதன்பின்னர் 2020 ஆம் ஆண்டு நீதிமன்றத்தால் பிள்ளையான் விடுதலை செய்யப்பட்டிருந்தார். இவ்வாறான நிலையிலேயே தற்போது மீண்டும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஈஸ்டர் தினத் தாக்குதலில் பிள்ளையானுக்கு தொடர்புகள் இருப்பதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பாராளுமன்றத்தில் கடந்த வாரம் தெரிவித்திருந்தார். அதேபோல், ஈஸ்டர் தினத் தாக்குதல்கள் குறித்த விடயத்தில் முக்கியமான நபர்கள் கைதுசெய்யப்படுவார்களென ஜனாதிபதி அநுரவும் பொதுக்கூட்டமொன்றில் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.

இந்தப் பின்னணியில் பிள்ளையானுடன் தொலைபேசியில் உரையாட முன்னாள் ஜனாதிபதி ரணில் விடுத்த கோரிக்கை பாதுகாப்புத் தரப்பால் நிராகரிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், சந்திரகாந்தனின் சட்டத்தரணி என்ற ரீதியில் கம்மன்பில மாத்திரம் பிள்ளையானைச் சந்திக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

ஈஸ்டர் தினத் தாக்குதல் சம்பந்தமான விசாரணையின் இறுதியில் உண்மையான குற்றவாளிகள் அடையாளம் காணப்படும் வாய்ப்பு இருக்குமா என்பது ஐயமே. பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை திருப்திப்படுத்த அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில், வரும் தேர்தலில் ஆளுங்கட்சிக்கு ஆதரவாக கிறிஸ்தவர்கள் வாக்களிக்கவே போகிறார்கள்.ஆனால், அந்தத் தாக்குதல் சம்பவம் ஓரிரு தனிநபர்களால் திட்டமிடப்பட்டு செய்யப்பட்டிருப்பதற்கு வாய்ப்பில்லை. தனியான தொலைபேசி செயலி, அவற்றுக்கான செலவு உட்பட்ட பல விடயங்கள் நடந்தமைக்கு பின்னால் பெரும் சக்தியொன்று இருந்திருக்க வேண்டும்.

அந்த சக்தியை இந்த அரசால் கண்டறிய முடியாது. அப்படியே கண்டறிந்தாலும் ஒன்றும் செய்ய முடியாது என்பதுதான் உள்ளக நிலைமை.

சம்பவம் நடந்து முடிந்த கையோடு இன்னார் தான் இதனைச் செய்தார்கள் என்று ரணிலுக்கு இரு நாடுகள் அப்போது தகவல் கூறின. அதற்குள் எப்படி அவை அந்தத் தீர்மானத்துக்கு வந்தன? மறுபக்கம் மதப்பற்று என்ற சஹ்ரானின் நிலைப்பாட்டை யாரோ பயன்படுத்தியிருக்கிறார்கள். அது சஹ்ரானுக்கே தெரிந்திருக்காது என்ற கருதுகோளும் உண்டு.

ரணிலும், கம்மன்பிலவும் இந்த விடயத்தில் தலையிட்டது பிள்ளையானை ஆறுதல் சொல்வதற்கா அல்லது யாரோ ஒரு அந்தப் பெருஞ் சக்தியை காப்பாற்றவா? பிள்ளையானை சந்திக்கச் சென்ற கம்மன்பில, இனி மாநாயக்க தேரரைச் சந்திக்கவுள்ளதாகத் தகவல். மாநாயக்க தேரர்கள் அரசாங்கத்துக்கு அழுத்தங்களை வழங்குவர். இது வெறுமனே பிள்ளையான் விடுதலைக்கு மட்டுமான அழுத்தமாக இருக்குமெனக் கருத முடியாது.

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் எந்த விசாரணை நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் பட்டலந்த முதல் எதற்கும், எக்காரணம் கொண்டும் ரணிலுக்கெதிராக எந்தவித விசாரணைகளும் மேற்கொள்ளப்படாத நிலையில், ஈஸ்டர் தினத் தாக்குதல் விசாரணை மட்டும் எந்தளவு தூரம் முறையாக முன்னெடுக்கப்படுமெனப் புரியவில்லை. இது தேர்தல் காலம் என்பதால் பிள்ளையானை மட்டும் வைத்து ஆட்சியாளர் படமெடுத்தாலும் அது எத்தனை நாட்கள் ஓடுமென்பது தெரியவில்லை.

ஈஸ்டர் தினத் தாக்குதல் வெறுமனே பிள்ளையானுக்குள் மட்டும் வரையறுக்கப்படாமல் வெளியில் தெரியாத அதன் பின்புல சக்திகளை அடையாளம் காண வேண்டும். அப்போதே அது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்தை, நீதியைத் தருவதாக இருக்கும்.

# அமெரிக்காவின் புதிய ஆட்டம்: என்னவாகும் உலகப் பொருளாதாரம்?

2001 செப்டெம்பர் 11இல் நியூயோர்க்கில் உள்ள உலக வர்த்தகக் கட்டிடமான இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்டபோது உலகமே அமெரிக்காவுக்குத் துணைநின்றது. இன்று உலக நாடுகள் மீது அமெரிக்கா அறிவித்துள்ள இறக்குமதிக்கான தீர்வை, பல உலக நாடுகளை இணைத்து இத்தனை காலமாகக் கட்டி அமைத்திருந்த உலக வர்த்தக அமைப்பை அதுவே தகர்த்துவிட்டதோ என எண்ண வைக்கிறது. மற்றைய நாடுகள் அனைத்தும் அமெரிக்காவைத் தனிமைப்படுத்தும் சூழல் உருவாகியுள்ளது.

**குமுறும் வல்லரசு:**

கடந்த 20 ஆண்டுகளாக அமெரிக்காவின் வெளிநாட்டு வணிகப் பரிவர்த்தனையில் வரவுக்கும் செலவுக்குமிடையில் சமநிலை இல்லாமல் செலவு பல மடங்கு அதிகமாகவுள்ளது. ஒரு நாட்டின் இறக்குமதி அதிகரித்து ஏற்றுமதி குறையும்போது இந்நிலை ஏற்படுகிறது.

இதனால் அமெரிக்கா பெரும் கடன் சுமையில் தள்ளப்பட்டுள்ளது. வளர்ந்துவரும் மூன்றாம் உலக நாடுகளில் இவ்வாறு பிரச்சினை ஏற்படுவது இயல்பானது. ஆனால், உலகப் பொருளாதாரத்தில் முதன்மையான இடத்தில் இருக்கும் அமெரிக்காவுக்கு அப்படியல்ல.

இரண்டாம் உலகப் போர் முடிந்தபோது உலகளவில் அமெரிக்காவின் கை ஓங்கியிருந்தது. உலக உற்பத்தியில் ஏறக்குறைய பாதி அமெரிக்கா வசம் இருந்தது. இப்போது அது 16% ஆகக் குறைந்துவிட்டது. மற்றைய நாடுகள் தங்கள் உற்பத்தித் திறனை வளர்த்துக்கொண்டது ஒரு காரணம். அமெரிக்காவில் ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்கான செலவைவிட பல மடங்கு குறைந்த விலையில் தயாரிக்கக்கூடிய ஆற்றலும் மனித வளமும் பிற நாடுகளில் உருவானது இரண்டாவது காரணம்.

அத்துடன், மக்களின் சமூகப் பாதுகாப்பு, மருத்துவம், நாட்டின் பாதுகாப்பு எனத் தனது வருவாயின் பெரும் பகுதியை (ஏறக்குறைய 67%) செலவழிக்கிறது. இதற்கிடையில் வியட்நாம், ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற பல போர்களில் ஈடுபட்டதால் பெரும் பொருட்செலவைச் சந்தித்தது.

வீட்டிலோ நாட்டிலோ வருவாய்க்கு மீறிச் செலவுகள் தொடர்ச்சியாக அதிகரிக்கும் போது புதிதாக வருவாயைப் பெருக்கவில்லையென்றால் ஏதேனும் ஒரு கட்டத்தில் அதிரடியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நிலை உருவாகிறது.

அதைத்தான் அமெரிக்கா இப்போது செய்துள்ளது. “எங்கள் நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்குப் பிற நாடுகள் விருப்பம் போலத் தத்தம் நாட்டில் தீர்வை விதித்து தங்களைப் பாதுகாத்துக்கொண்டு இன்று எங்களைப் பெரும் இன்னல்களில் ஆழ்த்தியுள்ளன. எங்களுடைய நட்பு நாடுகளே இதில் முக்கிய பங்கு வகித்துள்ளன” - என்று ட்ரம்ப் குமுறினார். நியாயம்தானே?

**சங்கிலித் தொடர் பாதிப்பு:**

தற்போதைய அதிரடி நடவடிக்கைகளால் பலன்கள் கிடைத்து, அமெரிக்கா மீண்டு வந்தால் நன்மைதான். ஆனால், நடைமுறையில் இது அவ்வளவு எளிதல்ல. இத்தனை காலம் உலகத்தைக் காக்க வந்த இரட்சகராக நடந்துகொண்டதால் பல்வேறு நாடுகள் அமெரிக்காவை முழுமையாகச் சார்ந்திருந்தன. எனவே, அமெரிக்காவின் பொருளாதார வீழ்ச்சி பல நாடுகளையும் ஒட்டுமொத்தமாக உருக்குலையச் செய்யக்கூடும். குறிப்பாக, அமெரிக்காவின் எல்லை நாடுகளான கனடா, மெக்ஸிகோ இரண்டும் கடும் பாதிப்பைச் சந்திக்கும்.

பல நாடுகள் உற்பத்திச் செலவைக் குறைக்க தங்கள் தொழிற்சாலைகளை இவ்விரு நாடுகளில் அமைத்துப் பொருட்களை உற்பத்தி செய்து அமெரிக்காவுக்குள் அனுப்புகின்றன. பொருட்கள் குறைந்த விலையில் அமெரிக்கர்களுக்குக் கிடைத்தாலும் இது நாட்டின் பொருளாதாரத்துக்குத் தீங்கு விளைவிக்கிறது. முக்கியமாக, அந்நிய செலாவணி இழப்பும் உள்நாட்டு வேலைவாய்ப்பு இழப்பும் ஏற்படுகின்றன.

சென்ற நூற்றாண்டிலும் உலகம் இதேபோன்ற வரலாறு காணாத பொருளாதாரச் சரிவைச் சந்தித்தது. நிதிமுறிவு ஏற்பட்டு பல நாடுகள் வீழ்ச்சியடைந்தன. இரண்டாம் உலகப் போருக்கே அது தொடக்கப் புள்ளியாக அமைந்தது. 96 ஆண்டுகள் கழித்து இன்று உலகம் மீண்டும் அதே நிலையைச் சந்திக்கக் கூடிய சாத்தியங்கள் உள்ளன.

ஆனால், பல நாடுகளிடையே அணு ஆயுதங்கள் குவிந்துள்ளதால் உலகப் போர் வெடிக்கும் வாய்ப்பு குறைவு. அதே நேரத்தில், புவிசார் அரசியலில் ஆச்சரியமான மாற்றங்கள் ஏற்படக்கூடும். ‘அமெரிக்கா இல்லையென்றால் என்ன? ஏன் மற்ற நாடுகள் தங்கள் உற்பத்தியைத் திருப்பிவிடக் கூடாது?’ எனப் பல நாடுகள் யோசிக்கத் தொடங்கும்.

இந்நிலையில், முக்கியமான ஒன்றை நாம் மறக்கக் கூடாது. நாடுகளுக்கிடையிலான வணிகம், உண்மையில் அந்தந்த நாட்டில் உள்ள முதலீட்டாளர்களின் வணிகமே. பல முதலீட்டாளர்கள் உலகளவில் நிறுவனங்களை வைத்திருப்பவர்கள். அவர்கள் இப்போதே தங்கள் பொருட்களுக்குப் புதிய சந்தைகளை வேறு நாடுகளில் தேடத் தொடங்கியிருப்பார்கள். இதுவரை பகை நாடுகளாக இருந்தவர்கள் ஒன்றுகூடும் வாய்ப்புள்ளது.

**நண்பர்கள் பிரியலாம்**

அமெரிக்காவின் நட்பு நாடுகளாக குறிப்பாகக் கிழக்காசியப் பகுதிகளில் பாதுகாப்பு அரண்களாக விளங்கும் தென் கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இப்போது சீனாவுடன் இணைந்து தீர்வை எதிர்கொள்வதெனத் தீர்மானித்துள்ளன. அமெரிக்காவுக்கு இது பெரும் பின்னடைவு.இது ஒருவேளை நடந்துவிட்டால், அமெரிக்கா ஆசிய பசுபிக் பெருங்கடல் பகுதியில் தனது ஆதிக்கத்தை இழக்க நேரிடலாம். உலக நாடுகள் நீண்ட காலமாக அமெரிக்க டொலரைப் பன்னாட்டு வர்த்தகத்துக்கான நம்பகமான கருவியாகப் பயன்படுத்தி வருகின்றன. அதன் தொடர்ச்சியான வீழ்ச்சி அமெரிக்காவுக்கே இன்னும் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

**ட்ரம்ப்பின் அதிரடி நடவடிக்கைகள் அமெரிக்காவுக்கு உதவுமா?**

நிச்சயமாக உதவாது. காரணம், உள்நாட்டு உற்பத்திக்குத் தேவையான தொழில்கள் அமெரிக்காவில் தயாராக இல்லை. முதலீடு செய்யும் நிதிநிலை பாதிக்கப்பட்டுள்ளது. மற்றைய நாடுகளின் முதலீட்டாளர்களும் முன்வர மாட்டார்கள். உள்நாட்டு உற்பத்திக்காக வெளிநாட்டிலிருந்து மசகுப் பொருட்கள் மற்றும் உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்ய வேண்டிவரும். அவற்றுக்கும் தீர்வை வரி சேர்க்கும்போது உற்பத்திச் செலவு அதிகரிக்கும். இந்தோனேஷியா, வியட்நாம் அல்லது உள்ளூரில் வேலை செய்பவர்களுக்கு அளிக்கும் ஊதியத்தைவிட, அமெரிக்கர்களுக்குப் பல மடங்கு ஊதியம் கொடுக்கவேண்டியிருக்கும்.

இதன் விளைவாக உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களின் விலை உயர்ந்தே இருக்கும். இதனால், அமெரிக்கச் சாமானியர்கள் நேரடியாகப் பாதிக்கப்படுவார்கள். இப்போது எளிதாக வாங்கிக்கொள்வது போல் இருக்கும் பொருட்களுக்கு இனிக் கூடுதலான விலை கொடுக்கவேண்டிய நிலை ஏற்படும். ‘வரலாற்றுச் சிறப்பு மிக்க’ பொருளாதாரக் கொள்கை முடிவுகளை எடுத்தவர்களுக்கு இதெல்லாம் தெரியாதா?

**நிலைமை மாறுமா?**

ஒருவகையில், உலக வர்த்தகத்தை அமெரிக்கா ஒட்டுமொத்தமாகக் கலைத்துள்ளது. எல்லோரும் என்ன செய்வதென்று கவலையோடும் கோபத்தோடும் பரிதவிக்க, அமெரிக்கா மீண்டும் நாடுகளை ஒவ்வொன்றாக அழைத்து, தக்கவாறு புதிய ஒப்பந்தங்களை உருவாக்க வாய்ப்பிருக்கிறதெனப் பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

**நன்றி - தமிழ் இந்து**

## நக்கல் நமசிவாயம்

*சித்திரைக்குள்ள தமிழர் பிரச்சினை தீருமென்று முன்னம் சொல்லுவாங்க.. எந்த சித்திரை என்றுதான் இதுவரை தெரியாம இருக்குது பாருங்கோ...*



## இன்றைய நாளில்...

- 1961 – அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏயினால் பயிற்சியளிக்கப்பட்ட கியூபா அகதிகள் குழுவொன்று பிடெல் காஸ்ட்ரோவைப் பதவியிலிருந்து அகற்றும் நோக்குடன் விரிகுடாவில் தரையிறங்கின.
- 1970 – அப்பலோ-13 விண்கப்பல் பழுதடைந்த நிலையில், தனது பயணத்தை இடைநிறுத்திவிட்டு பூமிக்குத் திரும்பியது.
- 1971 – முஜிபுர் ரஹ்மான் தலைமையில் பங்களாதேஷ் மக்கள் குடியரசு அமைக்கப்பட்டது.
- 2004 – இந்தியத் திரைப்பட நடிகை சௌந்தர்யா இந்தியாவின் பெங்களூருவில் விமான விபத்தில் இறந்தார்.
- 2014 – நாசாவின் கெப்லர் விண்கலம், பிறிதொரு விண்மீனின் வாழ்தகைமைப் பகுதியில் புவிக்கு ஒப்பான கோள் ஒன்று இருப்பதை உறுதிப்படுத்தியது.

## மக்கள் கடிதம்

# சிகை அலங்காரம் செய்வோரின் மனிதநேயமற்ற செயல்

சிகை அலங்காரம் செய்யும் மனிதநேயமற்றவர்களின் செயலானது மக்கள் மத்தியில் அதிருப்தியையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, மேல்மாகாணங்களிலும் சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களில் இயங்கும் சிகை அலங்காரம் செய்யும் இடங்களில் ஒருவருக்கு முடி வெட்டி முகச்சவரம் செய்வதற்கு 350 ரூபா கூலியாகப் பெறப்படுகின்றது.

ஆனால், கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக, கல்முனைப் பிரதேசத்தில் காணப்படும் சிகை அலங்காரம் செய்யும் இடங்களில் ஒருவருக்கு முடிவெட்டி முகச்சவரம் செய்வதற்கு 500 ரூபாவை அறவிடுகின்றனர். ஆனால், பிரதேசத்தில் செயற்படும் சிகை அலங்காரம் செய்பவர்களுக்கென்று ஒரு சங்கம் செயற்படுகின்றது. அதனடிப்படையில் சகல சிகை அலங்காரம் செய்பவர்களும் அந்தச் சங்கத்தின் நிர்வாகத்துக்குக் கீழ் செயற்படவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் வாரத்தில் செவ்வாய்க்கிழமை எந்தவொரு சிகையலங்காரக் கடைகளும் திறக்கக்கூடாதென்ற உத்தரவுக்கமைய அந்நாட்களில் கடைகள் மூடப்படுகின்றன. மேற்படி இந்தக் கட்டளைகளைப் பேணிவரும் இவர்கள், சிகை அலங்காரம் செய்ய வருபவர்களிடம் அவர்கள் விரும்பியவாறு பணத்தை அறவிடுகின்றனர். பொதுவாக கல்முனை உட்பட அதனை அண்டிய பிரதேசங்களில் உள்ள சிகை அலங்காரம் செய்யும் கடைகளில் 500 ரூபா அறவிடும் அதேவேளை, கல்முனைக்கு அருகாமையில் உள்ள காரைதீவு எனும் இடத்தில் இயங்கிவரும் கடைகளில் 600 ரூபா முதல் 650 ரூபா வரை அறவிடுகின்றனர். காரைதீவுப் பிரதேசத்தில் 600 ரூபா எடுக்காதீர்கள் கல்முனையில் 500 ரூபாதானே எனக் கேட்டால், அது கல்முனை இது காரைதீவு எனப் பதில் கூறுகின்றனர். இதன் காரணமாக அந்தக் கடைகளுக்கு முடிவெட்டச் செல்பவர்கள் அவர்களைத் திட்டித் தீர்க்கின்றனர்.


சாதாரணமாக ஒரு கூலித் தொழிலாளி நாளொன்றுக்கு 900 ரூபாவைக்கூடப் பெறமுடியாமல் திண்டாடும் அதேவேளை, இந்த சிகை அலங்காரம் செய்பவர்கள் நாளொன்றுக்கு குறைந்த பட்சம் 10,000 ரூபாவுக்கும் மேல் வருமானமாகப் பெறுகின்றனர். அத்துடன், அரசால் வழங்கப்படும் நிவாரண உதவிகளையும் குறைவில்லாமல் பெறுகின்றனர்.

இவ்வாறு ஏழை எழியோர்களில் எந்த இரக்கமுமின்றி அவர்களது பணத்தை உறிஞ்சியெடுக்கும் இவ்வாறானவர்கள் இனம் காணப்பட்டு தண்டிக்கப்பட வேண்டுமென்பதோடு அவர்களது கடையின் உரிமைப்பத்திரத்தையும் இரத்துச் செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும், இவர்களது செயலானது சில வர்த்தகர்கள் பொருட்களைப் பதுக்கி வைத்துக்கொள்ளை இலாபம் அடிப்பதை விடவும் பாரிய மோசடியாகக் காணப்படுகின்றது. ஆகவே, இவ்வாறு மோசடி செய்பவர்களை அப்படியே விட்டுவிட்டால் 650 ரூபாக்கும் மேலதிகமாக 1,000 ரூபாவைக் கூட அறவிடுவார்கள் என்பதில் எந்த ஐயமுமில்லை. ஆகவே, இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென வேண்டுகின்றோம்.

**யூ.எல்.ஏ. மஜீட்,**
**சாய்ந்தமருது.**

## தவக்கால சிந்தனை



**இயேசுவைப் பிடிக்க முயன்றார்கள். ஆனால் அவர்கள் கையில் அகப்படாமல் அவர் அங்கிருந்து சென்றார்**

ஊண் வளர்க்க சோறுண்டு- இந்த பெருஞ்சோற்றுக்காய் ஓடி ஓடி இழைத்தும் களைத்தும் நலிந்தும் மெலிந்தும்- நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி வளம் கொண்டு வாழ்வுண்டு என நகர்ந்து- நோய் வந்து மெய் கெட்டு ஆவி பிரிய பாழாய் போனதோ உண்ட அமுதம் எல்லாம்...

இறை இயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே! இன்று ஒட்டுமொத்த கத்தோலிக்கர்கள் கிறிஸ்து இயேசுவின் இறுதி இரவு உணவு விழாவை நினைவுகூர்ந்து கொண்டாடுகிறார்கள். திரு அவையின் மிகப் பழைமையான மரபுப்படி இன்னாளில் மக்கள் பங்கேற்பு இல்லாத எல்லா திருப்பலிகளும் தடை செய்யப்படுகின்றன என உரோமைத் திருப்பலி நூல் இந்நாளின் முக்கியத்துவத்தைப் பற்றி வலியுறுத்திக் கூறுவதன் மூலம் இந்த நாளின் சிறப்புத் தன்மையை அடிக்கோடிட்டுக் காட்டிநிற்கின்றது.

இயேசுவின் பாஸ்கா விழாவை இன்று கொண்டாடுகின்றோம். பாஸ்கா என்றால் கடத்தல் என்று பொருள். பழைய ஏற்பாட்டில் யாவே கடவுளின் இரக்கத்தினால் பாரவோனின் ஆதிக்கத்திலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் இஸ்ரயேல் மக்கள் செழிப்புமிக்க கானான் தேசத்துக்குக் கொண்டுவரப்பட்டார்கள். அதாவது, பாஸ்கா என்ற கடத்தல் நிகழ்வின் வழியாகத் தீமையின் ஆதிக்கத்திலிருந்து கடந்து வந்து இறைவனைப் பற்றிக்கொண்டனர். ஆனால், இன்று உலகம் முடியும் வரை எந்நாளும் உங்களோடு இருப்பேன் (மத்தேயு 28/20) என்று சொன்ன இயேசு தன்னை உடைத்து தனது உடலையும் இரத்தத்தையும் நம்மீது கொண்ட அன்பின் வெளிப்பாடாக நமக்கு உணவாகத் தருகின்றார். அத்தோடு தன் மீட்புப் பணி இவ்வுலகத்தில் தொடர குருத்துவத்தையும் ஏற்படுத்துகின்றார். மேலும், இயேசுவின் பணி வாழ்வுக்கு அடையாளமான பணிவை போதிக்கும் விதமாக தனது சீடர்களின் பாதங்களை கழுவுவதன் மூலம் தான் காட்டிய இந்த மாதிரியை அவர்களும் கடைப்பிடிக்கக் கூறி அன்புக் கட்டளை கொடுத்து நிற்கின்றார்.

அன்பார்ந்தவர்களே... இன்றைய நாளின் வழிபாட்டில் விசேட விதமாக கிறிஸ்து எமக்காய் கொடுத்த மாபெரும் கொடையான திவ்ய நற்கருணைக்காக நன்றி கூறுவோம். நாம் வாழ்வு பெறுவதற்காக தன் உடலையும் இரத்தத்தையும் ஆன்ம உணவாகவும் பானமாகவும் உண்டு பருகும்படி கொடுத்து நிற்கின்றார்.

ஒவ்வொரு திருப்பலி கொண்டாட்டங்களிலும் திவ்ய நற்கருணையை நாங்கள் உட்கொள்ளுகின்றோம். முன்னோர் உண்டனர் மன்னா அழிந்து போயினர் எனது உடலையும் இரத்தத்தையும் தகுதியாய் உண்பவர் என்றுமே வாழ்வார் என்று கூறி அழியா உணவாகிய இந்த ஆன்மீக உணவை சரியான ஆயத்தத்தோடு உட்கொள்வதன் மூலம் அழியா வாழ்வை கண்டடையுமாறு ஆண்டவர் இயேசு கொடுக்கின்ற இந்த உணவே அற்புத அருமருந்து. விஷேட விதமாக இயேசுவை நமக்காய் பெற்றுத்தரும் குருக்களுக்காக மன்றாடுவோம். கிறிஸ்துவின் குருத்துவம் என்னும் மாபெரும் பணியை ஏற்றுள்ள அவர்கள், கிறிஸ்துவின் தூய்மை அர்ப்பணிப்பு ஆகிய பண்புகளைத் தொடர்ந்தும் வாழவும், அவர்கள் உடல் நலத்துடன் கிறிஸ்து விட்டுச் சென்ற பணியை இந்த மானிடத்துக்கு நிறைவாக ஆற்றவும் இறைவன் அவர்களுக்கு துணை புரிய வேண்டுமென்று சொல்லியும் மன்றாடுவோம்.

# அரசாங்கம் பொய்களால் மக்களை அச்சுறுத்தி வருகின்றது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவிப்பு





''மக்கள் விடுதலை முன்னணி அதிகாரத்தைக் கைப்பற்றும். உள்ளூராட்சி மன்றங்களுக்கு மட்டுமே நிதி ஒதுக்கப்படும் என ஜனாதிபதி அச்சுறுத்தல்களை விடுத்து வருகிறார். ஐக்கிய மக்கள் சக்தி வெற்றிபெறும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அரசாங்க நிதியில்லாமல் உகந்த சேவையைப் பெற்றுத் தருவோம்'' என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மேலும், எதையும் சரியாக செய்யத் தெரியாது, பொய்யும் ஏமாற்றுமே தொடர்ந்து வருகிறது. அரசாங்கமும் ஜனாதிபதியும் மக்களை அச்சுறுத்தி வருகின்றனர். ஜே.வி.பி உறுப்பினர்களுக்கு மாத்திரமன்றி முழு மக்களுக்கும் சேவையாற்றுவதே ஜனாதிபதியின் பொறுப்பாகும். எனவே இந்தத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியை மக்களின் வாக்குப்பலத்தால் வெற்றிபெறச் செய்யுமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுக்கிறேன் எனவும் கேட்டுக்கொண்டார்.

பொத்துவில் தேர்தல் தொகுதி லஹுகல பிரதேசத்தில் நேற்று முன்தினம் (15) இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''எமது நாட்டு மக்கள் ஜே.வி.பியையும், திசைகாட்டியையும் ஆதரித்து ஆட்சியை வழங்கினர். வளமான நாட்டைக் கட்டியெழுப்பு கின்றோம் என்று கூறினர். ஆனால் இன்று இந்த அரசாங்கம் முன்வைத்த கொள்கைப் பிரகடனத்தில் தெரிவித்த எந்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றவில்லை. ஊழல்வாதிகளை பிடிப்போம் என்றனர். போதுமான எந்த ஏற்பாடு களும் இதுவரையில் இல்லை.

பொருட்களின் விலைகள் அதிகரித்து வருமானம் குறைந்துள்ள நிலையில் இலட்சக்கணக்கான மக்கள் தமது மூன்று வேளை உணவையும் பெற்றுக் கொள்ள முடியாமல் தவித்து வருகின்றனர். வறுமை அதிகரித்து, வருமான மூலங்கள் குறைந்து, வாழ்வாதாரம் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், இந்த அரசாங்கம் பொய், மோசடிகளைக் கோலோச்சி மக்களை ஏமாற்றி வருகின்றது.

மின்கட்டணத்தை 33% குறைப்போம் என்று வாக்குறுதிகளை வழங்கினர். மக்கள் முயற்சி யால் 20% மின்கட்டணம் குறைக்கப்பட்டது. மக்களின் கேள்விகளாலே இந்த மின்கட்டணம் குறைக்கப்பட்டது. மீதமுள்ள 13% மின் கட்டணத்தை குறைக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். பால் மா, அரிசி, தேங்காய், உப்பு உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளும் இன்று அதிகரித்துள்ளன. இந்த அரசாங்கத்தினால் நாட்டுக்கு உப்பைக் கூட சரியாக வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அடுத்த போக நடவடிக்கைகளும் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், விவசாயிகளுக்கான உரம் இன்னும் வழங்கப்பட வில்லை. யானை - மனித மோதலை தடுக்கும் திட்டமும் இந்த அரசாங்கத்திடம் இல்லை. பெரும் அறிவாளிகள் எனக் கூறும் ஆளும் தரப்பு அமைச்சர்களின் கூற்றுப்படி அனைத்தும் குரங்குகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை விரிவுபடுத் துவதாகக் கூறினாலும் டீசல் மற்றும் அனல் மின்நிலைய மாபியாவில் அரசு சிக்கியுள்ளது. இவர்கள் கூறிய பல விடயங்களை செய்ய முடியாது புலம்பிக்கொண்டிருக்கின்றனர். மக்கள் பிரச்சினைகளுக்கு இந்த அரசாங்கம் தீர்வுகளை முன்வைத்த பாடும் இல்லை'' எனவும் தெரிவித்தார்.

# புத்தளத்தில் மக்கள் காங்கிரஸின் கட்சிக் கிளை காரியாலயம் திறப்பு







புத்தளம் மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், புத்தளம் மாவட்டத்தில் புத்தளம் பிரதேச சபை, ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை, கல்பிட்டிய பிரதேச சபை ஆகியவற்றில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடும் வேட்பாளர்களின் கட்சிக் கிளை காரியாலயம் திறந்துவைக்கும் நிகழ்வுகள் மற்றும் மக்கள் சந்திப்புகளில் கலந்துகொண்டார்.

அந்தவகையில், ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபையில், புளிச்சாக்குளம் - ஆண்டிமுனை வட்டாரத்தில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக, ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடும் வேட்பாளர் ஹில்மி முர்ஷித்தின் கட்சிக் கிளை காரியாலயத் திறப்பு நிகழ்வு புளிச்சாக்குளத்திலும் புத்தளம் பிரதேச சபையில், பொத்துவில் வட்டாரத்தில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் போட்டியிடும் வேட்பாளர் நிஸாத் அப்துல் மஜீதின் கட்சிக் கிளை காரியாலயத் திறப்பு நிகழ்வு நாகவில்லிலும் இடம்பெற்றது.

அத்துடன், கல்பிட்டிய பிரதேச சபையில், கரம்பை வட்டாரத்தில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடும் வேட்பாளர் எம்.ஏ.எம்.ஆஸ்கீன் மற்றும் பட்டியல் வேட்பாளர் நஹ்லானை ஆதரித்து கரம்பை - சபா மர்வா (A, B), சிலாவத்துறை ஹைராத், இலந்தமோட்டை, சம்சம் நகர், உளுக்காப்பள்ளம், ஹுசைனியாபுரம், ஹுசைனியாபுரம் மேற்கு, 25 ஏக்கர் ஆகிய பிரதேசங்களில் மக்கள் சந்திப்புகளும் இடம்பெற்றன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வுகளில், கட்சியின் உயர்பீட உறுப்பினரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான என்.டி.எம்.தாஹிர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள், ஊர்ப்பிரமுகர்கள், பொதுமக்கள் என பலரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் உள்ளூராட்சி மன்றங்களை அரசாங்கம் கைப்பற்றினால் மன்னார் மாவட்டத்தை காப்பாற்ற முடியாது

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. சுட்டிக்காட்டு

**(ஜோசப் நயன்)**

''உள்ளூராட்சி மன்றங்கள் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வுக்கான அனுமதியை வழங்கக்கூடிய அதிகாரம் கொண்டவை. எனவே உள்ளூராட்சி மன்றங்களை அரசாங்கம் முழுமையாக கைப்பற்றுமாக இருந்தால் மன்னார் மாவட்டத்தை காப்பாற்ற முடியாத ஒரு சூழலை ஏற்படுத்தும். மன்னாரில் நகர சபை மற்றும் பிரதேச சபைகளை அவர்கள் கைப்பற்றுவதன் ஊடாக தமது காரியங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்ற நோக்கத்துடன் அவர்களின் மன்னார் விஜயம் மற்றும் தேர்தல் பிரசாரங்கள் அமைந்துள்ளன'' என தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சியின் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று (16) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

''உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான காலம் நெருங்கிக் கொண்டிருக்கின்ற நிலையில், வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடுகின்றது. சில சபைகளின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில் நீதிமன்றத்தை நாடி தற்போது வெற்றி பெற்றுள்ளோம்.

இந்த நிலையில், ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு பல சபைகளை கைப்பற்றும் நிலை ஏற்படும். எனினும் நாங்கள் நிர்ணயம் செய்யும் சக்தியாக இத்தேர்தலில் காணப்படுவோம். யாருடன் இணைந்து செயலாற்ற வேண்டும் என்ற நிலை உள்ளது. குறிப்பாக தேசியத்தை நேசிக்கும் தமிழ்க் கட்சிகளுடன் நாங்கள் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைக்கும் சூழலை உருவாக்குவோம்.

இனிவருகின்ற காலங்களில் நாங்கள் ஒற்றுமையாக இல்லாது விட்டால் எமது பிரதேசங்களில் பிளவுகளையும் அழிவுகளையும் ஏற்படுத்தும். தேசியத்தை இல்லாது செய்யும் நடவடிக்கையையும் ஏற்படுத்தும். எனவே உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது நாங்கள் நிர்ணயம் செய்கின்ற சக்தியாக தேசியத்தை நேசிக்கின்ற கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைக்கின்ற வாய்ப்புகளை உருவாக்குவோம்.

குறிப்பாக மன்னாரில் கனிய மணல் அகழ்வு மற்றும் காற்றாலை மின் உற்பத்தி பிரதான விடயமாக பார்க்கப்படுகின்றது. மன்னார் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் குறித்த நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன. கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் குறித்த செயற்பாடுகளை நிறுத்த கோரிக்கை விடப்பட்டது. ஆனால் தற்போது மன்னாருக்கு பிரதமர் மற்றும் ஜனாதிபதியின் வருகை என்பது இந்த நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் குறித்த இரு திட்டங்களையும் மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்கான சந்தர்ப்பமாக அமையும்.

உள்ளூராட்சி மன்றங்கள் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வுக்கான அனுமதியை வழங்கக் கூடிய அதிகாரம் கொண்டவை. எனவே உள்ளூராட்சி மன்றங்களை அரசாங்கம் முழுமையாக கைப்பற்றுமாக இருந்தால் மன்னார் மாவட்டத்தை காப்பாற்ற முடியாத ஒரு சூழலை ஏற்படுத்தும். மன்னாரில் நகர சபை மற்றும் பிரதேச சபைகளை அவர்கள் கைப்பற்றுவதன் ஊடாக தமது காரியங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்ற நோக்கத்துடன் அவர்களின் மன்னார் விஜயம் மற்றும் தேர்தல் பிரசாரங்கள் அமைந்துள்ளன.

கடந்த 06 மாதங்களுக்குள் மன்னாருக்கு ஜனாதிபதியின் வருகை இடம்பெறவில்லை. எனினும் ஒரு சிறிய தேர்தலுக்காக அவர் மன்னாருக்கு வருகிறார். மீன்பிடி மற்றும் சுகாதார அமைச்சர்கள் மன்னாருக்கு வருவதாக கூறினார்கள். இதுவரை அவர்களின் வருகை இடம்பெறவில்லை. ஆனால் தற்போது அவர்கள் எல்லோரும் மன்னாருக்கு வருகை தருவது எமது மண்ணையும் காற்றையும் வருமானமாக்குவதே நோக்கமாக உள்ளது. எனவே மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்'' எனத் தெரிவித்தார்.

# இராஜாங்கனை இரட்டைக் கொலைச் சம்பவம்

## சந்தேகநபர்கள் இருவருக்கு 28வரை விளக்கமறியல்

**(அநுராதபுரம் நிருபர்)**

அநுராதபுரம், இராஜாங்கனை பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இருவரை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நொச்சியாகம நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

நீதிமன்ற தடுப்புக்காவல் உத்தரவின்பேரில் தடுத்து வைத்து மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் (15) சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோதே மேற்படி உத்தரவை நீதிவான் பிறப்பித்துள்ளார்.

இராஜாங்கனை, யாய 17, பஹளமாரகஹவெவ பகுதியை வசிப்பிடமாக கொண்ட 23, 27 வயதுகளையுடைய சகோதரர்கள் இருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இராஜாங்கனை, யாய 17 பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 56, 26 வயதுகளையுடைய இருவரை அவர்கள் வசித்துவந்த வீட்டுக்குள் நுழைந்து கூரிய ஆயுதங்களால் கடந்த 12ஆம் திகதி பகல் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இரு சகோதரர்களான சந்தேக நபர்கள் வெட்டிக் கொலை செய்துள்ளனர்.

இவ்வாறு வெட்டிக்கொலை செய்யப்பட்ட இருவரும் தகப்பனும் மகனும் என்பது விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. இரு சாராருக்குமிடையில் மிக நீண்ட நாட்களாக இருந்துவந்த பகைமை காரணமாக இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இராஜாங்கனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இருவேறு விபத்துகளில் மூவர் பலி

**(அநுராதபுரம் நிருபர்)**

அநுராதபுரம் பொலிஸ் பிராந்தியத்துக்குட்பட்ட இரு வெவ்வேறு பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற கோர விபத்துகளில் இராணுவ மேஜர் மற்றும் இராணுவ சாரதி உள்ளிட்ட மூவர் உயிரிழந்துள்ளதாக பிராந்திய போக்குவரத்து பிரிவின் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மிஹிந்தலை மற்றும் திறப்பனை பொலிஸ் பிரிவுகளிலேயே இவ்விபத்துச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

மிஹிந்தலை பொலிஸ் பிரிவின் வெல்லமொரன பகுதியில் இராணுவ கெப் வண்டியொன்று வீதியை விட்டு விலகி மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது. இச்சம்பவத்தில் கெப்வண்டியில் பயணித்த 37 வயதுடைய இராணுவ மேஜர் ஒருவரும் 25 வயதுடைய இராணுவ சாரதியொருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் இருவரும் அநுராதபுரம் 21ஆவது படையணி இராணுவ முகாமில் கடமையாற்றியவர்கள் என ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை, திறப்பனை, ஞானிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் (15) வேன் ஒன்று விபத்துக்குள்ளானதில் சிவலாக்குளம் பகுதியை வசிப்பிடமாக கொண்ட குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மிஹிந்தலை மற்றும் திறப்பனை பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (16.04.2025)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 184.5729 | 194.0925 |
| கனேடியன் டொலர் | 209.4213 | 218.3385 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.3152 | 41.9551 |
| யூரோ | 331.3321 | 344.6445 |
| ஜப்பான் யென் | 2.0510 | 2.1320 |
| சிங்கப்பூர் டொலர் | 221.6729 | 231.6321 |
| ஸ்ரேலிங் பவுன் | 388.1464 | 402.6448 |
| சுவிஸ் பிரான்ங் | 356.5209 | 373.2025 |
| ஐ.அ. டொலர் | 293.9185 | 302.6158 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 790.9324 |
| குவைட் | குவைட் தினார் | 971.6083 |
| ஓமான் | ஓமான் றியால் | 774.4246 |
| கட்டார் | கட்டார் றியால் | 81.7847 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 79.4526 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 81.1691 |


# வாகனங்கள் விற்பனைக்கு விலைமனுக்கோரல்

| வாகன இலக்கம் | செசி இலக்கம் | வாகன வகை | தயாரிப்பு வகை |
|---|---|---|---|
| 15 - 1XXX | AE81-6116362 | MOTOR CAR | TOYOTA COROLLA-AE81 |
| 15 - 3XXX | KE72-6004157 | MOTOR CAR | TOYOTA COROLLA-KE72 |
| EP-KA - 7XXX | KMHAC51GRXU179088 | MOTOR CAR | HYUNDAI ATOS GLSM |
| WP-KI - 5XXX | LVVDB22A67D004995 | MOTOR CAR | CHERY QQ |
| 14 - 1XXX | CSNC12AGU00279 | MOTOR CAR | MITSUBISHI LANCER |
| SP-KS - 5XXX | MAT612228CKR02178 | MOTOR CAR | TATA NANO |
| WP-HC - 6XXX | KNAGD222235232426 | MOTOR CAR | KIA OPTIMA |
| 14 - 4XXX | AE80-0003009 | MOTOR CAR | TOYOTA COROLLA-AE80 |
| 14 - 0XXX | B11-038863 | MOTOR CAR | NISSAN SUNNY-B11 |
| 18 - 4XXX | CSNCB2APU00933 | MOTOR CAR | MITSUBISHI LANCER |
| 15 - 5XXX | KMHTF31EPJU-262084 | MOTOR CAR | HYUNDAI STELLAR |
| 17 - 3XXX | AE81-6391603 | MOTOR CAR | TOYOTA AE81-COROLLA |
| WP-KA - 1XXX | MAT6002025PR52258 | MOTOR CAR | TATA INDICA |
| 18 - 3XXX | JF1AC1JR0CB618986 | MOTOR CAR | SUBARU JF1AC |
| 18 - 9XXX | MHEBC104100006428 | MOTOR CAR | MAZDA MISTER LX |
| 251 - 7XXX | VVJC23100817 | MOTOR VAN | NISSAN VVJC23 |
| 57 - 3XXX | VVJC23-003217 | MOTOR VAN | NISSAN SERENA |
| 30 - 7XXX | LH30V-360522 | MOTOR VAN | TOYOTA HIACE |
| SG-LC - 5XXX | LWU5L1E4X6KMC1003 | MOTOR LORRY | ATCO KMC-1021 |
| CP-LF - 3XXX | LVBV3JBB88E005935 | MOTOR LORRY | FOTON BJ1036V3JB3-R |
| NP-LF - 2XXX | LVBV3JBB38E005938 | MOTOR LORRY | FOTON BJ1036V3JB3-R |
| UP-LF - 0XXX | LVBV3JBB17E004348 | MOTOR LORRY | FOTON BJ1036V3JB3-R |
| SP-LF - 7XXX | MAT4450518VR28482 | MOTOR LORRY | TATA ACE |
| 42 - 6XXX | TF22002816 | MOTOR LORRY | NISSAN TF22 |
| CP-LF - 3XXX | LNJADDA167KC28018 | MOTOR LORRY | YUEJIN NJ1020DU |
| 40 - 5XXX | FE211E96641 | MOTOR LORRY | MITSUBISHI CANTER |
| 42 - 3XXX | FE214E559076 | MOTOR LORRY | MITSUBISHI FE214FZ |
| SP-LK - 8XXX | LVBV3JBB7CE191735 | MOTOR LORRY | FOTON BJ1036V3JB3-R |
| 43 - 1XXX | MH40-061689 | MOTOR LORRY | NISSAN ATLAS |
| NC-PW - 4XXX | MAT445235DZR51149 | MINI TRUCK | TATA ACE EX2 |
| WP-PS - 1XXX | MAT445051BZRA4632 | MINI TRUCK | TATA ACE EX |
| SP-DAF - 5XXX | LSYCJD2D0EG273102 | MINI TRUCK | BRILLIANCE SHINERY SY1020DB3AJI |
| NW-PU - 7XXX | LVAV3JA28CN011877 | MINI TRUCK | FOTON BJ1028V3JA2 1 |
| NC-LD - 0XXX | MAT4450105RR46807 | MINI TRUCK | TATA ACE |
| NW-DAD- 3XXX | MA1FA2HRRF6J22522 | MINI TRUCK | MAHINDRA MAXIMO PLUS VX |
| CP-PY - 7XXX | MA1FA2HRRE6L28719 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO PLUS |
| CP-PV - 8XXX | LGHT1A171D9801323 | MINI TRUCK | DFSK EQ1020DR |
| SP-PR - 7XXX | MA1FA2HRRB6J13964 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO |
| CP-PW - 7XXX | MA1FA2HRRD6G23278 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO PLUS |
| CP-PW - 5XXX | MBX0000VBPG239928 | MINI TRUCK | PIAGGIO APE MINI |
| SG-PU - 6XXX | LGHT1A174C9747479 | MINI TRUCK | DFSK EQ1020DR |
| NW-PW - 5XXX | MAT483149DYR20973 | MINI TRUCK | TATA SUPER ACE |
| NP-PS - 3XXX | MA1FA2HRRC6A10986 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO |
| NP-PV - 5XXX | MAT445224DZR12185 | MINI TRUCK | TATA ACE EX |
| NC-PS - 4XXX | LGHT1A175B9J94906 | MINI TRUCK | DFSK EQ1020DR |
| CP-PW - 6XXX | LSCAB13G7DE002663 | MINI TRUCK | CHANA MICRO LOADER |
| NW-PU - 9XXX | MA1FA2HRRD6A20505 | MINI TRUCK | FL0153779 MAXXIMO |
| CP-PQ - 7XXX | MA1FA2HRRB6E28828 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO |
| SP-PR - 1XXX | MA1FA2HRRB6G34731 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO |
| WP-PT - 7XXX | MA1FA2HRRC6D30698 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO |
| SG-PX - 8XXX | LJ11KKA1XE2204460 | MINI TRUCK | JAC HFC1028M |
| CP-PY - 6XXX | MA1FA2HRRE6J25353 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO PLUS |
| CP-PV - 9XXX | LGHT1A175D9801258 | MINI TRUCK | DFSK EQ1020DR |
| SG-PU - 5XXX | MA1FA2HRRC6H22467 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO |
| NW-PY - 0XXX | LGHT1A172D9817840 | MINI TRUCK | DFSK EQ1020DR |
| WP-PW - 7XXX | LSCAB13GXDE002625 | MINI TRUCK | CHANA MICRO LOADER |
| NC-RF - 3XXX | NH7367152 | TRACTOR | NEW HOLLAND 4710 |
| NP-RF - 2XXX | MEA66E77YH1154864 | TRACTOR | WHEEL TAFE 45 DI |
| NC-RD - 9XXX | MEA5E0E1YF1046822 | TRACTOR | TAFE 45 DI |

| | |
|---|---|
| • வாகனம் பரிசோதனை செய்தல் | : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல். |
| • வாகனம் பரிசோதனை செய்யும் கால எல்லை | : 2025 ஏப்ரல் 17, 18ஆம் திகதிகளில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 4.00 மணி வரை. ஏப்ரல் 19 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை மட்டும். |
| • டென்டர் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி | : 2025 ஏப்ரல் 19 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை. |
| • டென்டர் பத்திரத்தின் விலை | : ரூபா.250/- (மீளப்பெற முடியாது) |
| • டென்டர் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரி | : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல். |
| • டென்டர் பெட்டி வைக்கப்பட்டுள்ள, டென்டர் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி | : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல். |

**டென்டர் பத்திரங்களை தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கையளிக்க முடியும். தபால் மூலம் அனுப்பும் டென்டர் பத்திர கடித உறையின் முன் பக்க இடது புற மேல் மூலையில் "வாகன விற்பனைக்கான விலைமனுக்களுக்கான அழைப்பு" என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். மேற் குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் தற்போதுள்ள நிலையில் பெற்றுக்கொடுப்பதுடன், டென்டர் கோருவதற்கு முன் அகற்றும் உரிமை நிறுவன வசமானதாகும்.**

முகாமையாளர்,

**கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ.**

வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.

**தொலைபேசி இல. 0112 000 000**

COMMERCIAL CREDIT

# அரசுக்குச் சொந்தமான லக்திவ பொறியியல் நிறுவனத்தின்மூலம் 65 பஸ்கள் மீள் உற்பத்தி



இலங்கை போக்குவரத்து சபை பஸ்களின் பாகங்களை பழுதுபார்க்கும் அரசுக்குச் சொந்தமான லக்திவ பொறியியல் நிறுவனம், 2024 டிசம்பர் முதல் இதுவரை 65 பஸ்களை மீள் உற்பத்தி செய்துள்ளதாக போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேகர தெரிவித்தார்.

லக்திவ பொறியியல் நிறுவனத்தின் நடவடிக்கைகளை ஆய்வுசெய்ய பிரதி அமைச்சர் குணசேகர விஜயம் மேற்கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

லக்திவ நிறுவனம் டிசம்பர் 2024 இல் 03 பஸ்களை இணைத்ததாகவும் 2025 ஜனவரியில் 12 பஸ்களையும் பெப்ரவரியில் 28 பஸ்களையும் மார்ச் மாதத்தில் 22 பஸ்களையும் உற்பத்தி செய்துள்ளது.

லக்திவ பொறியியல் நிறுவனம் போக்குவரத்து அமைச்சின் கீழ் உள்ள 16 நிறுவனங்களில் ஒன்றாகும். இது மூடப்படவிருந்த நிலையில், தற்போதைய அரசாங்கத்தின் கீழ், மீண்டும் புதுப்பிக்கப்பட்டு செயற்பாட்டுக்கு வந்துள்ளது.

எதிர்காலத்தில் இந்த நிறுவனத்தை அரசாங்க வாகனங்களுக்கான சேவை நிலையமாக மேம்படுத்தவும் திட்டங்கள் நடந்து வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

# 23 கோடி ரூபா பெறுமதியான குஷ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது



கட்டுநாயக்க விமான நிலையத்தில் ரூ. 230 மில்லியன் பெறுமதியான 'குஷ்' (Kush) போதைப்பொருளுடன் அமெரிக்க பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுங்கப் பிரிவின் போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையில், 31 வயதுடைய அமெரிக்க பிரஜை ஒருவரே கைதாகியுள்ளார். அவர் அமெரிக்காவில் செயற்படும் ரியல் எஸ்டேட் நிறுவனமொன்றில் பணியாற்றுபவர் என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பயணி, நேற்று முன்தினம் (15) முற்பகல் 10.15 மணியளவில், தாய்லாந்தின் பாங்கொக்கிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் UL-403 விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

பின்னர் வர்த்தகர்களுக்குரிய Red Channel ஊடாக விமான நிலையத்தை விட்டு வெளியேற முயன்றபோதே, சந்தேகத்தின் பேரில் அவர் சோதனைக்குட்படுத்தப்பட்டார்.


அப்போது அவரது பயணப்பைகளில் 1 கிலோகிராம் எடையுடைய 23 பொதிகளில் மொத்தமான 23 கிலோகிராம் 'குஷ்' போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட போதைப்பொருளை, சுங்கத் திணைக்கள ஆணையாளர் நாயகம் சரத் நோனிஸ் மற்றும் மேலதிக பணிப்பாளர் நாயகமும் சுங்க ஊடகப் பேச்சாளருமான சீவலி அருக்கொட நேரில் பார்வையிட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# ஆயிரத்தைத் தாண்டியது தேர்தல் விதிமீறல்கள்

## இதுவரை 1387 முறைப்பாடுகள் பதிவு



உள்ளூராட்சித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கையை தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

அதனடிப்படையில், இதுவரை 1,387 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், இதுவரை 08 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 45 முறைப்பாடுகள் பதிவாகியுள்ள நிலையில், தேர்தல் குறித்த வன்முறைச் சம்பவம் 01 பதிவாகியுள்ளதாக என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பான முறைப்பாடுகளே இதுவரை அதிகமாக கிடைக்கப் பெற்றுள்ளன. அது 1,293 ஆக பதிவாகியுள்ளது.

அதனடிப்படையில், இதுவரையான முறைப்பாடுகளில் 1,214 முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் கண்டறியப்பட்ட நிலையில், 173 முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

# வெலிக்கடை சிறைக்கைதிகள் தயாரித்த இலங்கையின் மிகப்பெரிய பாற்சோறு



சிங்கள, தமிழ் புத்தாண்டை முன்னிட்டு, வெலிக்கடை சிறைச்சாலையில் உள்ள கைதிகள் கடந்த திங்கட்கிழமை (14) இலங்கையின் மிகப்பெரிய பாற்சோறு தயாரித்தனர்.

சிறைச்சாலை சமையலறையில் பணிபுரியும் 50 கைதிகளின் உதவியுடன், 400 கிலோகிராம் பச்சை அரிசி மற்றும் 705 தேங்காய்களைப் பயன்படுத்தி இந்த மிகப்பெரிய பாற்சோறு தயாரிக்கப்பட்டது. அதனுடன், 60 கிலோ வெங்காயம், 12 கிலோ காய்ந்த மிளகாய், 07 கிலோ பச்சை மிளகாய், தலா 10 கிலோ தக்காளி மற்றும் தேசிக்காய், 30 கிலோ உப்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி பாற்சோறு தயாரிக்கப்பட்டது.

வெலிக்கடையில் உள்ள கிட்டத்தட்ட 3,300 ஆண் மற்றும் பெண் கைதிகள் இந்த பண்டிகை உணவைப் பகிர்ந்துகொண்டனர். ஒவ்வொருவருக்கும் 225 கிராம் பாற்சோறு வழங்கப்பட்டது.

சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் ஆணையர் காமினி பி.திசாநாயக்கவின் கூற்றுப்படி, நாட்டின் அனைத்து சிறைச்சாலைகளிலும் உள்ள சுமார் 30,000 கைதிகளுக்கு பாற்சோறு தயாரிக்கப்பட்டது.

இது சிறைகளுக்குப் பின்னால் ஒற்றுமை மற்றும் பாரம்பரியத்தின் அரிய தருணத்தை பிரதிபலிக்கிறது.

பாற்சோறு தயாரிப்பதைத் தவிர, நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளில் புத்தாண்டு சடங்குகள் கடைபிடிக்கப்பட்டன. மேலும் நேற்று 16ஆம் திகதி கைதிகளுக்கு எண்ணெய் தேய்க்கும் நிகழ்வும் நடைபெற்றது.

# கேட்ஹவுஸ் யூகேயின் ஸ்ரீலங்கா பல்கலையின் 7ஆவது பட்டமளிப்பு விழா







**ஏ.எஸ்.எம்.ஜாவித்**

கேட்ஹவுஸ் யூகேயின் ஸ்ரீலங்கா பல்கலைக்கழகத்தின் 7ஆவது பட்டமளிப்பு விழா அண்மையில் (12) பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கேட்ஹவுஸ் பல்கலைக்கழகத்தின் இலங்கைக் கிளையின் பணிப்பாளர் கலாநிதி நஜிமுதீன் செய்னுலாப்தீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பட்டமளிப்பு விழா தொடர்பான விளக்கத்தை சிரேஷ்ட கல்விப் பணிப்பாளர் பேராசிரியர் கலாநிதி சீகாஸ் டூரே வழங்கினார். கேட்ஹவுஸ் பட்டமளிப்பு விழாவின் பணிப்பாளர் மொஹமட் இல்யாஸ் நூர் நக்பா வரவேற்புரையையும் தலைமை உரையை கேட்ஹவுஸ் பல்கலைக்கழகத்தின் இலங்கைக் கிளையின் பணிப்பாளர் கலாநிதி நஜிமுதீன் செய்னுலாப்தீனும் வழங்கினர்.

பிரதம அதிதி, கௌரவ அதிதிகளின் உரையையடுத்து விசேட பேச்சாளராக கலந்துகொண்டு பேராசிரியர் கலாநிதி சந்திமா விஜயகுண சொற்பொழி வாற்றினார்.

இதன்போது சுமார் 500க்கும் மேற்பட்ட பல்துறைகளையும் சார்ந்தவர்கள் பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கைக்கான மாலைதீவு நாட்டின் உயர்ஸ்தானிகர் கலாநிதி மஹ்தி ஸாஹித், கௌரவ அதிதியாக இலங்கைக்கான மலேஷிய உயர்ஸ்தானிகராலயத்தின் கவுன்சிலர் மொஹமட் தமிங் உள்ளிட்ட கல்விமான்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.





**கண்டி அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய வருடாந்த தேர்த் திருவிழாவை முன்னிட்டு பஞ்சரத பவனி அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர். இதன்போது 'தமிழன்' பத்திரிகை ஆலய குருக்களிடம் கையளிக்கப்பட்டது.**

**(அருணாசலம் லெட்சுமணன், டி.வசந்த்)**









**ஸ்ரீ ஜயவர்தனபுர இந்து வித்தியாலய மாணவர்களின் கண்காட்சி அதிபர் பேரின்பராஜா தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சரோஜா கலந்து சிறப்பித்தார்.**

# கம்பஹா துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்: கனேமுல்ல சஞ்சீவவின் கொலைக்கு பழிவாங்கலா?

## பல கோணங்களில் பொலிஸார் விசாரணை



கம்பஹா பஸ் நிலையத்துக்கு அருகில் நேற்று முன்தினம் (15) இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம், கனேமுல்ல சஞ்சீவவின் கொலைச் சம்பவத்துக்கு பழிவாங்கும் தாக்குதலாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள் இருவர் ஓடும் சிறிய லொறிமீது துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

துப்பாக்கிச் சூடு நடந்த நேரத்தில், லொறியில் பயணித்த இருவரும் வாகனத்தை விட்டு வெளியேறி அருகிலுள்ள கடைக்குள் ஓடியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இருவருக்குமே எந்த காயமும் ஏற்படவில்லை என்று பொலிஸார் உறுதிப்படுத்தியதுடன், இந்தச் சம்பவத்தில் வாகனம் மட்டுமே சேதமடைந்தது.

பாதாள உலகக் குற்றவாளியான கனேமுல்ல சஞ்சீவ கொலையில் முக்கிய சந்தேக நபரான அவிஷ்கா மல்லியின் நெருங்கிய உறவினரை தாக்குதல் நடத்தியவர்கள் குறிவைத்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இலக்கு வைக்கப்பட்டதாகக் கருதப்படும் நபருக்கு எந்த குற்றப் பின்னணியும் இல்லை என்று பொலிஸார் உறுதிப்படுத்தினர்.

கம்பஹா பொலிஸார் இச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.


## Now you can subscribe the following Newspapers

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address : - The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209

# தியாக தீபம் அன்னை பூபதியின் நினைவேந்தல்

## வெளிநாட்டில் பணம் பெற்ற மனிதநேய செயற்பாட்டாளர்கள் மூவருக்கெதிராக அன்னையின் மகள் பொலிஸில் முறைப்பாடு

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு, நாவலடியில் அமைந்துள்ள தியாக தீபம் அன்னை பூபதியின் நினைவேந்தலை வைத்து வெளிநாடுகளிலிருந்து பணத்தைப் பெற்று அதனை ஓர் அரசியலாக்கி நினைவேந்தலை செய்யவுள்ளதாகவும் அதனைத் தடைசெய்யுமாறும் மூவருக்கு எதிராக அன்னை பூபதியின் மகள் சாந்தி செவ்வாய்க்கிழமை (15) முறைப்பாடு செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இதுபற்றி தெரியவருவதாவது,

தியாக தீபம் அன்னை பூபதியின் 37ஆவது நினைவேந்தல் எதிர்வரும் 19ஆம் திகதி அவரது சமாதியில் இடம்பெறவுள்ளது. இந்நிலையில், குறித்த நினைவேந்தலை முன்னிட்டு மனிதநேய செயற்பாட்டாளர்களான சிவயோகநாதன், செல்வகுமார், அரவிந்தன் ஆகியோர் நோர்வே நாட்டிலிருந்து தனது தாயாரின் பெயரைப் பாவித்து பணத்தைப் பெற்று விளையாட்டுப் போட்டிகள் மற்றும் அன்னையின் திருவுருவப் படத்தை வாகனத்தில் வைத்து ஊர்வலமாகக் கொண்டு செல்வதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

எனவே, அமைதியாகச் செய்யவேண்டிய இந்த நினைவேந்தலை இவர்கள் அரசியலாக்கி இலாபமடையவுள்ளனர். இவ்வாறு செய்வதை நான் விரும்பவில்லை. ஆகவே, இந்த மூவரின் செயற்பாட்டை தடுத்துநிறுத்தி இவர்களை தடைசெய்து அமைதியாக நினைவேந்தலை நடத்துவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தித் தருமாறு குறிப்பிட்டு அவர்களுக்கு எதிராக அன்னை பூபதியின் மகள் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# பழக்கடையை பரிசோதனை செய்யவிடாது இடையூறு

## உரிமையாளருக்கெதிராக வழக்குப் பதிவு

**(பாறுக் ஷிஹான்)**

அரச கடமைக்கு இடையூறு ஏற்படுத்திய பழக் கடை உரிமையாளருக்கு சீரப்பிணையில் செல்ல கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பழக்கடைகளின் நிலைமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடு ஒன்றுக்கமைய செவ்வாய்க்கிழமை(15) சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குழு பிரதான வீதியிலுள்ள பழக்கடையொன்றை திடீர் சோதனை மேற்கொள்வதற்காக சென்றிருந்தனர்.

இதன்போது அப்பழக் கடையின் உரிமையாளரென தன்னை அடையாளப்படுத்திக்கொண்ட நபர் தனது கடையை பரிசோதனை செய்ய வேண்டாமென தடுத்ததுடன் வாக்குவாதத்திலும் ஈடுபட்டு அங்கு சென்ற சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான பொதுச் சுகாதார பரிசோதகர்களின் கடமையை செய்ய விடாது இடையூறு ஏற்படுத்தியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து சாய்ந்தமருது பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதுடன், பொலிஸாரின் உதவியுடன் கடையின் உரிமையாளர் கைதுசெய்யப்பட்டு பின்னர் குறித்த பழக்கடை உரிமையாளருக்கு எதிராக அன்றைய தினம் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

இதன்போது குறித்த பழக்கடை உரிமையாளரை ஒரு இலட்சம் ரூபா சீரப் பிணையில் கல்முனை நீதிவான் நீதிமன்று விடுவித்துள்ளதுடன், எதிர் வரும் மே 19ஆம் திகதிவரை வழக்கு விசாரணையை ஒத்திவைத்தது.

மேலும் குறித்த பழக்கடையை மீள்பரிசோதனை செய்து ஏதேனும் குறைபாடுகள் மற்றும் சுகாதார சீர்கேடுகள் காணப்படும் பட்சத்தில் கல்முனை நீதவான் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஊழலுக்கெதிரான தேசிய செயற்பாட்டு திட்டத்தின் விசேட அலகு திறந்துவைப்பு

**(மட்டக்களப்பு)**

ஊழலுக்கு எதிரான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தின் உள்ளக அலுவல்கள் பிரிவு, மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று(16) திறந்துவைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைவாக அமைச்சரவை அங்கீகாரத்துடன் ‘நேர்மையான இலங்கை’ எனும் தொனிப்பொருளில் இலங்கையின் ஊழலுக்கெதிரான தேசிய செயற்பாட்டுத் திட்டம் 2025 - 2029 இணை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் நிலையில், குறித்த விடயம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்படவுள்ள உள்ளக அலுவல்கள் பிரிவே நேற்று புதன்கிழமை மட்டக்களப்பு திராய்மடுவில் அமைந்துள்ள மாவட்ட செயலக கட்டடத்தில் மாவட்ட அரசாங்க அதிபரால் திறந்துவைக்கப்பட்டது.

இலங்கை சமூகம் முழுவதும் பரவியுள்ள இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழிப்பதற்கும் ஊழல் குறிகாட்டிகளில் எமது நாட்டின் மோசமான தரநிலையால் எமது நாடு இழந்துள்ள பொருளாதார வாய்ப்புகளை மீண்டும் உருவாக்குவதற்கும் அரசாங்கம் முன்னெடுக்கும் பணிக்கான வலுவான அணுகுமுறையாக ஊழலுக்கெதிரான தேசிய செயற்பாட்டுத் திட்டம் வலுச்சேர்க்கும் என்பதுடன், சுதந்திரமடைந்து ஏழு தசாப்தங்களைக் கடந்துள்ள எமது நாடு அபிவிருத்தியடைந்த நாடாக மாறத் தவற விட்டுள்ளதைக் கருத்திற்கொண்டு, வலுவான உற்பத்திப் பொருளாதாரத்துடன் கூடிய முன்னேற்றகரமான, நவீன இலங்கை அரசைக் கட்டியெழுப்பும் பொறுப்பை இப் புதிய அரசாங்கம், நாட்டிலுள்ள ஊழலின் மூலங்களைக் கண்டறிந்து அவற்றை ஒழிக்கும் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளது.

அனைவருக்கும் நியாயமானதும் சமமானதுமான நீதிக் கட்டமைப்பை நிறுவவும் சுயாதீனமாகவும் திறமையாகவும் நீதியை நிலைநாட்டுவதற்கும் அந்த சட்டச் செயற்பாட்டில் பொதுமக்களின் நம்பிக்கையை உறுதிசெய்வதற்கும் சட்டத்தின் ஆட்சியை நிறுவுவது மிக முக்கியமானது.



இந்த நோக்கத்துக்காக வலுவான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவரும் அதேவேளை, ஊழலை எதிர்த்துப் போராடுவதில் முன்னோடி நிறுவனமான இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு செயற்றிறன், இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழிப்பதில் அரசாங்கத்தால் எதிர்பார்க்கப்படும் செயற்றிறனுடன் இணைந்து காணப்படுகின்றது.

“அழகான தீவு, மகிழ்ச்சி நிறைந்த மக்கள்” எனும் தொலைநோக்குடன் அரசாங்கத்தால் செயற்படுத்தப்படும் ‘கிளீன் ஸ்ரீ லங்கா’ திட்டத்தின் நெறிமுறையான குறிக்கோள்களை வெளிப்படைத்தன்மை, பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் அடிப்படையில் முன்னெடுப்பதற்காக பிரஜைகளின் நெறிமுறைகளை மேம்படுத்துவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகத் திகழ்வதனால், இந்த நோக்கங்களை அடைவதற்கே ஊழலுக்கு எதிரான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மாவட்ட ரீதியாக அலுவலகங்கள் திறக்கப்பட்டு செயற்றிறனுடன் திறம்பச் செயற்படவுள்ளது.

அதன் ஓர் அங்கமாகவே மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மேலதிக மாவட்ட செயலாளர் திருமதி சுதர்சனி ஸ்ரீகாந்த்தை பணிப்பாளராகக் கொண்டு உள்ளக அலுவல்கள் பிரிவு செயற்படவுள்ளது.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர்களான திருமதி சுதர்சனி ஸ்ரீகாந்த், திருமதி நவரூபரஞ்ஜனி முகுந்தன் (காணி), பிரதம கணக்காளர் திருமதி ஆர்.காயத்திரி, மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எஸ்.ராஜ்பாபு, உதவி மாவட்ட அரசாங்க அதிபர் ஜீ.பிரணவன், மாவட்ட செயலக பிரதம பொறியியலாளர் ரீ.சுமன், மாவட்ட செயலக கணக்காளர் எம்.வினோத், மாவட்ட புள்ளிவிபரவியலாளர் ரீ.ஜெய்த்தனன், மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே.மதிவண்ணன், மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர் பா.ஜெயகாந்தன், மாவட்ட ஊடகப் பிரிவின் பொறுப்பதிகாரி வ.ஜீவானந்தன் உள்ளிட்ட மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

ஊழலுக்கு எதிரான தேசிய செயற்பாட்டுத் திட்டம் 2025 - 2029 இனுள் நிகழ்நிலையில் பிரவேசிக்கக்கூடிய வகையிலான QR குறியீடும் இதன்போது அறிமுகம் செய்துவைக்கப்பட்டதுடன், குறித்த விடயம் தொடர்பாக பொதுமக்களுக்கான இலகு வழிகாட்டல்களை மேற்கொள்ளும் வண்ணம் மாவட்ட செயலக முன்வாயிலில் நிறுவப்பட்டுள்ள விளம்பரப் பலகையும் அரசாங்க அதிபரால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறை சிகை அலங்கார நிலையத்திலிருந்து சடலம் மீட்பு

**(பாறுக் ஷிஹான்)**

கதிரையொன்றில் அமர்ந்தவாறு மூன்று நாட்களுக்கு மேலாக இறந்த நிலையில் சடலமொன்றை சம்மாந்துறை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விளினையடி சந்திப் பகுதியிலுள்ள சிகை அலங்காரக் கடையொன்றில் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவலொன்றுக்கமைய செவ்வாய்க்கிழமை (15) மாலை குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சுமார் 50 வயது மதிக்கத்தக்க ஆணொருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவர் சிகை அலங்கார நிலையமொன்றை வாடகைக்கு நடத்தி வந்துள்ளார். இவர், ஏறாவூர் பகுதியைச் சேர்ந்தவர் என ஆரம்ப கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. மேலும், குறித்த நபர் பணிகளை முடித்துவிட்டு கடையறைக்குள் இரவில் நித்திரைக்கொள்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலையில், மூன்று நாட்களுக்குப் பிறகு அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.இது கொலையா அல்லது தற்கொலையா என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## மோட்டார்சைக்கிள் நாயுடன் மோதி விபத்து: பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழப்பு

**(பதுர்தீன் சிஹானா)**

திருகோணமலை, மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரொட்டவெவ பகுதியில் மது போதையில் மோட்டார் சைக்கிளில் வந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நாயுடன் மோதி விபத்துக்குள்ளாகி, திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி செவ்வாய்க்கிழமை (15) உயிரிழந்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 24ஆம் திகதி மது போதையில் மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்த இவர் நாயுடன் மோதி விபத்துக்குள்ளானார். பின்னர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வந்த நிலையில், குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். சடலம் உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் ஹொரவப்பொத்தானை பகுதியைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## இறக்காமத்தில் ஐஸுடன் வியாபாரி ஒருவர் கைது

**(கனகராசா சரவணன்)**

அம்பாறை, இறக்காமம் பிரதேசத்தில் 810 கிராம் ஐஸ்போதைப்பொருளுடன் வியாபாரி ஒருவரை செவ்வாய்க்கிழமை (15) இரவு கைதுசெய்துள்ளதாக இறக்காமம் பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை விசேட புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலொன்றையடுத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினருடன் விசேட புலனாய்வுப் பிரிவினர் இணைந்து குறித்த போதைப்பொருள் வியாபாரியின் வீட்டை சம்பவதினம் இரவு 11.00 மணியளவில் முற்றுகையிட்டு சோதனையிட்டனர்.

இதன்போது வியாபாரத்துக்காக கொண்டுவந்த 810 கிராம் ஐஸ் போதைப்பொருளை மீட்டதுடன், 32 வயதுடைய வியாபாரியை கைதுசெய்தனர். இதன்போது கைதுசெய்யப்பட்டவர் நீண்டகாலமாக போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் இவரை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



**விசேட தேவையுடைய மாணவர்களின் சித்திரைப் புத்தாண்டு நிகழ்வு திருகோணமலை, மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள HOPE நிறுவனத்தில் அதன் பணிப்பாளர் செ.கிருபாகரன் தலைமையில் செவ்வாய்க்கிழமை (15) நடைபெற்றது. இதன்போது HOPE நிறுவனத்தின் செயலாளர் ச.லட்சுமணன், உறுப்பினர் த.ரொஹான், பட்டினமும் சூழலும் சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.கௌரிசாந், மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் தெ.புரபானந்தன் ,ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.**

**(கிண்ணியா செய்தியாளர்)**

# மட்டு., அம்பாறை மாவட்டங்களில் வெள்ளரிப்பழத்துக்கு அதிக கிராக்கி

**(மட்டக்களப்பு)**

கிழக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக கரையோரப் பகுதிகளில் பிரதான வீதியோரங்களில் ஆங்காங்கே வெள்ளரிப்பழம் உட்பட பழவகைகள் அமோகமாக விற்பனையாகி வருகின்றன.

குறிப்பாக, சம்மாந்துறை - அம்பாறை பிரதான வீதி, மட்டக்களப்பு, கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதியோரங்களில் துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டிகளில் வெள்ளரிப்பழத்தை வியாபாரிகள் விற்பனைசெய்து வருகின்றனர்.

சித்திரைப் புத்தாண்டு தினத்திலும் பொதுமக்கள் வெள்ளரிப்பழக் கொள்வனவில் ஆர்வத்துடன் ஈடுபட்டதை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் தற்போது நிலவி வருகின்ற வறட்சியான காலநிலையால் ஏற்பட்டுள்ள உடல் உஷ்ணத்தைத் தணிப்பதற்காக வெள்ளரிப்பழம் உட்பட ஏனைய பழ வகைகளைச் சாப்பிடுவதில் மக்கள் அதிக நாட்டங்கொண்டு வருகின்றனர். இவ்வாறு வெளியிடங்களிலிருந்து அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்கு வருகின்ற பழ வகைகளின் தரங்களைப் பரிசோதிப்பதற்கு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சஹீலா இஸ்ஸடீனின் ஆலோசனைக்கமைய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தினமும் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இக்காலத்தின் அதிக வெப்பத்தால் வெள்ளரிப் பழத்துக்கே அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளதுடன், 250 ரூபா முதல் சுமார் 850 ரூபாவரை வெள்ளரிப்பழங்கள் சிறியது முதல் பெரியது வரையான பருமனுக்கேற்ப விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.



வெப்பமான காலங்களிலேயே அதிகமாக வெள்ளரிப்பழ அறுவடையே மேற்கொள்ளப்படுவதுடன், மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான்குளம், செங்கலடி, களுதாவளை உள்ளிட்ட பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் வெள்ளரிப்பழங்கள் ஏனைய ஊர்களுக்கு விற்பனைக்காக கொண்டுசெல்லப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



**தமிழ் - சிங்கள சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மட்டக்களப்பு மாநகர சபையால் ஏற்பாடுசெய்யப்பட்ட பட்டத் திருவிழா கல்லடி கடற்கரையில் மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் நா.தனஞ்ஜெயன் தலைமையில் செவ்வாய்க்கிழமை (15) இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்துகொண்டார்.**

**(மட்டக்களப்பு)**

# கல்விச் சமூகமயமாக்கலில் உயர்வகுப்பு



சமூகமயமாக்கல் என்பது ஒரு சமூக செயன்முறையாகும். அதாவது, ஒரு நபர் குறிப்பிட்ட சமூகத்தின் நியமங்கள், விழுமியங்கள், நம்பிக்கைகள் மற்றும் நடத்தைகளைக் கற்றுக்கொள்வதற்கான செயன்முறையாகும்.

கல்விச் சமூகமயமாக்கல் என்பது கல்வியினூடாக சமூகத்துக்கு ஏற்புடைய தனிநபர்களை உருவாக்குவதாகும். மனிதன் ஒரு சமூகப் பிராணி என்ற ரீதியில் அவன் சமூகத்திலிருந்து செய்யக்கூடியவை, செய்யக்கூடாதவை என அனைத்தையும் கற்றுக்கொள்கின்றான்.

சமூக வகுப்பு என்பது ஒரு சமூகத்திலுள்ள தனியாட்கள் அல்லது குழுக்களுக்கிடையில் படிமுறை அமைப்புக்கான வேறுபாடாகும். சமூக வகுப்புகள் பல்வேறு வகையால் பிரிக்கப்பட்டபோதும் பெருமளவான உயர்வகுப்பு, மத்திய வகுப்பு, கீழ் வகுப்பு என்ற வகையில் பிரிக்கப்படுகிறது.

இந்த வகையில் உயர் வகுப்பு என்பது பொதுவாக ஒரு சமூகத்தில் பொருளாதார ரீதியில் மிகுந்த செல்வாக்கை மற்றும் உயர் சமூக அந்தஸ்தை உடையவர்களாக வரையறுக்கப்படுகின்றனர். மேலும், உயர்வகுப்பு என்ற சொல் சமூகத்தில் மிக உயர்ந்த இடத்தையும் அந்தஸ்தையும் வகிக்கும் தனிநபர்களின் குழுவைக் குறிக்கிறது. இவ்வுயர் வகுப்பினர் சமூகப் படிநிலையில் உழைக்கும் மற்றும் நடுத்தர வர்க்கத்தை விட உயர்ந்த நிலையில் மிகவும் செல்வந்தர்களாகக் கருதப்படுகிறார்கள். உயர்வகுப்பைச் சேர்ந்த தனிநபர்கள் அதிகளவிலான செலவழிக்கக்கூடிய வருமானத்தைக் கொண்டுள்ளனர்.

“வில்கென்டன், உயர்வகுப்பு: வரையறை சம்பளம் எடுத்துக்காட்டு மற்றும் பிற சமூக வகுப்புகள்” என்ற கட்டுரையில், 2018ஆம் ஆண்டு பியூ ஆராய்ச்சி மையத்தின் ஆய்வின்படி, அமெரிக்க பெரியவர்களில் 19 வீதம் பேர் உயர்வகுப்பு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். 2016ஆம் ஆண்டில் இந்தக் குடும்பங்கள் சராசரி வருமானம் 1,87,872 ரூபாவாக இருந்ததென உயர் வகுப்பினரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வகையில் உயர் வகுப்பினர்கள் காணப்பட்டாலும் இன்றைய நிலையிலும் கூட உயர் வகுப்பினர்களுக்கு கல்விச் சமூகமயமாக்கத்தில் பல்வேறு வாய்ப்புகள் கிடைக்கப்பெறுகின்றன. பாடசாலையின் வகைப்பாடு, கற்றல் கற்பித்தல் வளங்கள், பாடத்துறை பரீட்சை, பாடசாலை தெரிவு, கல்விப் பயன்கள் ஆகிய அனைத்து கல்வி சார்ந்த காரணிகளிலும் உயர் வகுப்பினரின் செல்வாக்கு அதிகரித்துக் காணப்படுகின்றது. பாடசாலைகளை நோக்குமிடத்து வளங்களை வழங்கும்போது உயர்வகுப்பு கொண்ட சமூகத்தினர் அதிக வாய்ப்பைப் பெற்றுக்கொள்கின்றனர்.

இன்றைய நிலையில் பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் உயர் வகுப்பைச் சேர்ந்த சமூகத்துக்கு அதிக முன்னுரிமை வழங்கப்படுகின்றது. எடுத்துக்காட்டாக தமிழ்த் தினப்போட்டி, ஆங்கில தினப்போட்டி போன்றவற்றுக்கு மாணவர்களைத் தெரிவுசெய்யும் போது உயர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு முதன்மையான முன்னுரிமை வழங்கப்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

சமூகத்தில் உயர்ந்த கல்விகற்ற வகுப்பினரின் பிள்ளைகளுக்குப் பாடசாலையில் தனி இடம் வகிக்கப்படுகின்றது. அதாவது, அதிகமாக உயர் வகுப்பைச் சேர்ந்தவர்களே மாணவத் தலைவர்களாகவும் வகுப்புத் தலைவர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டுக் காணப்படுகின்றனர். மேலும், சமூகத்தில் உயர் அந்தஸ்தில் காணப்படும் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை தேசிய ,சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகளில் இலகுவில் உள்நுழைப்பதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்கின்றனர். இதனடிப்படையில் உயர் வகுப்பினர் அதிகளவான வாய்ப்பைப் பெற்றுக்கொள்கின்றனர்.

இன்றைய சமூகத்தில் பெரும்பாலும் உயர் வகுப்பில் அரசியல்வாதிகள் முன்னிலைப்படுத்தப்படுகின்றனர். அரசியல்வாதிகளின் பிள்ளைகளுக்கு கல்வி வாய்ப்புகள் அதிகமாகவே கிடைக்கப்பெறுகின்றன. உயர் வகுப்பு குடும்பங்களில் தங்கள் குழந்தைகளுக்கு கல்வியில் சிறந்த மதிப்புகளை - சாதனைகளை அடையச்செய்ய ஊக்குவிப்பதன் மூலம் அவர்களின் சமூகநிலையை தக்கவைத்துக் கொள்கின்றனர். இது அவர்களை திறமையான, எளிதில் வேலை வாய்ப்புப் பெறக்கூடிய நபராக மாற்றுகின்றது. மேலும் உயர் வகுப்பினரில் வளர்ந்த மாணவர்கள் சமூகத்தில் அதிகமாக அனுபவப்படும் உறவுகள் மற்றும் நெறிமுறைகளின் மீது அதிக செல்வாக்கைக் கொண்டுள்ளனர். இதனால் அவர்கள் முன்னணி தொழில் முனைவோர்களாக, அரசியல்வாதிகளாக அல்லது சமூகத் தலைவர்களாக மாறுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

உயர்வகுப்பு சமூகத்தில் மாணவர்கள் பொதுவாக கல்வித் தரத்தில் முந்துகிறார்கள். அவர்கள் கல்வியில் எந்தப் பாடங்களைத் தெரிவு செய்வதும் எந்தப் பட்டப்படிப்பை தெரிவு செய்வதும் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கும். மேலும் இவர்களது சமூகநிலை, செல்வம் மற்றும் செல்வாக்கால் அந்த நிலையை மேம்படுத்திக்கொள்ள முடியும். உயர் வகுப்பினரின் குடும்பங்கள் சமுதாய அறத்தை, பண்பாடுகளை, கலாசாரத்தை, மதத்தை மற்றும் பிற சமுதாய சட்டங்களைப் பரிமாற்றம் செய்யும் பாணியில் பெரும்பாலும் உள்ளன. இந்தப் பண்பாட்டின் பரிமாற்றம் குறைந்த வருமானத்திலுள்ள மாணவர்களுடன் ஒப்பிடும்போது உயர் வகுப்பிலுள்ள மாணவர்களுக்கு பெரும்பாலும் உயர்ந்த பண்பாட்டுக் கலவை கிடைக்கப்பெறுகின்றது. இந்தவகையில் சமூகமயமாக்கத்தில் உயர் வகுப்பினரின் வாய்ப்புகள் ஒவ்வொன்றும் நிலைத்த தன்மையினதாகக் காணப்படுகின்றது.

மேலும், இன்றைய சமூகத்தைப் பொறுத்தவரையில் வைத்தியர் மற்றும் ஆசிரியர்கள், சட்டத்தரணிகள் ஆகியோரின் பிள்ளைகளுக்கு கல்விச் சமூகத்தில் முன்மாதிரியாகத் திகழ்வதற்கு அதிகளவான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதேபோன்று உயர்வான தொழிலைப் பெறுவதற்கும் அதிகளவிலான வாய்ப்பைப் பெற்றுக்கொள்கின்றனர்.

எந்தவொரு துறைகளிலும் உயர் சமூக வகுப்பினருக்கு அனைத்து இடங்களிலும் முக்கியத்துவம் கிடைக்கப்பெறுகின்றது. உதாரணமாக, பாடசாலையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் உயர் சமூகவகுப்பு மாணவர்களுக்கே ஆசிரியர்கள் அதிக ஊக்குவிப்பை வழங்குவர். இன்றைய சமூகத்தில் உயர் சமூக வகுப்பு பல்வேறு வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்கின்றது.

மேக்னே ப்ளெம்மென், “உயர் வர்க்கத்தின் அமைப்பு: ஒரு சமூகவெளி அணுகுமுறை” என்ற கட்டுரையில், 2018ஆம் ஆண்டு சமூகவியல் ஆய்வின்படி, பல்வேறு வகையான சொத்து உரிமையாளர்கள், உயர் நிர்வாகிகள் மற்றும் வணிக மேலாளர்களை உள்ளடக்கியதாக வரையறுக்கப்படும் நேர்வேயின் உயர் வகுப்பினருக்குள் உள்ள உள்பிளவுகளை அடையாளம் காண முயல்கிறது என உயர்வகுப்பைப் பற்றிக் கூறியுள்ளார்.

மேலும் உயர் வர்க்க இனப்பெருக்கத்தில் கல்விச் சான்றுகளின் பங்கு மற்றும் சமூக தோற்றத்தால் பிரிவுகளின் முக்கியத்துவம் உள்ளிட்ட உயரடுக்குகள் மற்றும் உயர்வகுப்புகளின் சமூகவியலை மையப் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன எனவும் உயர் வகுப்பினரைப் பற்றி இக்கட்டுரையில் கூறுகின்றார்.

இவ்வாறான உயர்வகுப்புகள் சமூகமயமாக்கத்தில் காணப்பட்டாலும் அமெரிக்காவில் உயர் வகுப்புகள் பற்றிய கருத்துகள் மேலோங்கப்பட்ட நிலையில் எடுத்துக்காட்டப்படுகின்றன. அதாவது, உயர் வகுப்பு மேல் என்று கருதப்படுகிறது. சக்திவாய்ந்த உயர் வகுப்பு மட்டும் அனைத்து வாய்ப்பையும் அனுபவிக்க முடியும். அமெரிக்காவில் அதிக செல்வம் உள்ளவர்கள் மக்கள்தொகையில் ஒரு சதவீதம் உள்ளனர். மேலும் இவர்கள் நாட்டின் செல்வத்தில் மூன்றில் ஒரு பங்காகக் காணப்படுகின்றனர்.

உயர் வகுப்பினர்கள் மிகவும் செல்வாக்குமிக்க கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் குழு உறுப்பினர்களாக, தொண்டுநிறுவுனர்களாக, சமூக காரணங்களுக்கு ஆதரவு நல்குபவர்களாக காணப்படுவர். மேலும் உயர் வகுப்பின் புதிய பண உறுப்பினர்கள் உயரடுக்கின் பழக்கங்கள் மற்றும் நெறிமுறைகளை நோக்கியதாக இல்லை. பாரிஸ்ஹில்டன் போன்றவர்கள் இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி பழைய சமூக உறவுகளை ஏற்படுத்தவில்லை எனக் குறிப்பிடுகின்றார்.

இந்த வகையில் கல்விச் சமூகமயமாக்கலில் உயர் வகுப்பு என்பது சமூக அமைப்பில் மிக முக்கியமான பங்கை வகிக்கின்றது. அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு தரமான கல்வி, வளங்கள், ஆதரவு மற்றும் வாய்ப்புகளை வழங்குகின்றனர். இது அப்பிள்ளைகளின் வாழ்க்கையை மிகவும் முன்னேற்றமடையச் செய்கின்றது.

இவ்வாறான உயர்வகுப்பினருக்கு அனைத்து வாய்ப்புகளும் கிடைக்கப்பெற்றாலும் இவர்கள் சமூகமயமாக்கலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துபவர்களாகக் காணப்படுகின்றனர். அதாவது, உயர்வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகளிடமிருந்து, கற்றலுக்கான வாய்ப்புகள், நிதியிடல் வாய்ப்புகள், சௌகரியமான வாழ்க்கை, தொழில்நுட்ப வசதி, சர்வதேச பரீட்சைகள் போன்றவற்றின் மூலம் உயர் அடைவை பாடசாலையும் சமூகமும் எதிர்பார்க்கின்றது. இதன் காரணமாக, மத்திய வகுப்பும் தாழ் வகுப்பும் இங்கு தாழ்த்தப்படுகின்றனர்.

மேலும் கற்கும் பாடசாலையைத் தெரிவுசெய்வதில் உயர் வகுப்பினர் அதிக செல்வாக்குடையவராகக் காணப்படுவதன் விளைவாக மத்திய வகுப்பினரும் தாழ் வகுப்பினரும் சர்வதேச பாடசாலைகள், தனியார் பாடசாலைகள், 1AB பாடசாலை போன்ற பாடசாலைகளுக்கு உள்நுழைவதற்கான வாய்ப்புகள் கிடைக்காமல் போகின்றது.

எனவே, உயர்வகுப்பினர் தங்கள் செல்வம், வாக்கு மற்றும் தொடர்புகள் மூலம் தாமே அனைத்து வாய்ப்புகளையும் பெற்றுக்கொள்ளாமல் ஏனைய வர்க்கத்தினருக்கு பல்வேறு வழிகளில் வாய்ப்புகளைப் பெற உதவினால் அவர்களும் சமூகத்தில் மதிக்கத்தக்க அளவில் காணப்படுவர். அதாவது, உயர்வகுப்பினர் வணிகங்களை நிறுவுதல் மற்றும் விரிவாக்கம் செய்தல் மூலம் பல்வேறு மட்டங்களில் வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும். அவர்களின் முதலீடுகள் மற்றும் தொழில் முயற்சிகள் குறைந்த மற்றும் நடுத்தர வர்க்கத்தினருக்கு வருமானம் ஈட்டவும் பொருளாதார ரீதியாக மேம்படவும் உதவும்.

தங்கள் வணிகங்களில் திறமை மற்றும் தகுதியின் அடிப்படையில் நியாயமான ஊதியத்துடன் வேலை வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் அனைத்து வர்க்கத்தினரும் முன்னேற ஒரு களத்தை உயர்வகுப்பினர் உருவாக்க முடியும். மேலும், உயர்வகுப்பினர் கல்வி நிறுவனங்களுக்கு நன்கொடைகள் வழங்குவதன் மூலமோ அல்லது அறக்கட்டளைகளை நிறுவுவதன் மூலமோ ஏழை மற்றும் பின்தங்கிய மாணவர்களுக்கு கல்வி வாய்ப்புகளை வழங்க முடியும்.

புலமைப்பரிசில்கள், கல்வி உதவித் தொகைகள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாடுகள் மூலம் தரமான கல்வியை அனைவருக்கும் கிடைக்கச் செய்யலாம். தனியார் பயிற்சி நிலையங்கள் அல்லது வழிகாட்டுதல் திட்டங்களை நிறுவுவதன் மூலம், பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்கள் போட்டிப் பரீட்சைகளுக்குத் தயாராகவும் சிறந்த கல்வி நிறுவனங்களில் உள்நுழையவும் உதவ முடியும். உயர்வகுப்பினரின் தொழில்முறை வலைப்பின்னல்கள் மற்றும் அனுபவத்தைப் பயன்படுத்தி, ஏனைய வர்க்கத்தினருக்கு தொழில் வழிகாட்டுதல் மற்றும் பயிற்சியளிக்க முடியும். இது குறிப்பாக, இளைஞர்கள் மற்றும் புதிய தொழிலைத் தொடங்குபவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இந்தவகையில் உயர்வகுப்பினர் தங்கள் நிறுவனங்களில் பயிற்சிப் பட்டறைகளை வழங்குவதன் மூலம், இளம் தலைமுறையினர் நடைமுறை அனுபவம் பெறவும் திறன்களை வளர்த்துக்கொள்ளவும் உதவ முடியும். இது அவர்களுக்கு எதிர்காலத்தில் சிறந்த வேலை வாய்ப்புகளைப் பெற வழிவகுக்கும்.

சமூகத்தில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்த முயலும் சமூக தொழில்முனைவோருக்கு உயர்வகுப்பினர் நிதியுதவி, வழிகாட்டுதல் மற்றும் சந்தைக்கான அணுகலை வழங்க முடியும். இது ஏனைய வர்க்கத்தினரின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் உதவும். உயர்வகுப்பினர் கிராமப்புற மேம்பாடு, திறன் மேம்பாடு மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு போன்ற சமூக மேம்பாட்டுத் திட்டங்களில் தீவிரமாக பங்கேற்கலாம். தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி அரசாங்கத்திடமிருந்து தேவையான உதவிகளையும் வளங்களையும் பெற்றுத்தர முடியும். மேலும் தங்கள் வணிகங்களில் நியாயமான ஊதியம், சிறந்த பணிச்சூழல் மற்றும் சமமான வாய்ப்புகள் போன்ற நீதியான வணிக நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம், அனைத்து ஊழியர்களும் கண்ணியமான வாழ்க்கையை வாழ முடியும்.

மேலும், உயர்சமூக வகுப்புகளின் செல்வாக்கை பாடசாலையில் இழிவளவாக்கினால் ஆசிரிய மாணவர்களிடம் தாழ்வுச்சிக்கல் ஏற்படாது. சமூக அந்தஸ்து சமூக வகுப்புகளைக் கருத்திற்கொள்ளாது அனைவருக்கும் சம சந்தர்ப்பம் வழங்கி கற்றல் கற்பித்தல் செயன்முறையை முன்னெடுத்துச் செல்ல ஆசிரியர்கள் முயற்சிக்க வேண்டும்.

இதற்கமைவாக உயர் சமூக வகுப்பின் நிலை ஏனைய வகுப்புப் பிள்ளைகளின் கல்வியைத் தீர்மானிக்கின்றது. இதனடிப்படையில், உயர்வகுப்பினர் சமூகத்தில் ஒரு முக்கியமான பங்கை வகிக்கின்றனர். அவர்கள் தங்கள் தனித்துவமான வளங்கள் மற்றும் செல்வாக்கைப் பயன்படுத்தி ஏனைய வர்க்கத்தினருக்கு கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் தொழில் மேம்பாடு போன்ற பல்வேறு வாய்ப்புகளை வழங்க முடியும். இது சமூகத்தில் சமத்துவத்தை அதிகரிக்கவும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும் உதவும்.

இருப்பினும், இந்த வாய்ப்புகள் தானாகவே உருவாகாது. உயர்வகுப்பினர் சமூகப்பொறுப்புணர்வுடன் செயற்படவும் ஏனைய வர்க்கத்தினரின் தேவைகளைப் புரிந்துகொள்ளவும் வேண்டும். வெளிப்படைத்தன்மை, நீதியான நடைமுறைகள் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற கொள்கைகளை அவர்கள் பின்பற்றினால், ஒரு வளமான மற்றும் சமத்துவமான சமூகத்தை உருவாக்க முடியும்.

மேலும், இந்த வாய்ப்புகளைப் பெறுபவர்களும் தங்களது திறமைகளை வளர்த்துக்கொள்வதிலும் கடினமாக உழைப்பதிலும் கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்வதிலும் முனைப்புடன் இருக்கவேண்டும். பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் நம்பிக்கையின் மூலம் மட்டுமே ஒரு சிறந்த சமூகத்தை நாம் கட்டியெழுப்ப முடியும். உயர்வகுப்பினர் வெறும் வாய்ப்புகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், ஏனைய வர்க்கத்தினரின் திறமைகளையும் பங்களிப்புகளையும் மதித்து அங்கீகரிக்க வேண்டும். இது ஓர் ஆரோக்கியமான மற்றும் முன்னேற்றகரமான சமூகத்துக்கு வழிவகுக்கும்.

**ஆனந்தகுமார் கவிப்பிரியா,**
**நான்காம் வருட கல்வியியல்**
**சிறப்புக்கற்கை நெறி**
**மாணவி,**
**கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை,**
**கலை கலாசாரபீடம்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம்,**





கம்பளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பங்குனி உத்தர மஹோற்சவ வருடாந்த தேர்த் திருவிழா வெள்ளிக்கிழமை (11) இடம்பெற்றது. இதன்போது மகாவலி கங்கையிலிருந்து தீர்த்த நீர் எடுத்துவரப்பட்டது. இங்கு சிறுமிகளின் முளைபாலிகை ஊர்வலத்தையும் அம்பாள் வெளிவீதி உலா வருவதையும் பக்தர்கள் வடம் இழுப்பதையும் காணலாம் . (படங்கள் அருணாசலம் லெட்சுமணன், ரா.சேகர்)

# காட்மோர் பிரதான வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(மஸ்கெலியா நிருபர்)



மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட காட்மோர் பிரதான வீதி நீண்ட நாட்களாக புனரமைக்கப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் இவ்வீதியூடாக போக்குவரத்துச் செய்வதில் மக்கள் பலத்த அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துவருவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதியானது கடந்த 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நல்லாட்சி அரசாங்கத்தில் மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு அமைச்சராக விருந்த பழனி திகாம்பரத்தின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டில் மல்லியப்பூ சந்தியிலிருந்து காட்மோர் சந்தி வரை செப்பனிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு மல்லியப்பூ சந்தியிலிருந்து மோக்கா தமிழ் வித்தியாலயம் வரையான மூன்று கிலோமீற்றர் தூரத்தை வீதி அபிவிருத்தி அதிகார சபையும் முழுமையாகச் செய்து முடித்துள்ளது.

மோக்கா பாடசாலை முதல் காட்மோர் சந்தி வரையான மூன்று கிலோமீற்றர் தூரத்தை பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியம் பொறுப்பேற்று மோக்கா தோட்டக் காரியாலயம் வரை மட்டும் செப்பனிட்டு மிகுதியான 1.5 கிலோ மீற்றர் தூரமான வீதி செப்பனிடப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது.

இதனால் இவ்வீதியூடாக பயணம் செய்யும் மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இதேவேளை, காட்மோர் பகுதியில் பிரசித்தி பெற்று விளங்கும் நீர் வீழ்ச்சியைப் பார்வையிடுவதற்கு சுற்றுலாப் பயணிகள் தினமும் வருகை தருகின்றனர்.

அவ்வாறு வருகை தரும் உல்லாசப் பயணிகள் தமது சொகுசு வாகனங்களை இடைநடுவில் நிறுத்தி வைத்துவிட்டு நடந்து செல்ல வேண்டியுள்ளதாகவும் அவ்வாறு நிறுத்திவைக்கப்படும் வாகனத்தில் உள்ள சில முக்கிய பொருட்கள் களவாடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நோயாளிகளை வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்ல குறித்த இடத்துக்கு வரும் 1990 நோயாளர் காவு வண்டி இடையில் நிறுத்தி வைக்கப்பட்டு அவ்விடத்துக்கு நோயாளர்களைச் சுமந்து செல்ல வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளதாகவும் இப்பகுதி மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனவே, இது குறித்த சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள் கவனம் செலுத்தி வீதியை புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# வாகன விபத்தில் இருவர் உயிரிழப்பு

## குருநாகலில் சம்பவம்

(ஜே.எம்.ஹாபீஸ்)

குருநாகல்- தம்புள்ளை பிரதான வீதி குருநாகல் வடக்கு பஸ் டிப்போவுக்கு முன்னால் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்ததாகவும் நால்வர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் குருநாகல் பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் (15) இடம்பெற்றுள்ளது.

குருநாகல்- தம்புள்ளை பிரதான வீதி குருநாகல் வடக்கு பஸ் டிப்போவுக்கு முன்னால் பயணித்த முச்சக்கர வண்டியுடன் எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிளொன்றும் கெப்ரக வாகனமொன்றும் மோதியதாலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் முச்சக்கர வண்டிச் சாரதியும் பின் ஆசனத்தில் சென்ற இருவரும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநரும் படுகாயமடைந்த நிலையில் குருநாகல் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இந்நிலையில், முச்சக்கர வண்டியில் சென்றவர்களுள் இருவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளனர். 37 மற்றும் 43 வயதுகளையுடைய கல்கிரியாகம பிரதேசத்தைச் சேர்ந்த இருவரே உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# போதைப் பொருட்களை வைத்திருந்தவர் கைது

(ராமு தனராஜா)

பிபிலை, ரதுபஸ்கெடிய பகுதியில் நேற்று முன்தினம் மாலை (15) போதைப்பொருட்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட கத்திகளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டதாக பிபிலை பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபர் 36 வயதுடைய ரதுபஸ்கெடிய ,பிபிலை பகுதியைச் சேர்ந்தவராவார். பிபிலை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய குறித்த சந்தேக நபரின் வீட்டை சோதனைக்குட்படுத்தியுள்ளனர். இதன்போது போதைப்பொருட்கள், தடைசெய்யப்பட்ட கத்திகள் 03 ஆகியன கைப்பற்றப்பட்டதாக பிபிலை பொலிஸார் தெரிவித்தனர். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பிபிலை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# நுவரெலியாவில் வசந்த காலம்; குவியும் சுற்றுலாப் பயணிகள்




(செ.திவாகரன்)

நுவரெலியாவில் 2025ஆம் ஆண்டுக்கான வசந்த கால நிகழ்வுகள் செவ்வாய்க்கிழமை (01) ஆரம்பமாகின.

இதனையடுத்து நுவரெலியாவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்நிலையில், தற்போது பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதால் சித்திரைப் புத்தாண்டு விடுமுறையைக் கழிப்பதற்காக நுவரெலியாவில் உள்ள சுற்றுலாத் தலங்களுக்கு குடும்பம் குடும்பமாக சுற்றுலாப் பயணிகள் படையெடுத்த வண்ணமாக உள்ளனர்.

குறிப்பாக, நுவரெலியா கிரகரி வாவியில் படகுச்சவாரி செய்வதற்கும் மட்டக்குதிரையில் சவாரி செய்வதற்கும் சுற்றுலாப் பயணிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

நுவரெலியா கிரகரி வாவி பகுதியில் அதிக பூக்கள் கொண்டு பூங்கா அலங்கா ரம் உள்ளதையும் இயற்கை அழகையும் ரசித்து வருகின்றனர்.

நுவரெலியா மாநகரசபையினால் இம்மாதம் 30ஆம் திகதி வரை கலை, கலாசார விளையாட்டுப் போட்டிகள் மற்றும் களியாட்ட நிகழ்வுகள் நடத்தப்பட்டுவருகின்றன .

சுற்றுலாப் பயணிகளின் வருகையால் நுவரெலியா - பதுளை, நுவரெலியா - கண்டி, நுவரெலியா - ஹட்டன் போன்ற பிரதான வீதிகளிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

இதனால் பிரதான நுழைவாயிலிலும் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக நடமாடும் பகுதிகளிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

# ஒட்டுசுட்டானில் பனை, தென்னைவள கூட்டுறவு சங்க உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் சிக்கல்

## நிலைமைகளை ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொண்டார் ரவிகரன் எம்.பி.

(விஜயரத்தினம் சரவணன்)



முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதில் சிக்கல் நிலையை எதிர்கொள்வதால் குறித்த கூட்டுறவுச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் தொழிலாளர்கள் பெருத்த வாழ்வாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இந்நிலையில், ஒட்டுசுட்டான் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அழைப்பை ஏற்று நேற்று முன்தினம் (15) நிலைமைகளை நேரில் சென்று ஆராய்ந்த வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், ஒட்டுசுட்டான் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில், முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தமது விற்பனை நிலையங்களினூடாக உற்பத்திகளை விற்பனை செய்வதில் பல இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் இதனால் தமது அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அன்றாட வாழ்வாதாரத்துக்கு இடர்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் முறையிட்டுள்ளனர்.

இந்நிலையில் ஒட்டுசுட்டன் - கற்சிலைமடுப் பகுதியில் அமைந்துள்ள பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துக்கு நேரடியாகச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன், ஒட்டுசுட்டான் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளையும் உறுப்பினர்களையும் சந்தித்து கலந்துரையாடி சிக்கல் நிலைமைகள் குறித்துக் கேட்டறிந்து கொண்டார்.

அதனைத் தொடர்ந்து ஒட்டுசுட்டான் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளை, ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு அழைத்துச்சென்ற பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன், ஒட்டுசுட்டான் பிரதேச செயலருடனும் கலந்துரையாடி ஒட்டுசுட்டான் பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தினர் எதிர்நோக்கியுள்ள தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் காணப்படும் பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

# கிளிநொச்சியில் வாக்காளர் அட்டைகள் தபால் திணைக்களத்திடம் கையளிப்பு!

(யாழ். நிருபர்)



கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று பிரதேச சபைகளுக்குமான வாக்காளர் அட்டைகள் தபால் திணைக்களத்திடம் நேற்று கையளிக்கப்பட்டன.

மாவட்டத் தேர்தல் திணைக்களத்தில் வைத்து மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் வே.சிவராசா மாவட்ட பிரதான தபால் அலுவலக உத்தியோகத்தரிடம் கையளித்தார்.

2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் 1,02,387 பேர் வாக்காளிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

# திருவள்ளுவர் மண்டபம் குறித்தான முக்கிய கலந்துரையாடல் யாழில்

(பு.கஜிந்தன்)



இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் கட்டப்பட்டு இந்திய அரசாங்கத்தால் பராமரிப்புச் செய்யப்பட்டு வருகின்ற யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தை யாழ்ப்பாணம் மாநகர சபை எதிர்காலத்தில் இயக்குவது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (15) இடம்பெற்றது.

இதன்போது யாழ். ஆளுநர் தெரிவிக்கையில்,

''யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தின் பராமரிப்புக்குரிய பொறுப்பை இந்திய அரசாங்கம் 5 ஆண்டுகளுக்கு ஏற்றிருந்த நிலையில், அதில் 4 ஆண்டுகள் வரையில் நிறைவு பெற்றுள்ளன. எதிர்காலத்தில் யாழ். மாநகர சபை அதனைக் கொண்டு நடத்துவதற்குரிய ஒழுங்குகளை முன்னெடுக்கும் வகையில் கலந்துரையாடல் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. எவ்வளவு விரைவாக இதனை மாநகர சபையே பொறுப்பேற்று இயக்க முடியுமோ அதற்குரிய ஒழுங்குகள் செய்யப்படவேண்டும்'' - என்றும் வலியுறுத்தினார்.

இந்தியத் துணைத்தூதுவர் கருத்து வெளியிடுகையில்,

''இந்தக் கலாசார மண்டபத்தை இயக்குவதற்கான இணை முகாமைத்துவக் குழுக் கூட்டம் 2023 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தின் பின்னர் நடத்தப்படவில்லை. அது எவ்வளவு விரைவாக இடம்பெறுகின்றதோ அதற்கமைவாகவே ஏனைய நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்க முடியும்.

எதிர்காலத்தில் உள்ளூரை மையப்படுத்தியதாக இணை முகாமைத்துவக் குழுவை உருவாக்குவது சிறப்பாக இருக்கும். அத்துடன், இந்தியத் தூதரகம் ஆலோசனை வழங்கும் ஒரு தரப்பாகவே எதிர்காலத்தில் இருக்கும். அத்துடன், கலாசார மண்டபத்தின் ஒவ்வொரு மாடிக் கட்டிடத் தொகுதிக்குமான பல்வேறு விதமான முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இது சாதகமானதொரு நிலைமை'' - என்றார்.

தற்போது இந்தியத் தூதரக அதிகாரிகளே பராமரித்து வரும் நிலையில் நிர்வாக நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காக யாழ். மாநகர சபையால் அதிகாரிகளை நியமிக்குமாறும் இணை முகாமைத்துவக் குழுக் கூட்டத்தை விரைவாகக் கூட்டுவதற்கு ஏதுவாக மத்திய அரசாங்கத்தின் கலாசார அமைச்சுக்கு உடனடியாகக் கடிதம் அனுப்புமாறும் ஆளுநர் பணித்தார்.

கலாசார மண்டபம் யாழ். மாநகர சபையால் முழுமையாக இயக்கப்பட்ட பின்னர் அதில் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பதென்பது தொடர்பான திட்டமிடல்களை முன்னெடுக்கலாம் என இந்தியத் தூதரக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், இந்தியத் துணைத்தூதுவர் சாய்முரளி, வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் மு.நந்தகோபாலன், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அ.சோதிநாதன், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் - நிதி எஸ்.குகதாஸ், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு, யாழ். மாநகர சபை ஆணையாளர் ச.கிருஷ்னேந்திரன் மற்றும் இந்தியத் தூதரக அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### கிளிநொச்சியில் அரச உத்தியோகத்தரை தாக்கிய

# பொலிஸாரை விசாரணைக்கு அழைத்த மனித உரிமைகள் ஆணைக்குழு

(மு.தமிழ்ச்செல்வன்)

கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பணியாற்றிய சாந்தபுரம் கிராமத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர் ஒருவரை தாக்கிய பொலிஸாரை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகம் விசாரணைக்கு அழைத்துள்ளது.

கிளிநொச்சி, சாந்தபுரத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தரான இளைஞன் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் காரணமின்றி தன்னை தாக்கி கைவிலங்கிட்டதாக முறைப்பாடு செய்திருந்தார்.

குறித்த முறைப்பாட்டின் அடிப்படையில் எதிர்வரும் 21ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்துக்கு சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஆகியோரை விசாரணைக்கு வருமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு அழைப்பாணை விடுத்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி. கனகராஜ் தெரிவித்துள்ளார்.

# தேசிய மக்கள் சக்தியின் மன்னார் பிரசார அலுவலகம் திறந்துவைப்பு

(ஜோசப் நயன்)



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அலுவலகத் திறப்பு நிகழ்வும் பிரசார நடவடிக்கைகளும் நேற்று முன்தினம் (15) மாலை மன்னார் எமில் நகர் மற்றும் பனங்கட்டு கொட்டு பகுதிகளில் இடம்பெற்றன.

தேசிய மக்கள் சக்தியின் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் மன்னார் நகரசபை வேட்பாளர்கள் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களையும் பொதுமக்கள் பாராளுமன்ற உறுப்பினர் கேதீஸ்வரனிடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

www.thamilan.lk
வியாழக்கிழமை, ஏப்ரல் 17, 2025
தமிழன்

# 'தமிழ்' மொழிக்கு நினைவுச் சின்னம்





இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மானின் ஏ.ஆர்.ஆர். (ARR) இம்மர்ஸிவ் என்டர்டெயின்மென்ட் குழு, தமிழ் மொழிக்கான ஒரு பெருமைச் சின்னத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இதன்மூலம் தமிழ் இலக்கியங்களை விளக்கப்படங்களாகவும் இன்னும் பல்வேறு புதிய வடிவங்களிலும் வழங்கவிருக்கிறதென இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் தெரிவித்தார்.

இது குறித்து ஏ.ஆர்.ரஹ்மான் தனது எக்ஸ் பக்கத்தில்,

''தமிழ்' உலகின் செம்மொழிகளில் இன்றும் பரிணமித்து வளரும் மிகத் தொன்மையான மொழியாகும். குறிப்பாக, தமிழ்ச் சங்கங்கள், ஆய்வுகள் மூலம் மொழியை வலுப்படுத்துவதிலும் அதில் திருத்தங்களைச் செய்வதன் மூலம் அதனைச் செறிவாக்குவதிலும் இன்றியமையாத பங்கு வகித்துள்ளன.

இப்படி புதுமை குன்றாத நம் தமிழின் நீட்சியை அர்த்தமுள்ள தொடர்பாடல்கள் மூலம் அடுத்த தலைமுறையினருக்கு நாம் எடுத்துச் செல்லவேண்டும் என்கிற பொறுப்பையே நமக்கு சுட்டிக்காட்டுகிறது.

இந்த அடிப்படையில் ARR இம்மர்ஸிவ் என்டர்டெயின்மென்ட் குழு, தமிழ் மொழிக்கான ஒரு பெருமைச் சின்னத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.தமிழ் இலக்கியங்களை விளக்கப்படங்களாகவும் இன்னும் பல்வேறு புதிய வடிவங்களிலும் வழங்கவிருக்கிறது.

ARR இம்மர்ஸிவ் என்டர்டெயின்மென்ட் குழு இந்த தமிழ் பெருமைச்சின்னத்தை ஒரு டிஜிட்டல் ரெண்டரிங்காக உருவாக்கவுள்ளது. எதிர்காலத்தில் இப்பெருமைச் சின்னத்துக்கென ஒரு கட்டிடமும் வரக்கூடும். இது குறித்து மேலும் தகவல்களை வெளியிடவிருக்கிறோம். இம்முயற்சி தமிழர்களாகிய நம் அனைவருக்கும் உற்சாகமளிக்கும் என்று நம்புகிறேன். தமிழால் மகிழ்வோம்'' - இவ்வாறு ஏ.ஆர்.ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

# திறப்புக்குத் தயாராகும் 2050 அடி உயர சீன பாலம்



உலகின் மிகவும் உயரத்தில் கட்டப்பட்ட பாலம் என்ற பெருமையைக்கொண்ட - சீனாவில் 2050 அடி உயரத்தில் கட்டப்பட்டுள்ள ஹூவாஜியாங் கிராண்ட் கேன்யன் பாலம் விரைவில் திறக்கப்படவுள்ளது.

பொறியியல் கலையின் மாஸ்டர் பீஸ் என்று வர்ணிக்கப்படும் இந்தப் பாலம் உட்கட்டுமானத்தில் சீனாவின் அசுர வளர்ச்சியையும் பறைசாற்றுகிறது.

மூன்று ஆண்டுகளில் இந்தப் பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதன் ஸ்டீல் கட்டுமானம் சுமார் 22 ஆயிரம் மெட்ரிக் தொன்கள் எடை கொண்டுள்ளது. இதன் மொத்தச் செலவு ரூ. 2 ஆயிரத்து 200 கோடி (இந்திய ரூபாபடி) என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

இப்பாலம் அமைக்கப்பட்டதால் அப்பகுதியில் ஒருமணி நேரம் செல்ல வேண்டிய தூரத்தை ஒரு நிமிடத்தில் சென்றடையலாம். இப்பாலத்தை மிகப்பெரிய சுற்றுலா மையமாக மாற்றவும் சீனா திட்டமிட்டுள்ளது.

# காஸா மீது இஸ்ரேல் தாக்குதல்: 51,000 பலஸ்தீனர்கள் பலி!



இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கிடையிலான போர் ஓராண்டைக் கடந்தும் நீடித்துவரும் நிலையில், காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதல்களில் உயிரிழந்த பலஸ்தீனர்களின் எண்ணிக்கை 51,000ஐ கடந்துள்ளதுடன், 116,343இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக காஸா சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


இந்நிலையில், நேற்று (16) 24 மணிநேரத்தில், இஸ்ரேல் நடத்திய பீரங்கித் தாக்குதலில் பலஸ்தீனர்கள் 23இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

ஹமாஸ் அமைப்பினர் 10 பணயக் கைதிகளை விடுவித்தால் 45 நாட்களுக்குப் போரை நிறுத்தி, நிவாரணப் பொருட்களை காஸாவுக்குள் அனுமதிக்க இஸ்ரேல் சம்மதம் தெரிவித்திருந்தது. அதனைப் பரிசீலிக்க ஹமாஸ் தரப்பில் 48 மணிநேரம் அவகாசம் கோரப்பட்டுள்ளது.

# டிஷ்யூ பேப்பரில் இராஜிநாமா கடிதம்

## அதிர்ச்சியில் ஆழ்த்திய சிங்கப்பூர் ஊழியர்!






அலுவலகத்தில் வேலைசெய்த ஊழியரொருவர் தனது இராஜிநாமாக் கடிதத்தை டிஷ்யூ பேப்பரில் எழுதிக் கொடுத்துள்ளார். அதில் தன்னை அலுவலகம் எப்படி நடத்தியது என்பதைக் காட்டுவதற்காகவே டிஷ்யூ பேப்பரில் எழுதி கொடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தவகையில் இணையத்தில் வைரலாகிவரும் அந்த இராஜிநாமா கடிதத்தில், "நான் தேவைப்படும்போது பயன்படுத்தப்படும் கழிப்பறை காகிதத்தைப்போல உணர்ந்தேன். எந்தவொரு இரண்டாம்பட்ச சிந்தனையைக்கூட இல்லாமல் தூக்கி எறியப்பட்டேன்" எனக் கவலையுடன் பதிவிட்டுள்ளார். மேலும், "இந்த நிறுவனம் என்னை எவ்வாறு நடத்தியது என்பதற்கான அடையாளமாகத்தான், இந்த வகையான காகிதத்தை எனது இராஜிநாமாக் கடிதத்தை எழுத தெரிவுசெய்துள்ளேன்" என்று எழுதப்பட்டிருந்தது. இது தொடர்பான பதிவு சமூக வலைத்தளத்தில் வேகமாக பகிரப்பட்டு வருகிறது. அந்த ஊழியருக்கு ஆதரவாக நெட்டிசன்கள் குரல் கொடுத்து வருகின்றன.

இந்த இராஜிநாமாக் கடிதம் இணையத்தில் வைரலாகப் பரவிவரும் நிலையில், ஆஞ்சிலா யோஹ் என்ற பெண் தொழிலதிபர் இந்தப் பதிவை linkedin தளத்தில் பகிர்ந்து, ''ஊழியர்களை மரியாதையோடு நடத்தவேண்டும். உங்கள் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களை நல்ல செயல்களுக்காக பாராட்ட வேண்டும். அவர்கள் நிறுவனத்தை விட்டு வெளியேற முடிவு செய்தாலும் கூட, மனக்கசப்புடன் வெளியே செல்லக் கூடாது, நன்றி உணர்வுடன் வெளியேற வேண்டும். பாராட்டு என்பது ஒருவரை தக்கவைத்துக்கொள்வதற்கான ஒரு கருவி மட்டுமல்ல ஒரு நபர் எவ்வளவு மதிக்கப்படுகிறார் என்பதற்கான பிரதிபலிப்பு, அடையாளம். ஒருவரை பாராட்டுவதில் சிறிய தடுமாற்றம் ஏற்பட்டால் கூட, அது அவருக்குப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது" எனப் பதிவிட்டுள்ளார்.

# தீவிரமடையும் வரி யுத்தம்: சீனாவுக்கான வரியை 245% அதிகரித்த அமெரிக்கா

## உலகளவில் பெரும் தாக்கம் ஏற்பட வாய்ப்பு



அமெரிக்கா மற்றும் சீனாவுக்கிடையே வர்த்தகப் போர் தீவிரமடைந்துவரும் நிலையில், சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீதான வரியை 245 சதவீதமாக அமெரிக்கா உயர்த்தியுள்ளது. 145 சதவீதமாக இருந்த வரி தற்போது மேலும் 100 சதவீதம் உயர்த்தப்பட்டு 245 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதனால், உலகளவில் பெரும் தாக்கம் ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்காவின் இந்த அறிவிப்புக்கு சீனாவும் நிச்சயம் பதிலடி கொடுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் ''வரிப் பிரச்சினையில் இனி சீனாதான் பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும். அவர்களிடம்தான் முடிவு இருக்கிறது" - என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்றதுமுதல் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அதன்படி, அமெரிக்கப் பொருட்கள் மீது பல்வேறு நாடுகள் அதிக வரி விதிப்பதாகவும் அதற்குப் பதிலடியாக அந்தந்த நாடுகளிலிருந்து அமெரிக்கா இறக்குமதிசெய்யும் பொருட்களுக்கு கூடுதல் வரி விதிக்கப்படுமென்றும் அவர் அறிவித்தார்.

இலங்கை, இந்தியா, சீனா, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட பல்வேறு நாடுகள் மீது வரிவிதித்தார். பரஸ்பர வரி பட்டியலை கடந்த 02ஆம் திகதி வெளியிட்டார் ட்ரம்ப். இதில் சீனப் பொருட்களுக்கான வரி 34% ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இதற்குப் பதிலடியாக அமெரிக்காவின் அனைத்து பொருட்களுக்கும் 34% வரி விதிக்கப்படுமென சீனா அறிவித்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்கா, சீனாவின் கூடுதல் வரி விதிப்புக்கு அபராதமாக 50% வரியை விதித்தது. இதனால் சீனப் பொருட்களின் மீதான வரி 104% ஆனது. இவ்விரு நாடுகளுக்கிடையிலான வரி யுத்தம் தீவிரமடைந்த நிலையில், அமெரிக்கப் பொருட்களுக்கான வரி 84% ஆக உயர்த்தப்படுமென சீன நிதியமைச்சு அறிவித்தது.

இந்நிலையில், உலக நாடுகளின் பொருட்கள் மீதான பரஸ்பர வரி விதிப்பை 90 நாட்களுக்கு நிறுத்திவைத்தார் ட்ரம்ப். எனினும், இது சீனாவுக்குப் பொருந்தாது என்று தெரிவித்தார். மேலும் சீனாவுக்கான பரஸ்பர வரியை மட்டும் ட்ரம்ப் 125 சதவீதமாக அதிகரித்தார்.

இந்தக் கெடுபிடிகளுக்கு சீனா சற்றும் பணியாத சூழலில், சீனப் பொருட்கள் மீதான வரி 145% ஆக அதிகரிப்பதாக அமெரிக்காவின் வெள்ளை மாளிகை அறிவித்தது. சீனாவிலிருந்து இறக்குமதிசெய்யப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் 145 சதவீத வரியும் அமெரிக்கா-மெக்சிகோ-கனடா ஒப்பந்தத்தின்கீழ் வராத அலுமினியம், ஆட்டோமொபைல்கள் மற்றும் கனடா மற்றும் மெக்சிகோவிலிருந்து வரும் பொருட்களுக்கு 25 சதவீத வரியும் ஏனைய அனைத்து இறக்குமதி பொருட்களுக்கு 10 சதவீத வரியும் விதிக்கப்படுவதாக வெள்ளை மாளிகை தெரிவித்தது.


அதன்படி, சீனாவிலிருந்து அமெரிக்கா இறக்குமதிசெய்யும் பொருட்களுக்கு அதிரடி வரி உயர்வை ட்ரம்ப் அறிவித்தார். இதற்கு சீனாவும் தக்க ரீதியில் பதிலடி கொடுத்து வருகிறது. இதனால் இருநாடுகளுக்கும் இடையே வர்த்தகப்போர் ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் சீனாவிலிருந்து இறக்குமதிசெய்யப்படும் பொருட்களுக்கு 145 சதவீத வரி விதிப்பை ட்ரம்ப் அறிவித்தார். இந்த நடவடிக்கைக்குப் பதிலடியாக அமெரிக்காவிலிருந்து இறக்குமதிசெய்யப்படும் பொருட்களுக்கு விதிக்கப்படும் கூடுதல் வரியை 125 சதவீதமாக சீனா உயர்த்தியது.

மேலும், அமெரிக்க விமான தயாரிப்பு நிறுவனமான போயிங்கிடமிருந்து விமானங்கள் வாங்க தங்கள் நாட்டு விமான நிறுவனங்களுக்கு சீனா தடை விதித்தது. மேலும், விமானம் தொடர்பான எந்தக் கருவிகளையும் அமெரிக்காவிடமிருந்து வாங்க வேண்டாம் எனவும் உள்நாட்டு விமான நிறுவனங்களுக்கு சீனா உத்தரவிட்டுள்ளது. இதனால், அமெரிக்கா - சீனா இடையேயான வர்த்தகப்போர் தீவிரமடைந்தது.

இந்நிலையில், வரிப் பிரச்சினையில் இனி சீனாதான் பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும். அவர்களிடம்தான் முடிவு இருக்கிறது என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

மேலும், வெள்ளை மாளிகையின் ஊடகச் செயலாளர் கரோலின் லீவிட் தெரிவிக்கையில்,

"சீனாவிடம்தான் முடிவு எடுக்கவேண்டிய பொறுப்புள்ளது. அவர்கள்தான் எங்களுடன் பேச்சுவார்த்தைக்கு வர வேண்டுமே தவிர, நாங்கள் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டிய அவசியமில்லை. எல்லா நாடுகளுக்கும் வரி விதித்ததைப்போலவே சீனாவுக்கும் வரி விதித்துள்ளோம். சீனா எங்களின் பணத்தை எடுத்துக்கொள்ள முற்படுகிறது. அதனால் அவர்களுக்கு கூடுதல் வரியை விதித்துள்ளோம்" - எனத் தெரிவித்துள்ளார்.



*2025 ஜனவரி முதல் மார்ச் வரையான காலாண்டில் சீனப் பொருளாதாரம் 5.4 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. மார்ச்சில் சீனாவில் ஆலைப் பொருட்களின் உற்பத்தி 7.7 சதவீதம் அதிகரித்துள்ளதாக சீனாவின் தேசிய புள்ளியியல்துறை தெரிவித்துள்ளது. சில்லறை விற்பனையும் சீனாவில் 5.9 சதவீதம் வளர்ச்சி பெற்றுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.*

# பயங்கரவாதிகள் தாக்குதல்: நைஜீரியாவில் 51 பேர் பலி



நைஜீரியாவில் பழங்குடியினத்தைச் சேர்ந்த பயங்கரவாதக் குழு நடத்திய கொடூரத் தாக்குதலில் 51 பேர் பலியாகினர்.

நைஜீரியாவின் வடமேற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் புலானி என்ற முஸ்லிம் பழங்குடியின குழு, அரசு மற்றும் கிறிஸ்தவர்களுக்கு எதிராக ஆயுதமேந்தி போராடி வருகின்றது. இவர்கள் அந்நாட்டிலுள்ள மற்றொரு பயங்கரவாதக் குழுவான போகோ ஹரமிலிருந்து (Boko Haram) வேறுபட்டவர்கள். போகோ ஹரம் மேற்கத்தேய கல்விக்கு எதிராகவும் இஸ்லாமிய சட்டத்தை அமுல்படுத்தவும் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

இந்நிலையில், திங்கட்கிழமை (14) பிளாட்டோ மாகாணத்தில் ஜிக்கே கிறிஸ்தவ பண்ணைக் குழுவினர் இருந்த பகுதிக்குள் புலானி குழுவினர் துப்பாக்கிகளுடன் நுழைந்து கண்மூடித்தனமாகச் சுட்டனர். இதில் எட்டு குடும்பங்களைச் சேர்ந்த, 51 பேர் உயிரிழந்தனர். 16 பேர் படுகாயமடைந்தனர்.

அதன் பின், அப்பகுதியிலிருந்த வீடுகளுக்குள் நுழைந்து கொள்ளையடித்துவிட்டு, இந்தக் கும்பல் தப்பிச் சென்றுள்ளது. இந்தக் கொடூரச் செயலில் ஈடுபட்ட நபர்களை உடனே கண்டுபிடித்து தண்டிக்க ஜனாதிபதி போலா தினுபு பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

# கல்வி சமூகமயமாக்கலில் தனியார் பாடசாலைகளின் இணைப்பாடவிதான செயற்பாடுகள்

இன்றைய காலகட்டங்களில் சமூகமயமாக்கல் என்பது முக்கியமான ஆய்வுப்பொருளாகவும் அதன் செயற்பாடுகள் தொடர்ச்சியாக சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் இடம்பெற்ற வண்ணமே உள்ளன. இதனடிப்படையில் சமூகமயமாக்கலில் முக்கியமான சமூகமயமாக்கல் முகவராக தனியார் பாடசாலைகள் காணப்படுகின்றன. அந்த வகையில், தனியார் பாடசாலை என்பது தனியார் அமைப்பின் மூலம் நிர்வகிக்கப்படும் பாடசாலைகள் ஆகும். இத்தகைய பாடசாலைகள் பொதுவாக அரச நிலையான நிதியுதவியின்றி தனியார் சொந்தமாக செயற்படும் பாடசாலைகளாகக் காணப்படுகின்றன.

கல்வியமைச்சினால் வெளியிடப்பட்ட வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் 2019ஆம் ஆண்டு கல்வி முறைமை தொடர்பான புள்ளி விபரங்களின் சுருக்கம்(2018) இல் தனியார் பாடசாலைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதில் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் எண்ணிக்கை 80 எனவும் தனியார் பாடசாலைகள் மற்றும் விசேட பாடசாலைகளின் மாணவர் எண்ணிக்கை 1,39,581 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது வரையிலும் நாட்டினுள் செயற்படும் மொத்த அரச அனுமதி பெற்ற 80 தனியார் பாடசாலைகளில் 48 பாடசாலைகளும் மற்றும் அவற்றின் கிளை பாடசாலைகள் 10 இல் 09 பாடசாலைகளில் ஆசிரியர் சம்பளத்துக்காக அரசாங்கத்திடம் நிவாரணம் பெற்றுக்கொள்ளும் பாடசாலைகளாக உள்ளதுடன், எஞ்சிய 32 பாடசாலைகள் மற்றும் கிளை பாடசாலைகள் என்பன ஆசிரியர் சம்பள நிவாரணம் பெற்றுக்கொள்ளாத பாடசாலைகளாகும். அரசின் நிவாரணம் பெற்றுக்கொள்ளும் பாடசாலைகளுக்கு ஆசிரியர் சம்பளம், பாடப்புத்தகங்கள், சீருடை மற்றும் வேறு வசதிகள் அரசாங்கத்தால் வழங்கப்படுமெனக் கூறப்பட்டுள்ளது. (தேசிய கணக்காய்வு அலுவலகம், 2020)

தனியார் பாடசாலைகள் சமூகமயமாக்கல் நிறுவனமாகவும் தொழிற்படுகின்றன. இத்தனியார் பாடசாலைகள் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தாலும் அதனோடு இணைந்து மாணவர்களை சமூகமயமாக்கல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் மிக முக்கிய பங்காற்றுகின்றன என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இப்பாடசாலைகளில் இணைப்பாடவிதான செயற்பாடுகள் என்ற வரையறைக்குள் பாடசாலைக் கலைத்திட்டத்தில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளைத் தவிர்த்த அனைத்து செயற்பாடுகளும் உள்ளடங்குகின்றன.

தனியார் பாடசாலைகளில் மிக முக்கியமான இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஒன்றான விளையாட்டுப் போட்டிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

பாடசாலைகளில் இணைப்பாட விதான செயற்பாடுகளில் ஒன்றான விளையாட்டுத் தொடர்பாக கிங்ஸ் பேக் ஹான்பீக் 2007 ஆம் ஆண்டு கூறிய கருத்தின் படி ஒவ்வொரு குழந்தையும் அதன் முழுத்திறனையும் அடைதல் முக்கியம் என்றுள்ளார். பெற்றோர்களிடம் காணப்படும் அறியாமையை நீக்கி அவர்களை மாணவனின் திறனை வளர்ப்பதற்குரிய அனைத்து செயற்பாடுகளிலும் ஈடுபட வைக்க பாடசாலை துணைபுரிய வேண்டும்.

ஒரு சமூகத்தின் முழு மனிதனாக வாழும் தகுதியை விளையாட்டு சமூகமயமாக்கல் பெற்றுத் தருகின்றது என்பதை பெற்றோர் மத்தியில் நிரூபிக்க வேண்டும்.

கார்டன் என்பவர் 2013 ஆம் ஆண்டு கூறிய கருத்தின் படி ஒவ்வொரு குழந்தைகளுக்கும் விளையாட உரிமை உண்டு என்று கூறியுள்ளார்.

இதனடிப்படையில் குறிப்பாக, தனியார் பாடசாலைகளில் Cricket, Basketball, Volleyball, Chess, Swimming மற்றும் அதனோடு ஏனைய விளையாட்டுகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இவ்விளையாட்டுகளை மாணவனானவன் குறித்த பாடசாலை சமூகத்துக்குள் மட்டுமல்லாமல், வலய மட்டம், மாகாணமட்டம், தேசிய மட்டம் என வெளி யிடங்களிலும் வெளி மாவட்டங்களிலும் சென்று விளையாடுவதற்கும் அத்தோடு வெளிநாடுகளில் சென்று மாணவர்களின் திறமைகளை வெளிக்காட்டுவதற்கும் சமூகமயமாக்கல் செயற்பாட்டுக்கும் தனியார் பாடசாலைகள் பல்வேறு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றன.

இவ்வாறான தனியார் பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகளால் மாணவர்களிடையே சமூகமயமாக்கல் பண்புகள் வளர்வதோடு இயல்பாகவே சமூகமயமாக்கலுக்கும் மாணவர்களை இட்டுச் செல்கின்றது. அதனை நோக்குவோம்.

தனியார் பாடசாலைகளில் இடம்பெறும் விளையாட்டுப் போட்டிகளினால் பிள்ளையிடம் நற்பண்புகள் வளர்கின்றன. அத்தோடு, மாணவர்கள் எதிர்காலத்தில் வாழ்க்கையில் வரும் தோல்விகளைத் தாங்கிக்கொள்வதற்கும் தற்கொலை போன்ற விடயங்களில் ஈடுபடாமல் இருப்பதற்கும் மேலும் குற்றச் செயல்களான கொலை, மதுபாவனை போன்றவற்றில் ஈடுபடாமல் இருப்பதற்கும் தனியார் பாடசாலைகளில் விளையாட்டுச் செயற்பாடுகள் பெரும் பங்காற்றுகின்றன.

மேலும் மாணவர்கள் கோட்ட, வலய, மாகாண, தேசிய ரீதியில் விளையாட்டுப் போட்டியில் ஈடுபடும்போது கிணற்றுத்தவளையாக இல்லாமல் சமூக விழிப்பு ஏற்பட்டு சமூகமயமாக்கல் செயற்பாடு மாணவர்களிடையே தோற்றம் பெறுகின்றது. அத்துடன், ஏனைய மாணவர்களின் திறமைகளுடன் ஒப்பிடும்போது தான் எந்த நிலையில் உள்ளேன் என்பதையும் தனக்குள் இன்னும் எவற்றை வளர்க்க வேண்டுமென்றும் அறிவதுடன் மத, இன, சாதி பேதங்களை மதிக்கும் தன்மையும் நட்புறவுடன் செயற்படும் ஆற்றலும் மாணவர்களிடையே வளர்த்தெடுக்கப்படுகின்றன.

மேலும், தனியார் பாடசாலைகள் போட்டிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன. குறிப்பாக, தனியார் பாடசாலைகள் ஆங்கிலக் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதனால் அது சார்ந்த போட்டிகளுக்கு மாணவர்களை அதிகம் ஈடுபடுத்தும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இதன் மூலம் மாணவர்கள் வெளி சமூகத்துடன் போட்டிபோட்டு செயற்படுவதோடு மட்டுமல்லாமல், சமூகத்தில் பிற பாடசாலை மாணவர்களுடன் சேர்ந்து பழகும் வாய்ப்புகளையும் நட்புறவுகளை வளர்த்துக் கொள்ளவும் தோல்வியை ஏற்றுக்கொண்டு வெற்றி பெற்றவர்களைப் பாராட்டும் பண்புகளும் மாணவர்களிடம் வளர்க்கப்படுகின்றன. அத்தோடு, எதிர்கால வேலைத்திட்டங்களாக உலகுக்கு மாணவர்களைத் தயார்படுத்துவதற்காகவும் தனியார் பாடசாலைகளில் பல்வேறு செயற்பாடுகள் காணப்படுகின்றன.

மேலும் தனியார் பாடசாலைகளில் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மிக முக்கியமான ஒன்றாக பயிற்சிப் பாசறை நடத்துதல் இடம்பெறுகின்றது. இதில் அனைத்து மாணவர்களும் இணைந்து கொள்கின்றனர். இதன் மூலம் மாணவர்களிடம் தலைமைத்துவப் பண்பு வளர்க்கப்படுவதுடன் வாழ்வில் ஒரு செயலைப் பொறுப்பெடுத்து சரியாகத் திட்டமிட்டு நடத்துதல், அதன்போது வரும் முரண்பாடுகளைத் தீர்த்தல், எந்த விடயத்தையும் துணிந்து செய்ய முற்படுதல், பிறரை தன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருத்தல், சமூக சேவைகளில் ஈடுபடுதல் என பல்வேறு சமூகமயமாக்கல் பண்புகள் மாணவர்களிடையே வளர்க்கப்படுவதோடு மாணவர்கள் சமூகமயமாக்கலுக்கும் இச்செயற்பாடுகள் மூலம் உட்படுகின்றனர்.

அத்துடன், தனியார் பாடசாலைகளில் கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளோடு மாணவர்கள் தங்கள் திறமைகளை மேலும் விருத்தி செய்து கொள்வதற்காக அதிகமாக குழுச்செயற்பாடுகள், தனியாள் முன்வைப்புகள், செயற்றிட்டங்கள் போன்றவை வழங்கப்படுகின்றன. இச்செயற்பாடுகளின் மூலம் மாணவர்களிடையே உளவிருத்தி, தன்னம்பிக்கை, தலைமை தாங்கும் பண்பு என்பன வளர்க்கப்பட்டு பிற்காலத்தில் சமூகத்தில் செல்லும் பிள்ளைக்கு அவை முன்மாதிரியாக வாழ்வதற்கும் சமூகமயமாக்கலுக்கும் வித்திடுகின்றது. அத்தோடு, இச்செயற்பாடுகள் மூலம் பயந்து பிறருடன் பேசாமல் ஒதுங்கியிருக்கும் பிள்ளையானது துணிந்து சகஜமாகப் பேசவும் முற்படுகின்றது.

அத்தோடு, தனியார் பாடசாலைகளில் அதிகமாக மாணவர்களை வெளிக்கள செயற்பாடுகளில் ஈடுபட வைப்பதும் மற்றும் சுற்றுலா, களப்பயணங்களில் ஈடுபடுத்தும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம் பிற சமூகங்களோடு மாணவர்கள் பழகும் வாய்ப்பும் மற்றும் பல்வேறு கலாசாரங்களை உணரவும் சூழலுக்கேற்ப இசைவாக்கமடைவது எப்படியென அறிந்துகொள்ளவும் முடிகின்றது. மேலும், எதிர்காலத்தில் சமூகத்துக்குச் செல்லும் பிள்ளை பிறருடன் எவ்வாறு இணைந்து செயற்பாடுகளைச் செய்யவேண்டும், சமூகத்துடன் ஒத்துழைத்து செயற்படுவது எப்படியெனவும் கற்றுக்கொள்கின்றது. அத்தோடு, மாணவர்கள் தங்களுடைய சமூகம் பற்றிய விழிப்புணர்வை உருவாக்க உதவுகின்றது. அதாவது, சமூகத்தின் தற்போதைய நிலைகள் சிக்கல்கள் மற்றும் அவை சமுதாயத்தின் மீது ஏற்படும் பாதிப்புகளைப் புரிந்து கொள்ளும் திறன் போன்றவையும் மாணவர்களை சமூகமயமாக்கலுக்கு வித்திடுகின்றது.

மேலும், தனியார் பாடசாலைகளில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதற்கிணங்க மாணவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அவர்களின் தலைமையில் அந்நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். இதன் மூலம் மாணவர்களிடம் தலைமைத்துவ பண்புகள் வளர்க்கப்படுவதோடு மாணவர்களே காணப்படும் கூச்ச சுபாவம் அற்றுப்போவதுடன் எதிர்காலத்தில் சமூகத்தில் பிறர் முன் ஒரு விடயத்தைப் பயமின்றிக் கூறவும் முன்வந்து செயற்படவும் பின்வாங்கலைத் தவிர்த்துக் கொள்ளவும் முடிகின்றது. இவ்வாறான சமூக மயமாக்கல் செயற்பாடுகளுக்கு தனியார் பாடசாலைகளின் இணைப்பாட விதான செயற்பாடுகள் வித்திடுகின்றன.

மேலும் இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்ற அடிப்படையில் தனியார் பாடசாலைகள் நாளைய தலைவர்களை உருவாக்குகின்றன. அதாவது, இப் பாடசாலைகளில் இணைப்பாட விதான செயற்பாடுகளோடு இணைந்து மாணவர் பாராளுமன்றம், சாரணியர் இயக்கம், மாணவர் மன்றம், மாணவத் தலைவர்கள் என பல்வேறு பொறுப்புகளை வழங்கும் போது தானாகவே நாளைய உலகுக்கு தலைவர்களை உருவாக்கக்கூடிய சூழ்நிலையை தனியார் பாடசாலைகள் அமைத்துக் கொடுக்கின்றன. எனவேதான், நாளைய உலகுக்கு எவ்வாறான சமூகமயப்படுத்தப்பட்ட தலைவர்கள் தேவை என்பதையறிந்து அதற்கேற்ப தனியார் பாடசாலைகள் சமூகத்தை அறிந்த நல்ல தலைவர்களை உருவாக்குகின்றன.

தனியார் பாடசாலைகள் மாணவர்களுக்கு உயர்தரக் கல்வி, திறன்கள் மற்றும் மதிப்புகள் ஆகியவற்றை வழங்குவதோடு மட்டுமல்லாமல், அதனோடு இணைந்து இணைப்பாட விதான செயற்பாடுகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன. இதன் மூலம் மாணவர்கள் சமூகமயமாக்கலுக்கு உட்படுவதுடன் கற்றலில் ஏற்படும் சலிப்புத் தன்மை குறைகின்றது. இதனால் மாணவர்களுக்கு நல்லது எது தீயது எது எனப் பகுத்து தெரிந்துகொள்ளும் அறிவும் வளர்க்கப்படுகின்றது. ஆகவே, இன்றைய நிலையில் தனியார் பாடசாலைகளின் இணைப்பாட விதான செயற்பாடுகள் மாணவர்களை சமூகமயமாக்கலுக்கு உட்படுத்துவதோடு நாட்டுக்கு வேண்டிய நற்பிரஜைகளையும் உருவாக்கின்றன என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**பி.பிரவீனா,**
**4ஆம் வருட கல்வியியல் சிறப்பு கற்கை மாணவி,**
**கல்வி, பிள்ளைநலத் துறை, கிழக்கு பல்கலைக்கழகம்.**

# கலவன் பாடசாலைகளில் கல்வி சமூகமயமாக்கல்

கல்வி இல்லாமல் எந்தச் சமூகமும் முன்னேற முடியாது. ஆனால், பாரம்பரிய கல்வி முறைகள் அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை வழங்க முடியாமல் போகும் போது கலவன் பாடசாலைகளும் கல்விச் சமூகமயமாக்கலும் பெரும் பங்கை வகிக்கின்றன. இவை சமூகத்தில் சமமான கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்தி கல்வியை அனைவருக்கும் கிடைக்கச் செய்கின்றன. குறிப்பாக, ஆண், பெண் இருபாலாருக்கும் சமமான கல்வி வாய்ப்புகளை வழங்குவதோடு ஒரே பாடசாலைகளில் கற்றல் வாய்ப்புகளை வழங்கும் விதத்தில் கலவன் பாடசாலைகள் எழப்பெற்றமையை குறிப்பிடமுடியும்.

கல்விச் சமூகமயமாக்கலில் மாணவர்களை சமூகமயப்படுத்துவதில் இத்தகைய கலவன் பாடசாலைகள் அதிகளவு செல்வாக்குச் செலுத்துகின்றன. சமூக எதிர்பார்ப்புகளுக்கேற்ப பாடசாலைகள் செயற்பட வேண்டும். கலவன் பாடசாலைச் செயற்பாடுகள் சமூகத்தில் உள்ள அனைவருக்கும் பயனளிப்பதுடன் அவர்களின் எதிர்பார்ப்பையும் நிறைவேற்றுகின்றன. இத்தகைய பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் கல்விச் செயற்பாடுகள் அவர்களது வாழ்வை சீர்மையடையச் செய்கின்றமையை குறிப்பிடலாம்.

இத்தகைய கலவன் பாடசாலைகளில் ஆண் மற்றும் பெண் இருபாலின மாணவர்களும் காணப்படுவதால் பாலின பாகுபாடுகளைக் குறைத்து இருபாலாருக்குமிடையே உள்ள சமத்துவத்தை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் பாடசாலைகளில் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் வாயிலாக மாணவர்கள் சக மாணவர்களோடு ஒற்றுமையாகவும் ஒத்துழைப்புடனும் செயற்படுகின்ற தன்மையைக் கூறலாம்.

இத்தகைய கலவன் பாடசாலைகள் மாணவர்கள் சகோதரத்துவம் மற்றும் ஒருமைப்பாட்டைக் கற்பிப்பதற்கு சிறந்த இடங்களாகக் காணப்படுகின்றன. இருபாலினரும் இணைந்து தமது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு கலவன் பாடசாலைகள் அடித்தளமிடுகின்றன. டர்கயிம் என்ற சமூகவியலாளர் கூறுகையில், ''கல்வி நிறுவனம் ஒன்றில் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டியது எதிர்கால பொறுப்புகளின் ஏற்கக்கூடிய விதத்தில் மாணவர்களை சமூகமயமாக்குதல் வேண்டும்''- என்கிறார். அதேபோன்று, கலவன் பாடசாலைகள் ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்து சமத்துவத்தை ஊக்குவிப்பதற்கும் கல்விக்கான சிறந்த அணுகலை வழங்குவதற்கும் கலவன் பாடசாலைகள் ஊக்குவிக்கின்றன என்ற கூற்றை முஸ்தபா 2023ஆம் ஆண்டு தனது கலப்பு பாலின பாடசாலைகள் பற்றிய ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, பண்டைய கிரேக்க தத்துவஞானியான பிளேட்டோ கூறுகையில், ''கூட்டுக்கல்வியானது தோழமை உணர்வை உருவாக்குகின்றது''- என்கின்றார். கல்வி கற்பதில் எந்த ஒரு பாகுபாடும் காட்டாமல் ஆண் மற்றும் பெண் மாணவர்கள் கற்பித்தலை மேற்கொள்வதை அவதானிக்க முடிகின்றது. அவர்கள் ஒரே மாதிரியான இயல்புகள் காணப்படாதுவிடினும் அவர்கள் சமமானவர்கள். அவர்களினுள் எந்தவித பாகுபாடும் இல்லை என்பதைப் புரிந்து கொண்டு செயற்படும் தன்மையை அறிந்து கொள்ள முடியும்.

இங்கு மாணவர்கள் பாடசாலையில் விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது இருபாலாருக்குமிடையில் ஐக்கிய மேம்பாடுடையதாகக் காணப்படுகின்றது. இத்தகைய விளையாட்டு ஏற்பாடுகளின் மூலம் பிள்ளையிடம் நற்பண்புகளை வளர்ப்பதுடன் விட்டுக்கொடுப்பு, தலைமைக்கு கட்டுப்படும் பண்பு, விதிகளைக் கடைப்பிடித்தல், வெற்றி தோல்விகளைச் சமமாக மதிக்கும் தன்மை போன்று சமூகமயமாக்கல் பண்புகள் வளர்க்கப்படுகின்றன. இத்தகைய செயற்பாடுகளின் வாயிலாக இருபாலாரும் நட்புறவுடன் செயற்படும் ஆற்றலும் வளர்க்கப்படுகின்றமையைக் குறிப்பிட முடியும்.

மாணவர்கள் கூட்டுக்கற்றலில் ஈடுபடவும் தங்களின் தனிப்பட்ட திறன்களை வளர்த்துக் கொள்ளவும் வகுப்பறையில் இருபாலாரும் இணைந்து சமூகத்தின் பன்முகத் தன்மையைப் பிரதிபலிக்கும் சமநிலையை ஊக்குவிக்கிறது. ஏனையோருடன் அவர்கள் கலந்தாலோசித்து ஒரு முடிவை எடுக்கும் பட்சத்தில் மாணவர்களுடைய தோழமை உணர்வு கட்டியெழுப்பப்படுகின்றது. ஒரு செயற்பாட்டை இருபாலாரும் முன்னெடுத்துச் செய்யும்பொழுது மாணவர்களிடையே ஏற்படுகின்ற தலைமைத்துவ வளர்ச்சி இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றதென The journal of School leadership என்ற அறிக்கையில் ரோஜர் பேக்கன் 2019 ஆண்டளவில் குறிப்பிட்டுள்ளார்.

இருபாலினரும் ஒன்றாகச் சேர்ந்து கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும்போது ஒரு புதிய பரிணாமம், மரியாதை மற்றும் சகிப்புத்தன்மையின் அடிப்படையில் ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்குவதற்கு ஏதுவாக கலவன் பாடசாலைகள் அமைந்துள்ளன என்பதை ஓக்லெட்ரீ 2004ஆம் ஆண்டு தனது அறிக்கையில் குறிப்பிடுவதைக் குறிப்பிட்டுக் கொள்ள முடியும்.

கலவன் பாடசாலைகள் சமூக தொடர்பு மற்றும் தனிப்பட்ட திறன்களை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்குகின்றன எனலாம். குறிப்பாக, கலவன் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் ஓரின பாலின பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்குமிடையில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. இங்கு கலவன் பாடசாலைகளில் சக நண்பர்களோடு தோழமை உணர்வுடனும் நட்புறவுடனும் செயற்பாடுகளில் இணைந்து தங்களைத் திறம்படுத்திக்கொள்வதற்கு வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன. ஆனால், ஓரின பாடசாலைகளில் ஒத்த பாலினத்தவரோடு இணைந்து செயலாற்றும்போது அங்கு ஒரு சகிப்புத்தன்மையற்ற தன்மையை காண முடியும். தனியான மகளிர் பாடசாலைகள் எனின் ஆண் பிள்ளைகளுடனான புரிந்துணர்வுகள் ஏற்படாத சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. இவ்வாறான மாணவர்கள் பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்து பிறிதொரு கற்றல் சூழலுக்கு உள்நுழைகின்றபோது மாணவர்கள் இடர்பாடுகளை அடைகின்ற சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

இன்று இத்தகைய மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்று உயர்கல்வியை கற்கும் போது எதிர்பாலரிடத்தில் பழகுவதில் கூச்ச சுபாவமுடையவர்களாகக் காணப்படுகின்றனர். இத்தகைய சூழலில் மாணவர்கள் அவர்கள் படித்த பாடசாலைகளை மையப்படுத்திக் கொண்டே அவர்களின் செயற்பாடுகள் இடம்பெறுவதைக் குறிப்பிடலாம். குறிப்பாக, ஓரின பாடசாலைகளில் கல்வி கற்ற பெண் மாணவர்கள் ஆண் மாணவர்களோடு நட்புறவுடனும் ஒரு புரிந்துணர்வுடனும் தோழமை உணர்வுடனும் செயற்படாமைக்கான காரணம் அவர்கள் ஏனைய பாலினத்தவரோடு இணைந்து செயற்பாடுகளை முன்னெடுக்காமையே ஆகும். அதுமட்டுமன்றி, இத்தகைய பிள்ளைகள் புதிதாக கற்றல் சூழலுக்கு உள்வாங்கப்படும் போது பெண்கள் ஆண்களின் கருத்துகளுக்கும் ஆண்கள் பெண்களின் கருத்துகளுக்கும் மதிப்பளிக்காத தன்மை மற்றும் அவர்களின் கருத்துகளுக்கு முரண்படுகின்ற தன்மையை சமூகத்தில் காணமுடிகின்றது.

அத்தோடு, ஏதேனும் குழுச் செயற்பாடுகள் முன்னெடுக்கின்ற வேளையில் மாணவர்கள் ஒன்றாக இணைந்து செயற்படத் தயங்குகின்ற நிலைமையைக் காணலாம். இவ்வாறு ஒன்றாக இணைந்து கல்வி கற்காத சந்தர்ப்பத்திலே மாணவர்கள் பாலின கேலி சுரண்டலுக்கு உள்ளாகின்ற சந்தர்ப்பங்கள் மாணவர்கள் மத்தியில் காணப்படுவதை குறிப்பிட்டுக் கொள்ள முடியும். இதுவே கலவன் பாடசாலைகளில் கல்வி கற்ற ஒரு மாணவன் ஏனைய மாணவர்களுடன் தோழமை உணர்வுடன் பழகி குறித்த பல செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடிய மாணவர்களாகக் காணப்படுவர்.

ஆகவே, இவ்வாறான பல ஆக்கத்திறன்மிக்க செயற்பாடுகளை கலவன் பாடசாலைகளில் செயற்படுத்தும்போது மாணவர்கள் தமது ஆற்றல் மற்றும் திறன்களை வெளிப்படுத்துவதற்கு வழி காட்டுகின்றது. அத்தோடு எந்தவொரு பாகுபாடுமின்றி இருபாலாரும் சமத்துவ தன்மையோடு இயங்குவதைக் குறிப்பிடலாம். கலவன் பாடசாலையும் கல்விச் சமூகமயமாக்கலும் ஒன்றுடன் ஒன்று இணைந்த சமூகத்துக்குத் தேவையான கல்வி நோக்கங்களை உருவாக்கும் முழுமையான திட்டமாக விளங்குவதோடு மாணவர்களை சமூக சேவையாளராகவும் பொறுப்புள்ள நற்பிரஜையாக மாற்றம் செய்வதற்கும் உதவி புரிகின்றன. மாணவர்கள் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டு சமூகத் திறன்களில் தேர்ச்சி பெற்று பயிற்சி பெறுவதற்கும் சிறந்த மனப்பான்மையை கட்டியெழுப்புவதற்கும் கலவன் பாடசாலைகள் இன்றியமையாதவையாகக் காணப்படுவதை குறிப்பிட்டுக் கொள்ள முடியும்.

**ஷதுர்த்திகா ஜெயச்சந்திரன்,**
**நான்காம் ஆண்டு கல்வியியல் சிறப்புக் கற்கை மாணவி,**
**கல்வி, பிள்ளைநலத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.**



# 16 ஆண்டுகளின் பின் நீச்சலில் உலக சாதனை

சுவீடன் நாட்டின் தலைநகரான ஸ்டாக்ஹோமில் நடைபெற்ற ஸ்டொக்ஹோம் ஓபன் நீச்சல் தொடரில் ஆடவருக்கான 400 மீற்றர் ஃப்ரீஸ்டைல் நீச்சல் போட்டியில் ஜேர்மன் வீரர் லுகாஸ் மார்டென்ஸ் 16 ஆண்டுகளின் பின் புதிய உலக சாதனை படைத்தார்.

2024 பாரிஸ் ஒலிம்பிக்கில் 400 மீற்றர் ஃப்ரீஸ்டைல் நீச்சலில் தங்கம் வென்றிருந்த ஒலிம்பிக் சம்பியனான லுகாஸ் மார்டென்ஸ் பந்தய தூரத்தை 3 நிமிடம் 39.96 செக்கன்களில் கடந்து இவ்வாறு உலக சாதனை படைத்தார்.

கடந்த 2009ஆம் ஆண்டு மற்றுமொரு ஜேர்மன் வீரர் போல் பிடர்மேன் நிகழ்த்திய சாதனையை இவர் 0.11 செக்கன்களில் முந்தி இவ்வாறு சாதனை படைத்தார். நீச்சல் வரலாற்றில் அதிக காலமாக போல் பிடர்மேன் 5,741 நாட்கள் இந்த உலக சாதனையை தன்வசம் வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல். வரலாற்றில் 16 வருடங்களின் பின் சாதனை படைத்த பஞ்சாப்

ஐ.பி.எல். வரலாற்றில் 16 வருடங்களின் பின்னர் குறைந்த ஓட்டங்களைக் கட்டுப்படுத்தி வெற்றியீட்டிய அணி என்ற சாதனையை நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் பஞ்சாப் அணி படைத்தது.

நடப்பு ஐ.பி.எல். தொடரின் பரபரப்பான 31வது லீக் போட்டியில், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி பஞ்சாப் கிங்ஸ் அணி சாதனை வெற்றி பெற்றது.

சண்டிகரில் நடைபெற்ற இந்த பரபரப்பான போட்டியில், நாணய சுழற்சியில் வென்ற பஞ்சாப் கிங்ஸ் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. ஆனால் கொல்கத்தா அணியின் துல்லியமான பந்துவீச்சை சமாளிக்க முடியாமல், பஞ்சாப் அணி 15.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 111 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

112 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் களமிறங்கிய கொல்கத்தா அணி 7.4 ஓவர்களில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 62 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது, ஆட்டத்தின் போக்கு முழுமையாக மாறியது. சஹால் வீசிய பந்தில் ரஹானே ஆட்டமிழந்தார். தொடர்ந்து, ரகுவன்ஷியும் சஹால் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். பின்னர் மேக்ஸ்வெல் வீசிய பந்தில் வெங்கடேஷ் ஐயர் வெளியேறினார். அடுத்த ஓவரிலேயே, ரிங்கு சிங் மற்றும் ரமன்தீப் ஆகியோரை சஹால் அடுத்தடுத்த பந்துகளில் வீழ்த்தி கொல்கத்தா அணியை நிலைகுலையச் செய்தார்.

கொல்கத்தா அணி இறுதியில் 15.1 ஓவர்களில் 95 ஓட்டங்களில் சுருண்டு போனது. இந்த போட்டியின் ஆட்டநாயகன் விருதை சஹால் வென்றார். வெற்றியின் மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் குறைந்த ஓட்டங்களை கட்டுப்படுத்தி வெற்றியீட்டிய அணி சாதனையை பஞ்சாப் கிங்ஸ் படைத்தது. இதற்கு முன்பு 2009ஆம் ஆண்டு சென்னை அணி முதலில் துடுப்பெடுத்தாடி 116 ஓட்டங்களை அடித்து வெற்றி பெற்றிருந்ததே சாதனையாக இருந்தது.

இதேவேளை ஐ.பி.எல். வரலாற்றில் அதிக ஓட்டங்களை துரத்தியடித்த அணி என்ற சாதனையும் பஞ்சாப் கிங்ஸ் அணி வசமுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# எல்லே சம்பியனான பாலமுனை ட்ரைஸ்டார் விளையாட்டு கழகம்

**(அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)**

அட்டாளைச்சேனை பிரதேச செயலக எல்லே சுற்றுப் போட்டியில் பாலமுனை ட்ரைஸ்டார் விளையாட்டு கழகம் வெற்றி பெற்று சம்பியனாகி அம்பாறை மாவட்டப் போட்டிக்கு தெரிவாகியது.

பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை விளையாட்டு உத்தியோகத்தர் ஆர்.றம்சான் தலைமையில் அட்டாளைச்சேனை பிரதேச கழகங்களுக்கிடையிலான எல்லே போட்டியின் இறுதிப் போட்டி நடைபெற்றது.

இதில் பாலமுனை அல் - அறபா விளையாட்டுக் கழகத்தினை 7:2 என்ற ஓட்டங்களினால் பாலமுனை ட்ரைஸ்டார் விளையாட்டுக் கழகத்தினர் வெற்றி பெற்று சம்பியனாகி அம்பாறை மாவட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

# சம்பியன் பட்டத்துடன் தரவரிசையில் இரண்டாமிடம் உயர்ந்த அல்காரஸ்



உலக டென்னிஸ் சம்மேளனத்தினால் வெளியிடப்பட்ட புதிய ஆடவர் ஒற்றையர் டென்னிஸ் தரவரிசையில் ஸ்பெயினின் கார்லஸ் அல்காரஸ் இரண்டாமிடத்துக்கு முன்னேறினார்.

அண்மையில் நிறைவடைந்த மொன்டிகார்லோ டென்னிஸ் தொடருக்கு முன் 7720 புள்ளிகளுடன் 3வது இடத்தில் இருந்த கார்லஸ் அல்காரஸ் தொடரில் சம்பியன் பட்டம் வென்றதன் மூலம் இரண்டாவது இடத்தை கைப்பற்றினார்.

குறித்த தொடரில் சம்பியனான அல்காரஸ் தனது 6வது மாஸ்டர்ஸ் பட்டத்தை தட்டிச் சென்றார். இத்தொடரில் இறுதிப்போட்டி வரை சென்ற இத்தாலியின் லாரென்சோ முசெட்டி (3200), 16வது இடத்தில் இருந்து முதன்முறையாக 11வது இடத்துக்கு முன்னேறினார்.

புதிய டென்னிஸ் தரவரிசையின் படி முதலிடத்தை இத்தாலியின் ஜானிக் சின்னர் (9930 புள்ளி) தக்கவைத்துக் கொண்டார். ஜெர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் (7595) 3வது இடத்துக்கு பின்தள்ளப்பட்டார்.


# விளையாட்டுத் துளிகள்



★ 16வது ஐ.சி.சி. இளையோர் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் அடுத்த வருடம் சிம்பாப்வேயில் நடைபெறவுள்ள நிலையில், ஆபிரிக்க பிராந்திய நாடுகளுக்கான தகுதி சுற்றுத் தொடரில் அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்ற தன்சானியா, முதல் முறையாக உலகக்கிண்ணத்துக்கு தகுதி பெற்று வரலாறு படைத்தது. மேலும் குறித்த உலகக்கிண்ணத் தொடருக்கு தகுதி சுற்று மூலம் முன்னேறிய முதல் அணி என்ற சாதனையையும் தன்சானியா படைத்தது.

★ ஜூன் மாத இறுதியில் இந்திய அணியுடன் ஆரம்பமாகவுள்ள டெஸ்ட் தொடரிலிருந்து இங்கிலாந்து வேகப்பந்துவீச்சாளர் ஒல்லி ஸ்டோன் , முழங்கால் காயம் காரணமாக விலகியுள்ளார். கடந்த மாதம் அபுதாபியில் நடந்த நாட்டிங்காம்ஷயர் அணிக்கான பயிற்சி முகாமில் பங்கேற்ற போது இவரது வலது முழங்காலில் காயம் ஏற்பட்டது. இதற்கு சத்திரசிகிச்சை செய்யவுள்ள இவர், குணமடைய 14 வாரம் தேவைப்படும் என்பதால் இவ்வாறு விலகியுள்ளார்.





★ மோட்டோ ஜி.பி. உலக சம்பியன்ஷிப் தொடரின் 4வது கட்டப்போட்டி கட்டாரில் நடைபெறவுள்ளது. 22 கட்டங்களைக் கொண்ட இப்பருவ காலத்துக்கான தொடர் ஆரம்பமாகியுள்ளது. முதல் இரண்டு போட்டிகளின் முடிவில் முன்னாள் சம்பியன் மார்க் மார்க்கஸ் வெற்றிபெற்றிருந்தார். இந்நிலையில் மூன்றாவது கட்டப்போட்டி அமெரிக்காவில் இடம்பெற்றது. இதிலும் மார்க்கஸ் முன்னிலை பெற்றார்.

★ உலகம் முழுவதும் 24 சுற்றுகளாக நடத்தப்படும் பார்முலா-1 கார்பந்தயத்தின் 4வது சுற்றான பஹ்ரைன் கிராண்ட்பிரி அங்குள்ள சாகிர் ஓடுதளத்தில் நடந்தது. 308.240 கிலோ மீட்டர் பந்தய தூரத்தை கொண்ட ஓட்டத்தில் முதல் வரிசையில் இருந்து புறப்பட்ட மெக்லரன் வீரரான ஆஸ்கர் பியாஸ்ட்ரி (ஆஸி.) 1 மணி 35 நிமிடம் 39 வினாடிகளில் இலக்கை கடந்து முதலிடம் பிடித்தார். இதுவரை நடந்துள்ள 4 சுற்றுகள் முடிவில் லான்டோ நோரிஸ் (பிரித்தானியா) 77 புள்ளிகளுடன் முதலிடத்திலும் பியாஸ்ட்ரி 74 புள்ளிகளுடன் 2வது இடத்திலும் உள்ளனர். 5வது சுற்று போட்டி 20ஆம் திகதி சவூதி அரேபியாவில் நடைபெறவுள்ளது.

# ஐ.பி.எல். தொடரிலிருந்து வெளியேறிய ஃபெர்குசன்



பஞ்சாப் கிங்ஸ் அணியின் வேகப்பந்து வீச்சாளரான நியூசிலாந்தைச் சேர்ந்த லோக்கி ஃபெர்குசன் உபாதை காரணமாக ஐ.பி.எல். தொடரிலிருந்து வெளியேறியுள்ளார். சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியுடனான போட்டியின்போது இரு பந்துகள் மட்டுமே வீசிய லோக்கி ஃபெர்குசன் தனது இடது தொடைப் பகுதியில் வலி ஏற்பட்டதால் போட்டியிலிருந்து வெளியேறினார். இந்நிலையில் அவருக்கு மிக மோசமான பாதிப்பு ஏற்பட்டதால் அடுத்தடுத்த போட்டிகளில் விளையாடமாட்டார் என அணியின் பந்துவீத்து பயிற்சியாளர் ஜேம்ஸ் ஹோப்ஸ் தெரிவித்தார். தொடரிலிருந்து அவர் வெளியேறியிருப்பது பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு பின்னடைவாகப் பார்க்கப்படுகின்றது.

இதேவேளை இந்தாண்டு சம்பியன்ஸ் கிண்ண தொடருக்கு முன்னதாக தொடைப்பகுதியில் ஏற்பட்ட உபாதை காரணமாக ஃபெர்குசன் சம்பியன்ஸ் கிண்ணத்தில் விளையாடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## IPL - 2025

**இன்றைய போட்டி**

போட்டி இல. - 33

**ஹைதராபாத் VS மும்பை**

மும்பை - இரவு 7.30 மணி

**முடிவு**

போட்டி இல. - 31

பஞ்சாப் - 111/10 (15.3)

கொல்கத்தா - 95/10 (15.1)

பஞ்சாப் 16 ஓட்டங்களினால் வெற்றி

மாணவர்களின் கல்வி வழிகாட்டியான ஜூனியர் தமிழன் ஏப்ரல் மாத சஞ்சிகைகள்

தற்போது விற்பனையில்...



☑ புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்
☑ வினாத்தாள் I, II வழிகாட்டிகள்
☑ தமிழ், கணிதம், சுற்றாடல் பாட செயலட்டைகள் (தவணைகளின் அடிப்படையில்)
☑ திறன் அடிப்படையிலான நுண்ணறிவு விளக்கங்கள்
☑ தரம் - 5 சுற்றாடல் பாடத்தொகுப்பு - 04, 05
• இசைக்கருவிகளின் சுற்றாடல்
• இரு வினாக்களை அடக்கிய ஒரு வினாக்களின் தொகுப்பு
☑ நுண்ணறிவுத்தொடர் 2 - கட்புலனறிவு
☑ விஞ்ஞான பரிசோதனைகள்
☑ சிங்கள, ஆங்கிலப் பாட பயிற்சிகள்

ஒவ்வொரு சஞ்சிகைக்குள்ளும் இணைக்கப்பட்டுள்ள படத்தாள் ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்.



ரூபா 100/= ரூபா 120/= ரூபா 120/=

☑ மாணவர்களின் சித்திரங்கள்
☑ கதைக்குள் ஒரு கணிதப்புதிர் - 04, குறுக்கெழுத்துப்போட்டி
☑ சிறுவர் திருக்குறள் சிறுகதை

தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களால் தொகுத்து வெளியிடப்படுகிறது

மேலதிக விபரங்களுக்கு : 011 5 200 900 | 074 1684643 | 0777 983308 | Junior Thamilan

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo −07